உ

கடவுள்துணை

மதுரைவீரநாடகம்.

இஃது

திரிசிரபுரத்தைச்சார்ந்த

திருத்தான்தோணியிலிருக்கும்

குட்டி உபாத்தியாயர்

அவர்களால்இயற்றியதை

ஸையூர்

மாதர்பூதீஸ்பார் சுவாமிகளால்.

பரிசோதிப்பித்து

திருச்சிராப்பள்ளி,

சபாபதிபிள்ளை

அவர்களால்தமது

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள்

அச்சுக்கூடத்தில்பதிப்பிக்கப்பட்டது

வி[illegible] ஷ

உ

கணபதிதுணை.

மதுரைவீரநாடகம்.

காப்பு.

விநாயகர் துதி.

பின்முடுகுவெண்பா.

சீர்மேவுந்தென்மதுரை தீரன்முத்துவீரையன்சீர்
பார்மேவுநாட[illegible]ப் பாடவுறை-யூர்மேவும்
விமலப்பரனுமைபெற்ற[illegible] விகடக்கரிமுகனே திருக்
கமலப்பத மிகவைத்துநீகார்.

இதுவுமது-விருத்தம்,

[illegible]னதாசிங்கர்கதிபதியார் துளசேந்திரன்சேயனுனை
வீராதிவீரையன்சீர்நாடகமாய்த்தமிழினுல்விரும்பக்கூற
மேரானவரையிலொற்றை மருப்பொடித்துப்பாரதப்போர்விளைந்துச்சீர்
கார்ரானைமுகத்துக் கற்பகமுன்னிக்கதைக்குக்காப்பதாமே,

விஸ்வநாதர் துதி.

காசினிதன்னிலார்க்குங் கண்கண்டதெய்வமாகி
வாசனைபுனுகுபன்னீர் வகையுள்ளதெல்லாம்பூணுங்
மாசிலாமதுரைவீரன் மகிமைநாடகமாய்க்கூற
கோசிகமுனிபூசித்த குருபரனருள்காப்பாமே,

சரஸ்வதியம்மன் துதி.

சீர்பெறுங்காசிமேவுந் தென்னவளருளால்வந்து
பார்தனிலெவர்க்குநல்ல பாக்கியமருளிச்செய்து
பேர்பெறுமதுரைவீரன் பெருமைநாடகமாய்க்கூற
சீர்தரும்வாணியாள்தன் சேவடிகாப்பதாமே,

அவையடக்கம்.

முன்னுள்ளபெரியோர்சொன்ன முறைமைநாடகத்தைப்பார்த்து
இன்னமுஞ்சிறிதுகாட்டி யியம்பிடவேணுமென்று
என்னையத்தமிழ்பாராட்டி நாடகமாகச்சேர்த்து
சொன்னதையிகழ்ந்திடாமல் நயவல்லோர்பொருப்பதாமே.

இதுவுமது.

சூரியகுலத்துதித்த துளசேந்திரன்தவத்தால்வந்த
வீரையன்சரித்திரத்தை மேதினியோர்கொண்டாட
சீரியதமிழினாலே சிறந்தநாடகமாய்க்கூற
பாரினிற்கவிவல்லோர்கள் பாதமும்பணிந்திட்டானே.

இதுவுமது.

கெருடன்முன்மசகமீட்டாய்க் கிட்டியேபறந்தாற்போலும்
திருமயில்முன்வான்கோழி திருநடம்புரிந்தாற்போலும்
அருமறைதெரிந்தோர்முன்னே யடியனுமுரைத்தேனித்த
பரிவுடனினிதாய்க்கொண்டு பாவலர்பொறுப்பதாமே.

இதுவுமது-தாழிசை.

சீர்மிகுந்துவளர்காசியாளுமக ராஜராஜதுளசேந்திரன்
செய்தவத்தில்வருமெய்தவத்தனற்றேசதேசமதிலெங்கிலும்
பேர்விளங்குமதுராபுரித்துரையின் பெருமைநாடகமதாகவே
பேசவென்றமீனாட்சிசுந்தரகுரு பிரபலன்கழல்வணங்கியே
ஏர்விளம்பியெனும்வருடமைப்பசியி னேழுதேதிகுருவாரநாள்
இன்பமானஅ[illegible]பதிமிலக்கனமு மிடபமாஞ்சுபதினத்திலே
வார்த்தனிற்கவிஞாடிபணிந்துவளர் பாலனுங்குட்டிபாடினன்
பகர்மொழிக்குள்ளதுபிசகிருக்கிலு முன்பழமொழிகுருபொறு [ப்பதே

இதுவுமது-விருத்தம்.

தேசமன்னர்கள்போற்றுந் தென்னவனென்னுங்காசி
ராஜன்றவத்தால்வந்த நவமணிமதுரைவீர
போசனைப்புகழ்த்துபாடும் புனிதன்மீனாட்சிசுந்தர
தாரணுங்குழலான்குட்டி தமிழினூலுரைசெய்தானே.

தோடயம்.

தனன-தனனன-தனன-தனனன-தன்ன-தனனன-தனன-தன்ன

எங்கும்புகழ்பெறுந் துங்கன்பொம்மதுரன்
    ஈன்றநாயகி யாளெனும்
மங்கைபொம்மியை மருவும்வீரையன்
    மகிமைநாடகம்பாடவே ஆ-ஆ

கங்கைச்சடையுடன் களத்துமேந்தியே
    கயிலைக்கடவுளருளிய
துங்கமதகிரி முகமதியிலங்கிய
    தொந்திக்கணபதிகாப்பதாம் ஜெய-ஜெய

மந்திரம்பில்லி யேவல்சூனியம்
    வல்லடிப்பிணிகள்முதலாய்
வந்திடாதருள் மதுரைவீரையன்
    மகிமைநாடகம்பாடவே ஆ-ஆ

தொந்திவயிற்றுட னைந்துகரங்களுந்
    திலக[illegible]நாவிலங்கவே
முந்தியுதித்திடுந் தந்தி[illegible]ஜெய
    மூலக்கணபதிகாப்பதாம் ஜெய-ஜெய

தொட்டியன்படை பட்டுவீழும்படி
    வெட்டிவிருதுபெற்றிலங்கிடும்
கட்டிலடங்காம துரைவீரையன்
    மகிமைநாடகம்பாடவே ஆ-ஆ

முட்டிப்பொருதிடுஞ்சூரர்குலங்கெட
    முடுக்கிச்சமர்செய்யும்வேலனும்
செட்டிக்குமரனைப்பணிந்துளதுட்
    சிந்தைதனில்தொழுதேத்துவாம் ஜெய-ஜெய

மாதவம்புரிமன்னன்பயின்றிட
    மாதியன்சுதனுமென
காதலுடன்வளர்த்தெடுத்துவீரையன்
    கதையைநாடகம்பாடவே ஆ-ஆ

ஓதமிகுத்திடுவேதமிகத்தரு
    மூலகில்தமிழ்வாநாயகி
வேதன்மருவியவாணிபொற்பத
    மிக்கவும்பணிந்தெழுந்தேத்துவாம் ஜெய-ஜெய

மங்களம்.

தரு-இ-ம் அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

மங்களமங்களமங்களம்நித்தியஜெயசுபமங்களமங்களம்

அநுபல்லவி.

மங்களம்இபமுகற்கும் மாமதுரைசொக்கருக்கும்
அங்கயற்கண்ணம்மாளுக்கும் ஆறுமுகவேலவர்க்கும்

மங்களம்.

சரணங்கள்.

செங்கமலவாசனுக்கும் சித்தவுல்லாசனுக்கும்
மங்கைபொம்மிவெள்ளையர்க்கும் மதுரைவீரனுக்கும்

[illegible]

ஆதியினிற்காசிநக சாண்டராஜமன்னனுக்கும்
மாதியனிடம்வளர்ந்த மார்சிலாமணிபனுக்கும்

மங்களம்.

சந்ததம்நீடுசெந்தூர தாசனுக்குங்காசினிக்கும்
விந்தைநாடகமிதனை மெய்யன்பாய்ப்படித்தோர்க்கும்

மங்களம்

மதுரைவீரநாடகம்.

சரித்திரச்சுருக்க அகவல்.

சீர்பெறுங்காசித் திருநகராளும்
ராசனுந்தனக்கு நற்சுதனில்லா
தெண்ணிய கவலை யிருதயங்கொண்டு
மன்னவன்கொலுவில் வந்துமேயிருந்து
மந்திரிமாரே மகுடவர்த்தனரே
எந்தனற்பதியை யெனக்குப்பின்னாள
மைந்தனில்லாததை வாகுடனுரையெனச்
சுந்தரராசன் துயரமாய்க்கேட்க
அந்தணர்பெரியோர் ரமைச்சர்களுரைப்பார்
கந்தனைப்பயின்ற கருணைகடாட்ச
காசிவிஸ்வேச கர்த்தருக்கன்பாய்
பூசையுந்தபமும் புரிந்திடுமரசே
வேகமாய்வெள்ளி விடைசெய்துவைத்து
தாகம[illegible]ன்ன தானங்கள்செய்தால்
அன்றுதான்கர்த்த ரருளதுபுரிவார்
என்றுமந்திரிக ளியம்ப[illegible]
நன்றெனமகிழ்ந்து நான்மறையோர்க்கும்
மன்றினிலேழைமானிடர் தமக்கும்
அன்னதானங்கள் அனந்தப்பேர்க்கீய்ந்து
மன்னவனீசன் மலரடிபோற்றி
வேண்டித்தவஞ்செயும் வேந்தன்முன்வந்து
ஆண்டியாமீச னருளதுகொ[illegible]
மைந்தனுண்டாக வரமதுவாங்கி
சந்தோஷமாகத் தன்மனைவந்தான்
அந்தமின்ராசன் மனைவியாள்கெற்பம்
சந்ததியுண்டாய்த் தானவளிருந்தாள்
அன்பெனும்விழியாள் அமுதெனுமொழியாள்
செண்பகவல்லி திங்கள்[illegible]த்தாறி
பாலகன்றன்னைப் பயின்றனள்பாரில்
ஆலமுண்ட[illegible] அண்ணலார்கிருபையால்
மைந்தன்கழுத்தில் மாலையுங்கொடியும்
விந்தையாய்த்தரித்து வீரனும்பிரந்தான்
சேடியொருத்திச் சிறுவனைப்பார்த்து
ஓடியோராஜர்க் குரைத்திடக்கேட்டு

காசிராஜேந்திரன் களிந்துளமகிழ்ந்து
சோசியர்தன்னைத் துரிதமாயழைத்து
சேனைத்துயர்ளச் செல்வனும்பிறந்தான்
மாசிலாவேத மாமறையோரே
மைந்தன்பிரந்த வாரம்லக்கினமும்
சந்தோஷமாகச் சாதகஞ்செய்யும்
என்றுமன்னவனு மியம்பிடக்கேட்டு
நன்றெனமகிழ்ந்து நான்மறையோர்கள்
பாலகன்பிறந்த பலனைதைப்பார்த்து
மாலையுங்கொடியும் மைந்தன்றன்கழுத்தில்
பட்டதுஇனியுன் பட்டமுமரசும்
கெட்டதுவேந்தே கிளையுடனின்னம்
தந்தைதாயாருக்குந் தன்குலத்தோர்க்கும்
மைந்தனிருந்தால் வரும்வினையென்றார்
சொல்வதைக்கேட்டுத் துரந்தரராசன்
நல்மதிகெட்டு நமசிவாயவென்று
மெத்தவேசலித்து வேந்[...]கி
உத்தமேஇயரோயென் கண்மணிதனை[...]
என்னதான்செய்வது என்றுமேராசன்
சொன்னதைக்கேட்டு சோசியருரைப்பார்
ம[...]க்குடனே மன்னவாகேளும்
தங்கத்தாம்பாளந் தன்னிலேசுதனை
வைத்துமேகொண்டுபே[...]தனிலமர்த்தி
வித்தகாவந்நால் வினையில்லையென்றார்
சோசியர்சொல்லைத் துயரமாய்க்கேட்டு
மேதினிதன்னில் வேந்தனுந்தேவியும்
ஐயோவென்று அலறியேபுலம்பி
தையல்மார்களுந் தனயனையெடுத்து
கமலத்தில்வைத்து கா[...]கந்தனிலே
விமலனார்செ[...]லன வேந்தனும்வைத்து
வாவெனச்சொல்லி மன்னனுமிருந்தான்
கோவெனப்புலம்பி கோதையுமயர்ந்தாள்
வெ[...]டிசெய்காசி வேந்தன்சொற்படியே
[...]கிருழ்காட்டுக் காவலர்களுமடந்து
[...]னைவனத்தில் வைத்துத்திரும்ப

மதுரைவீர்நாட்கம்

ஐந்தலைநாகம் ஆதரவாய்வந்து
வெயிலதுமறைத்து விடவாயிருக்கையில்
மாதியச்சின்னான் மனைவிசக்கிலிச்சி
சோதனையாகத் துய்யகானகத்தில்
கண்டுமேயெடுத்துக் கடுகியமனையில்
கொண்டுபோய்வைத்துக் கோதையும்வளர்த்தாள்
சீருடனவளர்ந்து ஐந்தாம்வயதில்
தமிழகுபடுத்துச் சாரியாய்வனத்தில்
வேட்டைகளாடி வீரையனென்று
தாட்டீகமாகச் சமர்த்தனாயிருந்தான்
அப்பவேபொம்ம[illegible]வள்ருதுவாகி
செப்பாய்க்குடி[illegible]யிற் சேர்ந்திருந்திடுநாள்
கற்பனையாகக் காவல்சின்னானை
மெய்ப்புடன்வைத்தான் வேந்தன்பொம்மணனும்
இ[illegible]டிகவா[illegible] விருப[illegible]கட்டுநாள்
செப்பமாய்க்காத்துச் சின்[illegible]மவருகையில்
சிந்தையாயொரு[illegible]ள் வெகுமழையிருட்டாய்
அந்தரத்திடியு மனேகமாயிடித்து
மின்னியேவானம் மேகமும்பெய்ய
எண்ணியேசின்னா னெழுந்துபோய்மகளை
கன்னிகைபொம்மி காவலுக்கனுப்ப
மன்னன்வீரையனு மனம[illegible]ந்து
தீவிரமாகத் தீரனுஞ்சென்று
ஆவலாய்ப்பொம்மியை யணைந்துறவாடி
மூய்பதுநாளு முடிந்ததும்வன்று
செப்பவேபொம்மி தீரனுங்கேட்டு
நட்புடனுன்னை நானுமேகொண்டு
ஒப்புடன்செல்வே னென்றோடியோ[illegible]ன்
சொல்லியேவீரன் துரிதமாய்நடந்தான்
வல்லியுங்குடிசையில் மகிழ்ந்திருந்திடுநாள்
அப்பவேபொம்மண னனை[illegible]காட்டியனும்
செப்பிள்முலைபின் தேன்மொ[illegible]தன்னை
வீட்டினிற்கூட்டி விளங்குசாங்கியங்கள்
சூட்டியவேத ஜோசியர்கூறி

பண்ணியேமுடித்துப் பரிசனங்களும்போய்
அன்னமும்புசித்து அவரவர்சென்றபின்
கற்பனையாகக் காளைவீரையனும்
சற்பனைசெய்யத் தானுமேநினைந்து
கன்னிவிற்றிருக்குங் கட்டாரண்மனையில்
உன்னியேபுகுந்து உகந்துவீரையனும்
பொம்மியையெழுப்பிப் புரவிமேல்வைத்து
வல்லமைசேர்கத்தியும் வாகுடனெடுத்து
தானும்பரியின்மேல் தாண்டிவீரையனும்
நாணயமாக நடத்தியேபரியை
தொட்டியமுசுரி சுருக்குடன்கடந்து
அட்டியில்லாமல் ஆமூருஆற்றில்
வஞ்சிகூடாரம் வாகுடனடித்து
துங்கையுமகிழ்ந்து சிரித்தணைத்திருந்தான்
அப்போதுபொம்மண்ணன் அலறியேயெழுந்து
செப்பமாம்மகளைத் தேடியேபார்த்து
காணமென்றேங்கிக் கலங்கிநாயக்கன்
சேனையைக்கூட்டித் திடமுடன்தேடி
வருகவேகண்டு வாகுடன்பொம்மி
உருகியேபயந்து ஓலமிட்டலறி
வந்துவீரையன்மேல் மங்கையும்விழுந்தாள்
சுந்தரவீரன் சுருக்கினிலெழுந்து
தானும்புரவிமேல் தாண்டிவீரையனும்
ஆணுவங்கொண்டு அரசன்பொம்மணனை
டடங்கலும்வெட்டி யாற்றினிற்கத்தியை
நடந்துமேகழுவி நாணயமாக
வருகவேகண்டு வாகுள்ளபொம்மி
சருவியேகேட்டுத் தயங்கியேபுலம்பி
அழுதுமேவந்து அப்பன்மேல்விழுந்தழ
தழுவியேபொம்மியைச் சாமிவீரையனும்
பொம்மண்ணன்றன்னைப் போதவேபுதைத்து
தொம்மைகொண்முலையாள் [illegible]தையைக்கூட்டித்
திருச்சிறுப்பள்ளித் தேச[illegible]ல்வந்து
[illegible]ருத்தனைக்கண்டு காரியம்பேசி

வேந்தனகத்தில் வீரையன்சம்பளஞ்
சாந்தமாகத் தானுமேபேசி
அன்புடன்இவனுக் காயிரம்பொன்னு
சம்பளம்வாங்கித் தானுமங்கிருந்தான்
இப்படியாக விருந்திடும்போது
கறபனைமுடிவு காலம்வந்தெய்தி
சொக்கர்மீனாட்சி சுகம்பெறுநாட்டில்
திக்கினிலடங்காத் திருடர்செய்கொடுமை
திருமலைநாயக்கர் செப்பமாய்க்கண்டு
மறுமொழியுத்தரம் வாகுடனனுப்ப
திரிசிரபுரத்தில் செங்கோல்செலுத்தும்
துரையென்னும்விஜய சொக்கலிங்கேந்திரனும்
வீரனையழைத்து விடைகொடுத்தனுப்ப
தீரமுந்தளமு[illegible] தேவிபொம்மியரும்
பயணமாய்மதுரை பட்டணஞ்சென்று
வயணமாய்நாயக்கர்முன் வார்த்தைகள்பேசி
பாக்கிலைவாங்கி பரிபூரணமாய்
நாயக்கருக்குறுதி[illegible]லமுடன்சொல்லி
[illegible]டுஇயில்வந்து வீரையன்பொம்மி
மடிதனில்கொஞ்சி மகிழ்ந்திருக்கையில்
மதுரையில்கள்ளர் வந்துமேகூடி
அதவடிக்கொள்ளை யடிக்கவேகண்டு
வீரையன்பரிமேல் வேகமாயேறி
சீருடன்மெத்த திருகுசெய்கள்ளரை
வெட்டியேசிரத்தை வேகமாய்நொறுக்கி
மட்டிலடங்கா மதுரைவீரையனும்
ரணக்கொலுவிருக்க நாயக்கர்கேட்டு
மணத்துடன்வெள்ளையை வாவென்றழைத்து
ஆலாத்திசுற்றுமென் றன்புடனுரைக்க
தாலத்தாலாத்தி தையலுமெடுத்து
திருஷ்டிகழித்துச் சென்றனள்வெள்ளையும்
துஷ்டனுமதுரை துரையன்றுராத்திரி
வெள்ளையம்மாளை விதமுடனேத்து
கள்ளனைப்போலே காலையும்வருக

காவலர்கண்டு கள்வனெனப்பிடித்து
பாவனையாகப் பாராவில்வைத்து
திருமலைநாய்க்கர்முன் சேதியையுணர்க்க
மறுமொழிவேண்டாம் வண்டனைப்பிடித்து
மாறுகால்மாறுகை வாங்குவீரென்று
கூறிடும்போது கொடியசேவகரும்
வீரையனென்று விதமறியாமல்
மாறுகால்மாறுகை வாங்கினாரப்போ
அப்படியிருக்கையில் அருணோதயத்தில்
செப்புமாய்வீரனைச் சேவகர்கண்டு
என்னகாரணமோ யிவ்விதிவந்தது
மன்னவரென்று மனதுகலங்கி
தென்னவனான திருமலைநாய்க்கருக்
கன்னவருரைக்கக் கலங்கியேமன்னன்
தீங்கறியாமல் ஜெகவீசன் கைகால்
வாங்கினேனென்று மன்னனும்புலம்ப
பொம்மியும்வெள்ளையும் புலம்பியெதிர்க்
சம்மியத்துடனே நாய்க்கரும்நடந்து
தேவிமீனாட்சியாள் திருப்பதம்போற்றி
பாவியான்செய்த பழிதனை தீர்க்கத்
தாருமம்மாள்வரந் சங்கரியேயெனச்
சீருடன்வாழ்த்தித் திருநீறுகொடுத்தாள்
தளர்ந்துநாய்க்கன் தரித்தான்வீரையன்மேல்
வளர்ந்ததுகைகால்வடிவமுன்போலே
பொம்மியும்வெள்ளையும் போதவேயெழுந்து
தம்பி[illegible]க்கண்ணவன் தாள்தனிற்பணிந்தார்
பணிந்தகன்னியரைப் பார்த்துவீரையனும்
இனியிந்தக்காயம் வைத்திருப்பதுநலமல்ல
காரணமுடிவால் கடவுள்மீனாட்சி
பூரணபதத்தில் போய்நான்சேர்வேன்
என்றசொற்கேட்டு ஏந்திழைமார்கள்
நன்றெனநகைத்து நாயகியிருவரும்
தீக்குழிவளர்த்துத் திறமுடன்குதித்துத்
தாக்குடன்மீனாள் தா[illegible]டைந்தார்
வீரையனப்போ வேகமாயெழுந்து

காரிழையிருவ சகடனையுங்கழித்து
அம்பிகையிருள் ஆலயஞ்சென்று
நம்பினேனென்று நற்கம்பமேட்டில்
வாள்தனையூன்றி வதுவுடனிருந்தான்
வேள்புயன்கிரக மீனாட்சிபாதம்
கதியெனவிருக்க கௌரிமீனம்பாள்
மதுரைவீரப்பா மைந்தனேயுனக்கு
முன்கினைபூசை முதலுனக்கென்று
சந்தோஷமாகத் தான்வரங்கொடுத்தாள்
வரமதுவாங்கிவையகமெல்லாம்
ஸ்திரமுடன்துஷ்ட தெய்வமாய்விளங்கும்
காரணமதனைக் கருதுநாடகமாய்
பாரினிற்கவிஞர் பதமலர்போற்றி
திருவுறந்தைநப்பதி செழிப்புடன்வாழும்
சொரூபன்மீனாட்சி சுந்தரவாத்தியார்
தாசனுங்கூட்டி தமிழ்பகர்மொழியில்
சொல்லதுபிசகினுஞ் சொற்குற்றம்வருகினும்
நல்லினாயகனார் நாமமிருப்பதால்
நிந்தைசயில்லல மேலோர்பொருத்துப்
புன்சொலென்றாலும் புகழ்ந்திடுவீரோ

விநாயகர்வருகிற - விருத்தம்.

ஈங்குமேபுகழ்பெற்றோங்கு மிராசனுங்காசிமன்னன்
தங்கம்போற்பயின்றமுத்து சாமிதென்மதுரைமீதில்
இங்கிதநாடகத்தை யியல்புடனடத்தவேண்டி.
தங்கையின்சுதனுத்தண்ட கணபதியிதோவந்தாரே.

—(*)—

இரு - இ-ம்-காம்போதி-அடதாளம்,

பல்லவி.

கணபதியிதோவந்தாரே-ஜெயவுத்தண்ட-
கணபதியிதோவந்தாரே

அநுபல்லவி.

கணபதியிதோவந்தாரே குணமதிமிகவிளங்கும்
கட்கடவிகடித நடனவல்லாச
முடனிருவினைதவிர் கருணாவிலாச(கணபதி)

சரணங்கள்.

அங்குசபாசமேந்தியே-வல்லபையுடன்
அன்புமொழிகள்கூறியே
ஆங்கத்திருக்கைவீசிச் சுசியால்ராகங்கள்பேசி
தொந்திவயிற்றினி லுங்கிச்சுழியுடன்
இந்துவிளம்பிறை போலும்விளங்கிய (கணபதி)

தண்டைச்சதங்கையொலிக்க தகதகெனத்
தங்கப்பதக்கமு சொலிக்க
அண்டர்தவம்பலிக்க அழகாம்வீணையொலிக்க
அங்கையில்மோதக மிங்கிதமாயருள்
திங்களொளச்சுடு ரெங்கும்விளங்கிடுக் (கணபதி)

அன்பானவேர்கள் பணிந்து துதிகள்செய்யத்
தென்பாய்வெண்ணீறு மணிந்து
இன்பமுடனேயோடிச் சிம்பரமாகவேநாடி
இபமுகரடிதனில தபமதுபுரிபவர்
அபவினைத்துயர்களைத் தவிர்வரமருளிய (கணபதி)

தாம்தாம்தகஜெம்தரிகிட திம்தாரதில்லானாஜெம்தரி
தகணகஜெம்தரிதிமிதிகுடத்தக தீத்தெய்யத்தா
ததிம்கணத்தோமென (கணபதி)

—(*)—

குருக்கள்வருகிறது

விருத்தம்.

தற்பதியருள்காவேரி நதிதனில்ஸ்நானஞ்செய்து
தர்ப்பணமுடனேசந்தி ஜபதபமுடித்துக்கொண்டு
அற்புதன்மலர்கள்கொய்து ஐங்கரன்றனைப்பூசிக்கக்
கொப்பெனச்சுப்பராயக் குருக்களுந்தோணினாரே

தரு-ம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

குருக்கள்வந்தாரே சுப்பராயக்-குருக்கள்வந்தாரே.

அநுபல்லவி.

உருக்கமாகவே ஐங்கரனைப்பூசித்
தேம்கணபதி யரகராவென்று (குருக்கள்).

சரணங்கள்.

நெற்றியில்விபூதிக்	கட்டிட்டதிட்டமும்
நேரானசந்தனக்	கீறிட்டசட்டமும்
பத்தியுடன்முப்	புரிநூல்துலக்கவும்
பாசாங்குசதரன்	பாதம்பணிந்திடக் (குருக்)
அப்பமுடன்வடை	பிட்டிலிதேன்குழல்
ஆனசுகியன்	பலபட்சணத்துடன்
செப்பமுடனேநை	வேத்யமுங்கொண்டு
சித்திவிநாயகனைப்	பத்தியுடன்தொழுங் (குருக்)
மங்களசோபனந்	தந்தருள்முத்து
மதுரைவீரையன்மேல்	நாடகம்பாட
திங்[illegible]சயில்லா	தருள்புரியுமெங்கள்
இபமுகர்பாதஞ்	சுகமுடனேதொழுங் (குருக்)

—(*)—(*)—

குருக்கள் விநாயகனைப்பூசைசெய்து துதிக்கும்

தேவாரம்.

நாரணன்மருகாபோற்றி நான்மறைப்பொருளேபோற்றி
வாரணமுகத்தாய்போற்றி வல்லபைநாதாபோற்றி
பூரணமதியேபோற்றி புரிதவமுதலே[illegible]போற்றி
காரணமானமூலக் கண[illegible]பதிபோ[illegible]போற்றி

இவ்விதமாய் குருக்கள்பூசைசெய்து போனபின்பு,

கட்டியக்காரன்வருகிற விருத்தம்,

திங்கள்மும்மாரிபெய்து செழித்திடுங்காசிநாட்டில்
மங்களத்துடனேசெங்கோல் வழுவிடாதரசுசெய்யுந்
துங்க[illegible]ங்காசிராச துரந்தான்வாசல்காக்குங்
கங்கணம்புனைந்தகட்டியக்காரனுந்தோன்றினனே.

தரு-இ-ம்-ஆதிதாளம்.

பல்லவி,

கட்டியக்காரனும்நானே-சமாசுகெட்டிக்
கட்டியக்காரனும்நானே-காசிராசன்வாசல்
கட்டியக்காரனும்நானே-[illegible]குவிதாணமுளகெட்டிக்
கட்டியக்காரனும்நானே.

அநுபல்லவி,

வெட்டிக்கன்றுக்குட்டித்துடை தட்டிவாயதட்டிவரும் (கட்டியக்)
அஷ்டதிக்கெங்கும்புகழும் அதிபதிகாசிராசன்
பட்டணமுழுதும்செங்கோல் கிட்டும் புகழ்ந்துகாக்கும்(கட்டிய)

சரணங்கள்,

ஸ்ரீசிவீசிக்கைகள் நொடித்து பதம்படித்து
மெய்குளிங்கச் சைகைநடித்து
ஆக்கியங்கள்பேசிப்பேசி பதுங்க நடைநடந்து
ஆரபாரங்கொண்டகாசி ராசதுள சேந்திரன்வாசல் (கட்டியக்)
வட்டத்தலைப்பாகை சூட்டியே-நெற்றிதனிலே
இட்டமாய்வெண்ணீறு தீட்டியே
பட்டகவரிகொண்டு சட்டமாய் பணிகள்பூண்டு
திட்டமாய்நடங்களென்று பட்டணமுழுதுங்காக்கும்(கட்)
தித்திமத்தளங்கள் போடவே-இருபுறமுந்
தத்தையெனமாத ராடவே
கத்திகேடயம்பிடித்துக் கையில்வெள்ளித்தடியெடுத்துக்
சந்தோசத்தொடுங்குமென்று தாண்டித்தாண்டிநடக்கும் (கட்டி)

(*)(1)(*)

கட்டியக்காரன்சொல்-வசனம்,

அகோதெப்படியென்றால் ராஜாதிராஜ ராஜமார்த்தாண்டராஜ அத்தண்ட ராஜகெம்பீர ராச ஒய்யார ராசவசீகர ராஜகோலாகலன் காசிமாநகரத்தைபாளப்பட்ட துளசேந்திர மகாராஜன் கொலுவுக்கு வருகிறார் வெகுபராக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

விருத்தம்,

அத்தனும்விஸ்தநாத ரடியிணைக்கமலம்போற்றி
மெத்தவேபணிகள்பூண்டு மெல்லியாள் தனையுங்கூட்டி
மற்றமன்னவர்களூழ மந்திரிகவிசொல்வாணர்
நற்றமிழ்விளங்குங்காசி ராசனுந்தோன்றினனே,

காசிராசன்வருகிற-தரு-இ-ம-புன்னகவராளி-திரிபுடைதாளம்,

பல்லவி,

ராஜாதிராஜனவந்தான்-காசிமகா-ராஜபோஜேந்திரன்வந்தான்

அநுபல்லவி,

தேசமன்னருங்கவி ராசமன்னருஞ்சூழும்
போசனொன்னும்விசு வாசமன்னவன்காசி (ராஜா)

சரணங்கள்.

சென்னியில்கிரீடமிலங்கச் மருமன்னவர்
கன்னியமனங் கலங்க
மின்னியகுண்டலம்விளங்க-சுத்திமத்தளம்
முன்னிதமாய்த்தொனிமுழங்க
கன்னியரிருபாற்கூடக் கவரிசாமரைபோட
இந்திர தேவருந்தேட ராஜபத்தினிகூட (ராஜா)
பூச்சக்கிரக்குடைபிடிக்க பேரிகைகடல்
பேச்சைப்போலொலி அடிக்க
கூச்சமிலாக்கவி படிக்கதம்புருவீணை
பாச்சகானதை படிக்க
நாசமில்லாக்கன்னியர் நட்டனாட்டியமாட
பூஞ்சக்கிர அதிபதி புரந்தரன்போல்ராசி
திங்கள்போல்முக விலங்க-தந்தகென
தங்கக்கவசந் துலங்க
எங்குங்கீர்த்திகள் விளங்கபேரிகைடங்கா
சங்கோசைத்தொனி முழங்க
மங்களஞ்செயசுப ...ங்கள்மெனமாதர்
சங்கையில்லாச்சேனை ...துடன் நானசேர்ந்திட

——(*)——

விருத்தம்

ராஜமன்னவர்கள்போற்ற நான்மறையோர்கள்வாழ்த்த
தேசமன்னவர்கள்சூழத் தேவியாருமிருக்க
நேசமந்திரிமார்பக்கல் நின்றுகைகூப்பித்தாழ
வாசவன்றனைப்போல்காசி மன்னனுங்கொலுவிருந்தான்

கட்டியககாரன்வசனம்

சரணஞ்சரணமையாசுவாமி

இராசன்வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா நமது ஐம்பத்தாறு தேசத்திலுள்ள ராஜாக்கள் மந்திரிமார்கள் மகுடவர்த்தனர் காரியக் காரர் கருணீகர் முதலிய சகல பரிசனங்களும் கொலுச் சபையில் வந்திரு

க்கிறார் சீக்கிரம் பார்த்து வந்து சொல்லும் பிள்ளாய் கட்டியக்காரா

கட்டியன்வசனம்,

அகோ சரணஞ் சரணமையா சுவாமி ஐம்பத்தாறு தேசத் தரசர்கள் முதலிய சகலரும் தேவரீருடைய கொலுச் சபையில் வந்திருக்கிறார்கள் சுவாமி,

இராசன்வசனம்,

சந்தோஷம் சந்தோஷம் இப்போது வசந்த பூரணச் சந்திரோதய கால மானபடியால் நமது கொலுச் சபையில் பரதசாஸ்திரப்படி நடக்கும் நாட்டியப்பெண்களை யழைத்துச்சிலநேரம் நாட்டியஞ்செய்யச் சொல்லும் பிள்ளாய் கட்டியக்காரா,

கட்டியன்வசனம்,

அப்படியேமகாபாக்கியமையா சுவாமி
நாட்டியப்பெண்கள்வருகிறவிருத்தம்,

திருமகள்விலாசஞ் செகமெலாமயக்கிப்போட
இரதிதேவியினுநல்ல எழில்களைப்பூண்டிருப
அரம்பைமேனகையில்மிஞ்சும் ஆடல்பாடலியும்பெற்று
சுரலயநடனஞ்செய்யும் தோகையர்தான்வந்தாரே,

கரு-இ-ம்மீத்தியமாவதி-அடதாளசாப்பு,

பல்லவி,

நடனநாட்டியப்பெண்கள்வந்தார்-மிகலுயிலாய்
நடனநாட்டியப்பெண்கள்வந்தார்,

அநுபல்லவி,

நடனநாட்டியப்பெண்கள்வந்தார்
நயகுழல்தித்திமி தாள்த்துடனே திடமுடன்சுரதகீதங்கள்பாடி
ஜெணுதகதச்ஜெணுததிங்கணத்தோமென [நடன

சரணங்கள்.

மதிநுதலில்திலதம்
வருமிளமயிலசாயல்
சதிசெய்வதேத்துநீ
தாமசஞ்செய்தால்
ததியி துவேளையில்
ஜெணுததஜெணுதத்
சிங்காரமார்ய்ப்பணிகள்
ஜெகராசாமேல்காதலைச்
மங்களமாமொழி
மத்தளதாளங்க

தீட்டி அபிநயங்காட்டி
பூட்டி-கைகளைநீட்டி
சொந்தனைக்கூடத்
சகியேஞன்சாமி
வருநடாசாமி
ததிங்கணத்தோமென(நடன)
பூட்டிவிழிமைதீட்டி
சாட்டி-ராஜகிரீட்டி
வனத்தில்தோன்று
ளொத்துடன்திண்ட

செங்கையிலணிவளை கலகலகலென
திரிகிடதிரிகிட ததிங்கணத்தோமென (நடன)

காசிமன்னவன்சபை தேடிச்-சங்கீதம்பாடி
கண்ணுற்சைகைகளைசெய் தாடி-விரகம்நாடி
வாசனைச்சுகந்தநல் மலர்களைச்சூடி
மன்னவன்கீர்த்தியை மகிழ்ந்துகொண்டாடி
தாசியினும்பாத நாட்டியமாடி
திரிகிடதிரிகிட ததிங்கணத்தோமென (நடன)

பொதுவசனம்.

இவ்விதமாய் நாட்டியப்பெண்கள் நாட்டியஞ்செய்து பரிசுபெற்று கொண்டுபோனபின்பு இராசன் மந்திரி முதலானவர்களை நோக்கிச் சொல்லுகிறவிதங்காண்க.

இராசன்சொல்-விருத்தம்.

வரும்வகையறிந்து கூறும் மதியூகிமந்திரிமாரே
தருமநூல்திகழ்க்கும் தளகர்த்தனேகேளீர்
பரிவுடனெனக்குப்பின்னால் பட்டணந்தன்னையாள
சிறுவனில்லாததேனோ செப்புவீர்மந்திரிமாரே

இராசன்சொல்-தரு-இராகம்-முகாரி அடதாளம்.

கண்ணிகள்.

என்னசொல்வேனேதுசொல்வேன் மந்திரிமாரே-இப்போ
என்தலைவிதிவசத்தை மந்திரிமாரே
துன்மைசெய்துபாவியானேன் மந்திரிமாரே-நான்
செயனில்லாத்துரோகியானேன் மந்திரிமாரே
காசினியாளுதற்கு மந்திரிமாரே-வேறு
காரணமில்லாமற்போனேன் மந்திரிமாரே
பூசுரர்பெரியோர்களை மந்திரிமாரே-நான்
பொங்கிநோகச்செய்திட்டேனே மந்திரிமாரே [ன்
பாலகனில்லாதபேனை மந்திரிமாரே-நான்மு
பழிக்க[illegible]கைசெய்தேனோ மந்திரிமாரே
சாலாசாலத்தெனக்கு மந்திரிமாரே-யொரு
மண்மணமில்லாமற்போச்சே மந்திரிமாரே

முற்பிறப்பில்செய்தவினை — மந்திரிமாரே-இந்நாள்
மூண்டதோவறிகிலேனே — மந்திரிமாரே
இப்பிறப்பிலெந்தனுக்கு — மந்திரிமாரே - சுதன்
ஈஸ்வரனளிக்கவில்லை — மந்திரிமாரே
புத்திரனில்லாதபேர்க்கு — மந்திரிமாரே - ஈசன்
பொற்பதங்கிட்டாதெனவே — மந்திரிமாரே
தத்துவசாஸ்திரமுதல் — மந்திரிமாரே -வேந்தர்
தான்புறையிடுதல்லோ — மந்திரிமாரே
மைந்தர்களில்லாதவாசல் — மந்திரிமாரே - நரக
வாசலென்றுரைக்குதல்லோ — மந்திரிமாரே
சிந்தைகலங்காமலென்முன் — மந்திரிமாரே - நீங்கள்
செப்புவீரிதின்னதென்று — மந்திரிமாரே

———(*) ௧ (*)———

முதல்மந்திரிசொல்

விருத்தம்.

செப்புவீரென்றவார்த்தை செவிதனில்கேட்டமைச்சன்
செப்பெனவெழுந்துநின்று கோமானைத்தொழுதும்போற்றி
இப்புவியாளும்வேந்தே யேழையேன்மொழிதப்பாமல்
செப்புவீர்ரகில்பாலனுதித்திடுமக்குத்தானே.

———(*)———

இரண்டாம்மந்திரிசொல்

விருத்தம்.

சூரியகுலத்துக்கெல்லாந் துரைமகாமேருவாக்
பாரில்வந்துதித்துக்காசிப் பதிநகராளும்வேந்தே
வீரியதான நர்மம் விசேஷமாய்ச்செய்வீராகில்
பாரினையாளவீசன் பாலகனளிப்பானையா

மந்திரிசொல்-தரு-இ-ம-பைரவி-ஆதிதாளம்.

கண்ணிகள்

தேசராசர்தொழச்செங்கோல்செலுத்திடும்
மன்னனேகாசி-மன்னனே — நான்
செப்பிடும்வார்த்தையையொப்புவீரையா
மன்னனேகாசி-மன்னனே
வெள்ளைவிடையேறும்விஸ்வநாதருக்கன்பான
மன்னவனேகாசி-மன்னனே — இப்போ

வெள்ளிவிடைசெய்து வேண்டிக்கொள்ளும்ராச
 மன்னனே காசி-மன்னனே
சத்திவிசாலாட்சி சந்நிதிமுன்னுக்கு
 மன்னனே-காசி-மன்னனே வெகு
சித்திரமாகத்திருக்கோபுரஞ்செய்யும்
 மன்னனே காசி-மன்னனே
அந்தணர்கோடிபேர்க்கன்னதானஞ்செய்யும்
 மன்னனே-காசி மன்னனே வெகு
சந்தோஷமாய்ச்சொர்னதானங்களீய்ந்திடும்
 மன்னனே காசி-மன்னனே
நந்தவனம்வைத்து நற்குளம்வெட்டிடும்
 மன்னனே காசி-மன்னனே விஸ்வ
நாதனைப்போற்றியெந்நாளுந்துதிசெய்யும்
 மன்னனே காசி-மன்னனே
மைந்தனில்லையென்று சிந்தைகலங்கிடும்
 மன்னனே காசி-மன்னனே ஈசன்
விந்தைமலர்ப்பதம் வேண்டித்தவஞ்செய்யும்
 மன்னனே காசி-மன்னனே
அத்தியுரித்தவரனைத்துதிசெய்தால்
 மன்னனே காசி-மன்னனே அவர்
சித்தமிரங்கிப்பின்புத்ரனருள்செய்வார்
 மன்னனே காசி-மன்னனே
மார்க்கண்டனுக்கா[illegible]ந்தருளீய்ந்தவர்
 மன்னனே காசி-[illegible]னனே புத்ரன்
மைந்தன்கவலையைமாற்றிடுவாரையா
 மன்னனே காசி-மன்னனே
சாம்பசதாசிவன் றன்பொருட்டால்ராச
 மன்னனே காசி-மன்னனே உத்தன்
சஞ்சலநீக்கத் தனயனுண்டாக்குவார்
 மன்னனே காசி-மன்னனே

———(*)———

மந்திரிசொல்-வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி தேவரீர் நான்சொல்லிய[illegible]போல் [illegible]ஸ்வநாதருக்கு வெள்ளி[illegible]யினாலே ரிஷபவாகனமும்விசாலாட்சியம்மன்

சந்நிதிக்கெதிரில் திருக்கோபுரமும் செய்து வைத்து அந்தணர் பெரியோருக்கும் அன்னதான முதலாகிய தானதர்மங்கள்செய்து கயிலாயபதியாகிய ஈஸ்பரனை நோக்கித் தபஞ்செய்வீர்கில் உம்முடைய புத்திராபேட்சை நீங்கும்படியாய்ப் பரமேஸ்வரன் கிருபை செய்வாரை யாசுவாமி,

விருத்தம்.

மந்திரியுரைத்தவார்த்தை மன்னவன்விருப்பாய்க்கேட்டு
சுந்தரமுசமலர்ந்து சோசியர்முதலாயுள்ள
அந்தணர்பெரியோருக்கு மன்னதானங்கள்செய்து
மைந்தனைக்குறித்துரசன் மலரடிதொழுதிட்டானே.

இதுவுமது,

[illegible]சயால்மகுடஞ்சூடும் பார்மன்னன்காசிராசன்
இச்சையால்புதல்வன்வேண்டி யெழுந்திருகாத்தைக்கூப்பி
மெய்ச்சிபேவிஸ்வநாதர் மெய்யடிபணிந்துபோற்றி
வச்சிரப்புயங்கொள்மன்னன்வருந்தியேதவத்திலநின்றான்.

இராசன்விஸ்வநாதனைதோத்திரஞ்செய்யும்

தேவாரம்.

ஆதியேபரனேபோற்றி யம்பிகைபாகாபோற்றி
வேதியன்மதலைதன்னை விருந்துண்டநாதாபோற்றி
நீதியாயுலகமாள நீள்சுதன்வேண்டிவந்தேன்
பாதியாமதியைச்சூடும் பரமனேபோற்றிபோற்றி
கரமனை யுரித்தாய்போற்றி கரியுரிதரித்தாய்போற்றி
மேசமனைத்திருக்கண்கொண்டை சுந்தரானந்தாபோற்றி
சேமமாய்ப்புதல்வன்வேண்டி நின்றனன்றவத்தில்யானும்
சேமமாயருள்தந்தாளுஞ் செஞ்சடைநாதாபோற்றி
முற்பிறப்பினில்யான்செய்யா முழுவினைசெய்தயோதும்
இப்பிறப்பினிலென்சென்மம் ஈடேற்றம்பெறுவதாக
அப்பணிசடையாயெந்தன் அவனிகள்முழுதுமாள
செப்பமாய்சுதன்றனன்றும் செஞ்சடைநாதர்போற்றி

பொதுவிருத்தம்.

புத்திரனபேக்ஷையாலே பூபதிகாசிராசன்
மெத்தவேமனதுநொந்துவெள்ளியங்கிரியில்வாழும்
அத்தனார்பாதம்போற்றி யருந்தவஞ்செய்யும்போது
சத்தியனுடனேசாம்ப சங்கரர்தோன்றினாரே,

ஈஸ்பரன் வருகிற-தரு-இ-ம்-மோகனம்-திரிபுடை-தாளம்.

பல்லவி.

சாம்பசிவசங்கரர்வந்தார்-விடையிலேறிச்
சாம்பசிவசங்கரர்வந்தார்

அநுபல்லவி.

பாம்புடனாறுகுந்தும்பை	பாதிமதியுந்தரித்து
தாம்பிரகுல்கடலம்பூண்டு	சத்தியுஞ்சிவனுமாகச்(சாம்ப)

சரணங்கள்.

சென்னியில்ச_ாமகுட	மும்-இருகாத்தி
னுன்னிதபால் மழுசூல	மும்
கன்னியர்சாமரைவீசக்	காளைமீதேறிபுல்லாச
மண்ணுலகில் தவஞ்செயயும்	மன்னன்காசிராஜன்முன்னே(சாம்ப)
அந்தரத்துந்துமி	முழங்கஜெயஜெயவென
இந்திரதேவர்கள்	விளங்க
மந்திரமறைபோர்பாட	மாதர்கள்நட்டனமாட
சுந்தரக்கின்னரர்கூடச்	சுந்தரர்க்குத்தூதுசென்ற(சாம்ப)
போற்றிசெய்திமையோர்	வணங்க-இருபுறமும
காத்திருக்கப்பூத	கணங்கள்
ஆத்திமாமலைசசூடி	அன்புடன்தபத்ன்தநாடி
போற்றியகாசிராசேந்திரன்	புத்திரக்கலிதவிர்க்க(சாம்ப]

விருத்தம்.

சத்தியுஞ்சிவனுமாகத் தாரணிமன்னன்முன்னே
பத்தியாய்வந்தபோது பார்மன்னன்காசிராசன்
சுத்தியேவலமாய்வந்து தோத்திரஞ்செய்துபோற்றி
அத்தியர்முகனையீன்ற அண்ணலைத்தொழுதுநின்றான்

இதுவுமது,

நின்றிடுமரசன்தன்னை நித்தனார்மகிழ்ந்துபார்த்து
நன்றெனநகைத்துமன்னா நமனையநீநினைத்துப்பாரில்
இன்றுகற்றலைச்செய்த தென்னகாரணஞ்சொல்லென்று
கொன்றைசூடிகேட்கக் கோவேந்தனுரைசெய்வானே

இராசன் சொல்-ராகு இ-ம் சங்கராபரணம் அடதாளம் கண்ணிகள்,

மன்னர்மெச்சவாழ்ந்திருந்தேன்- அண்ணலாரே-சிவனே
மனதினிற்கவலைகொண்டேன,தருள்பெறநின்றேன் அண்ணலாரே
என்னசொல்வேன்கொடுமை- அண்ணலாரே-சிவனே
ஏங்கியேமனது தாங்காமல்தவஞ்செய்தேன் அண்ணலாரே
மைந்தனில்லாதுன்னுமன்னம்- அண்ணலாரே சிவனே
மருந்தென்றிசையவேதமறிந்தவருரைசெய்தார் அண்ணலாரே
எந்தன்மனஸதாபமதை அண்ணலாரே சிவனே
இட்சணந்தீர்த்தென்னைரட்சிப்பதுன்பாரம் அண்ணலாரே
ஆலசுதன்பாசபடி அண்ணலாரே சிவனே
அந்தரத்தினில்சிவசெந்தூபோலாடினேன் அண்ணலாரே
வாசவனுந்தேவர்களும் அண்ணலாரே சிவனே
வந்துபணிந்திடவுஞ்சிந்தைமகிழ்ந்தருளும் அண்ணலாரே
ஆலமுண்டகாலகண்ட- அண்ணலாரே சிவனே
அடிமையாய்க்கொண்டெந்தன்கொடும்வினையகற்றிடும் அண்ணலாரே
பாலகனெனக்கருளும் அண்ணலாரே கிருபை
பாலித்தென்கலி தீரபாரும்கிரிதவேளோ அண்ணலாரே

ஈஸ்பரன்சொல்விருத்தம்.

இப்படிகாசிமன்னனிறைஞ்சியேபுலம்பும்போது
அப்பணிசடையோன்சித்தமானந்தம்பெருகியேதான்
நட்புடனம்மைநோக்கி நற்றவம்புரிந்ததாலே
செப்பமாய்ச்சுதனுண்டாகத் திருவருள்கொடுத்தோமன்னா

வசனம்,

அகோவாரும்பிள்ளாய் காசிராசனே நீ முற்பிறப்பிலே எண்ணபாவங்களைச்செய்திருந்தபோதிலும் இப்போது நீநம்மைக்குறித்து அரிதாகிய தவத்தைச்செய்தபடியினாலே உனக்குப் புத்திரனுண்டாகும்படியாய் வரமருளிச்செய்தோம் இனிமேல் உன்னுடைய பட்டணம்போய்ச் சேரும்பிள்ளாய் காசிராசனே

காசிராசன்வசனம்,

அப்படியேமகாபாக்கியம்-சுவாமி.

பொதுவிருத்தம்,

நற்றவம்புரிந்தகாசி ராசனுக்கருளையீந்து
கர்த்தனுமுமையும்வெள்ளிக் கயிலாயங்கிரிக்குச்சென்றார்
மற்றமன்னவர்களசூழ மன்னவன்மனம்பூரித்து
வெற்றியோடரண்மனைக்கு வேந்தனும்நடந்திட்டானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் ஜகதீஸ்பரனானவர் ஸ்ரீ ராசேந்திரமகாராசனுக்குப்புத்திரனுண்டாகும்படியாய் வரமருளிச்செ

ய்துகயிலாயகிரிக்குப்போய்ச்சேர்ந்தபின்புதுளசேந்திரமகாராசன்மிகு ந்த சந்தோஷத்துடனே மந்திரிமார்கள் புடைசூழத்தன்னுடையஅரண் மனைக்குப்போய்ச்சேர்ந்தார்,

இதுவும்-பொதுவிருத்தம்,

ஈசனருளாற்தபோதனந்திறைவயிற்றல்கெர்ப்பம்
மாசமொன்றிரண்டுமோவியிறதுக்னைத்துமூன்றில்
நேசமாயைந்தாறிங்கள் நிலமைபொலற்றிந்துஎட்டில்
ராசபத்தினியுங்கெர்ப்பம்நயந்துபூரணமானாளே,

இதுவுமது.

பூரணகெர்ப்பமாகிப் பொறுமியேவயிறுநொந்து
பாரினிலெல்வர்க்குமுள்ள படியதாய்ச்சோபமீறி
சிரணிமாதர்பக்கல் சென்றுகைலாகுதாங்கக்
கூர்விழிநீர்கள்சிந்த கோதையும்புலம்புவாளே.

செண்பகவல்லிகெர்ப்பவேதனைபடுகிற- தரு

இ-ம-கண்டா-சாப்புதாளம்,

பல்லவி,

அம்மமாரேஎந்தன்தோழிமாரே — என்று
அங்கமெல்லாமெத்தநோகுதடி

அநுபல்லவி,

விம்மிவிம்மியே — வயிறுவலிக்குது
மேனியெல்லாம்வேர்வை — சொலிக்குது (அம்ம)

சரணங்கள்,

என்னசெய்வேண்டி-தாதிமாரே — மன்
நோகுதடியெந்தன்-பாங்கிமாரே
கண்சொருகியே — தலைகள்சுற்றுது
காதுங்கையுமே — நடுங்கமாகுது (அம்ம)
ஊமந்தனில்லையென்று — காலிருந்தேன் அந்த
வருத்தமெல்லாமிப்போ — தோணுதடி
அந்தசத்தினி — லுயிரும்போகுது
சுந்தரக்குரல் — கம்மலாகுது (அம்ம)
அன்னையேநீவிசா — லாக்ஷியம்மே-என்னை
ஆதரிக்கவர — வேணுமம்மா
உன்னையல்லால்வேறு — கதியெனக்
கன்னையேயில் — காருங்கர்ணகிலேன் (அம்ம)

வேறு-தரு-இ-ம-மோகனம்-ஏகதாளம்,

பல்லவி.

அம்மமாரோனானென்செய்வேன்-அடியேன்
பாங்கிமாரோனானென்செய்வேன்-அடியென்
தோழிமாரோனானென்செய்வேன்.

அநுபல்லவி.

அம்மமாரேயென் அடிவயிற்சலிக்குதே
ஆயாசமாகுதே ஓயாமலடிக்கடி (அம்மமா)

சரணங்கள்,

ஒருக்கப்படுத்தில்லை யென்செய்வேன்வயிர்
ஓயாமல்வலிக்குதே யென்செய்வேன்
பொறுக்கமுடியவில்லை யென்செய்வேன் (அம்மம்மா)
பிள்ளைவலிக்குதுநா னென்செய்வேன்
இம்மாநிலந்தனில் என்னுயிர்பிழைப்பேனோ
எட்டியெட்டிவயிற்றில் முட்டுதேஎனைப்பெற்ற (ஆம்மம்மா)
இருதுடையுமிடையுங் கடுக்குதே-அம்மா
ஏதோமயக்கமாய்க் கொடுக்குதே
வரவரப்பெருமூச்சு தொடுக்குதே-எந்தன்
வாய்காய்ந்துநாவுஞ்சொல் தடுக்குதே
அரிகரியெந்த னுண்மையைவெடுக்குதே
அன்னைந்தேயென்னிரு கண்ணும்படுக்குதே (அம்மம்மா)

கொச்சகம்.

மாநிலந்தன்னில் மங்கையர்சென்மமாய்
தானதையுண்டுசெய் சதுர்முகவேதனே
நானினியென்செய்வேன் நல்லுயிர்போகுதே
வீணிலேயான்படும் வேதனைதீருமே.

தரு-இ-ம-காம்போதி.

நாதனே விஸ்வநாதனே-இந்த-வேதனை சகியேனாதனே
பூதலந்தனில்வேதனைப்பட-நீதமோவர்மமேதையா (நா)
வாடுதேயிடைகள்ளாடுதேமயக்கம்-போடுதேயிருகண் மூடுதே (நா)

மருத்துவக்கிழவிவருகிறவிருத்தம்

செருத்திடைவயிறுநொந்து செண்பகவல்லிமாது
வருத்தமாய்ப்புலம்பும்போது மனமதுகிருபைகூர்ந்து
ஒருத்தமாமதியைச்சூடு முமைவிசாலாட்சியம்மன்
மருத்துவக்கிழவிபோலே வந்துமுன்தோன்றினாளே

தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்-

பல்லவி.

கிழவிவந்தாளே-மருத்துவக் கிழவிவந்தாளே

அநுபல்லவி.

கிழவிவந்தாளே கெம்பீரமாகவே
கெஞ்சிப்புலம்பிடும் வஞ்சியர்முன் இடு
கிடுக்கித்தலைநடுக்குடன் கிலாமுக்கிவெகுமுடுக்கதாகவே (கிழவி)

சரணங்கள்,

சங்கையில்லாமல் வயிற்றுவலிகொண்டு
மங்கைபுலம்பும் வருத்தமதைக்கண்டு
பங்கமில்லாமல் சுதன்பெறுவாயென்று
கொங்கைவிலாசப்பெண் கோதைக்குமுன்சென்று
கூனித்தடியூணி மன்னுணிவாய்நீரொழுக-கிழவி
மெய்யுங்கையுங்காலும் நடுக்கமெடுத்து
தையல்படும்பாடு தன்னையும்விடுத்து
வையகமானச் சுதன்பெத்தெடுத்து
வளத்திடப்போடுமென்று வாக்குக்கொடுத்து
மகளேயினி சுகமாய் பெரு மகளேயென்று சுகமாயஞ்சொல் - கிழவி

பண்டையின்நாங்கள் பெருந்தபிள்ளையோ
உண்டாயிருந்தா யுனக்கதுதொல்லையோ
சண்டிவலியார்கது முள்ளதோவில்லையோ
சற்றுநேரம்பொறும் தாயேயாபிந்தவர்த

தாரடி-நீ - கூறடி வெகுநேரடி - பிள்ளைபாரடியென்று- கிழவிவந்தாள்

விருத்தம்,

வந்தவள்மனம்பூரித்து மருத்துவம்பார்க்கும்போது
சுந்தரர்கிருபையாலே தொல்லுலகாளும்ராசன்
சிந்தையுமகிழ்வதாக செல்பகவல்லிமாது
மைந்தனைப்பயின்றுசோப மாகவேயிருந்திட்டாளே,

குழந்தை பிறந்ததற்கு இ-ம் காம்போதி அடதாளம்;

பல்லவி.

வீராதிவீரன்புறந்தான்காசி
வேந்தனின்குலத்தில்வுதித்துகாந்தியினொளிபோல்முத்து (வீராதி)

அநுபல்லவி:

வாரிதிசூழ்ந்திடுங்காசி மாநகரென்னும்பெரிய
பாரதையாளுந்துள்சி ராசங்காராசனுக்கு (வீராதி)
மேதினியிலக்ஷிமாங் காய்த்தரசேபூத்தாற்போலே
மேடையேறிக்கார்த்திகைப்பிறையைத்தேடிப்பார்த்தாற்போல (வீராதி)
மாதர்கட்கரசியென்னுஞ் செண்பகவல்லிவயிற்றில்
மாணிக்கம்போற்பட்டமாளுங் காணிக்காகவேவந்த (வீராதி)

விருத்தம்.

சோபமாயிருக்கும்போது ஜோதியர்பாலன்றன்னை
தாபமாயெடுத்துப்பார்த்துச் சந்தோஷமனதிற்கொண்டே
பூபதியரசனுக்குப் புத்திரன்பிறந்தானென்று
க்ஷேமமாய்த்தாதிமார்கள் தெண்டனிட்டுரைசெய்தாரே.

இதுவுமது.

உரைசெய்யக்கேட்டுராசன் உளமகிழ்ந்தெழுந்திருந்து
அரசனுமமைச்சர்சூழ ஆஸ்தானந்தன்னில்வந்து
விரைவினில்தானதர்மம் விந்தையதாகச்செய்து
மறைவல்லோர்தன்னையழைத்துவாருமென்றுரைசெய்தானே.

இராசன்சொல்வசனம்.

அகோவாரும்பிள்ளாய் ஆஸ்தானகோலாகலனாகிய கட்டியக்காரா இப்போது நம்முடைய பட்டணத்திலே வாசமாயிருக்கும் நால்வேத நிபுணர்களாகிய சோசியர்களை அதிசீக்கிரமாக அழைத்துவாரும் பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியக்காரன்வசனம்.

அப்படியே அழைத்துவருகிறேனையாசுவாமி.

கட்டியக்காரன்சோசியர்களுக்குச்சொல்

விருத்தம்.

மன்னவனுரைத்தசேதி வாசல்கட்டியனுங்கேட்டு
இந்நகர்தன்னையாளு மிராசர்க்குச்சுதனுண்டாகச்
சொன்னசொல்பொய்யாகாதசோசியத்தோரேயும்மை
தென்னவனழைக்கச்சொன்னார் சீக்கிரம்வருகுவீரே,

வசனம்.

அகோவாருங்களையா சுவாமி வேதசோசியர்களே, தங்களை

துசாரியமாகவே நமது ராசராசேந்திரனைதுளசேந்திரமகாராசன் அ
ழைத்துக்கொண்டு வரச்சொன்னாரையா சுவாமிகளே.

சோசியர்வசனம்.

அப்படியே வருகிறேம்பிள்ளாய்-கட்டியக்காரர்

பொதுவிருத்தம்.

வருகுவிரென்றவார்த்தை மாமறைவல்லோர்கேட்டு
அருமறைவேதசாஸ்திர மஷ்டவர்க்கதியோடு
பெருக்கமாய்க்கைபிறகொண்டு பிரபலன்சமுகம்நோக்கி
சுறுக்குடனெழுந்துவேதசோசியர்வருகின்றாரே
சோசியர்வருகிற-தரு-இ-ம-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

சோசியர்வந்தார்-சதுர்வேத-சோசியர்வந்தார்

அநுபல்லவி.

சோசியர்வந்தாரே சுபவாக்குத்தந்தாரே
ராசர்க்குச்சுதனும்ந ராசிநற்பலன்காண (சோசி)

சரணங்கள்.

நெற்றியில்வெண்ணீறணிந்து விஸ்வநாதனை
பத்தியாகவே பணிந்து
வெற்றிபெறநிடுங்காசி வேந்தனுக்கருள்செல்வ
புத்திரனுதித்தநாள் புனிதசாதகஞ்சொல்ல(சோசி)
பரிநூல்மார்பில் அலங்க[illegible]ன்குடுமியில்
பூச்செண்டுவாசந்தோ டிலங்க
வரியாகப்பட்டுவேஷ்டி மடிமஞ்சியுட்டுட்டி
சுறியாகச்சதுர்வேதம் கூடிக்கூவிக்கொண்டு(சோசி)
அடசனைதயின் [illegible]ட்டுபா[illegible]க்குறடு
பட்சமாகவே தொட்டு
மெய்[illegible]ந்து வேந்தன்சபைபுடர்ந்து
பட்சமாய்ச்சாதகப் பலனைப்பராதந்[illegible]கக்கூவ(சோசி)

———(*)———

பொதுவிருத்தம்,

வந்தசோசியர்கள்காசிமன்னனுக்காசிர்வாதந்
சந்தோஷந்தீர்க்கவாய்ச்சென்று தந்தவாசனத்தின்மீது
அந்தணரிருக்கும்போது அரசனுமனம்பூரித்து
எந்தனைக்குருவேயென்று இறைஞ்சியேதொழுதிட்டானே

இராசன்சொல்- விருத்தம்,

துதிபெறும்வேதங்கற்ற சோசியரோயெந்தன்
பதிதனையாளச்செல்வ பாலகன்பிறந்தானையா
முதிர்மறைநூலாராய்ந்து முக்கியத்துடனேபார்த்து
அதிலுள்ளபலாபலன்களறியவேயுரைசெய்வீரே,

வசனம்,

சரணஞ்சரணமையாசுவாமி வேத சோசியர்களே இப்போது விஸ்வநாத சுவாமியினுடைய கிருபாகடாட்சத்தினாலுந் தேவரீர்களுடைய ஆசீர்வாதத்தினாலும் அடியேனுடைய பட்டணத்தை அரசாட்சிசெய்யச் செல்வன்பிறந்தான் ஆகையால் அந்தக்குழந்தை[illegible]நாள் நக்ஷத்திரம் ராசிபலன் முதலாகிய பலாபலன்களை ஆராய்ந்தறிந்து [illegible]சொல்லுங்கள் சுவாமிகளே.

சோசியர்கள்சொல்-விருத்தம்,

ஆலகாலத்தையுண்ட அண்ணலார்பாதம்போற்றி
நூலஷ்டவர்க்கம்போட்டு நுண்மையாய்ப்பார்க்கும்போது
பாலகன்கழுத்தில்மாலை படுங்கொடியிருக்குதையா
சீலமாயெடுத்துவந்துன் திருக்கண்ணால்பார்த்திடீரே,

வசனம்,

ஆகோவாரும்ராசாதிராசனே உம்முடைய பாலகன்பிறந்தநாள் நக்ஷத்திரம் ராசிபலன் முதலியவைகளைப்பார்க்கும்போது அந்தப்பாலகன் கழுத்திலே மாலையுங்கொடியும் சுற்றியிருக்கிறதாகக்காணுது ஆகையால் அந்தக்குழந்தையை எடுத்துவரச்சொல்லி உம்[illegible] திருக்கண்ணால்பார்த்துச் சொ[illegible]லுமையாமகாராசனே,

இ[illegible]சன்சொல்-விருத்தம்,

அந்தணருரைத்தவார்த்தை யரசுமன்னவனுங்கேட்டு
சுந்தர[illegible]கமுஞ்சோ[illegible] தோழியர்தனையழைத்து
மைந்தனை[illegible]த்துக்கொண்டு வரச்சொல்லிப்பாலன்றன்னை
விந்தையாய்ப்பார்த்துக்காசி வேந்தனுமுரைசெய்வானே

இராசன்சொல்- தரு-இ-ம-காம்போதி-அடதாளம்,

———(*)———

கண்ணிகள்

வேதமொழிகொண்டு
மாதவத்தால்வந்த

நீதமுறைத்திடுஞ்சுவாமிகளே-எந்தன்
மைந்தனைப்பார்த்தேனுன்-சுவாமிகளே

மைந்தன்கழுத்தினில்மாலையிருக்குது சுவாமிகளே - மின்னும்
நஞ்சுக்கொடிசுற்றிநின்றுகிடக்குது சுவாமிகளே
மூலக்கொடிசுற்றிப்பாலன்பிறந்தால் சுவாமிகளே - செய்யு
மூலக்கொடுமைமொழிந்திடுவீரையா சுவாமிகளே
மாலைவிழுந்தச்சொல்வருமவினைகூடிடும் சுவாமிகளே - தர்மம்
வாரிச்சொரியுதேனமாரிபோல்யாவர்க்கும் சுவாமிகளே
ஆராலுஞ்செய்யா அருந்தவஞ்செய்தேனே சுவாமிகளே - எந்தன்
பாராளவென்றிந்தப்பாலகனுக்காகச் சுவாமிகளே
செத்ததவத்தாற்றசேயன்கழுத்தினில் சுவாமிகளே - குலங்
வெய்யுமரவக்கொடியேன்விழுந்தது சுவாமிகளே
நீதிநூல்வேத நிலைதவறாமலே சுவாமிகளே - நன்றாய்
சாதித்து[illegible]சகுனங்களுரைத்திடும் சுவாமிகளே

விருத்தம்,

வேலைசூழ்காசிபாரும் வேந்தன்சொல்லுரையைக்கேட்டு
சாலவேதங்களோதுஞ் சாஸ்திரவேதியருரைப்பார்
மாலைதான்கழுத்திலிட்டு வந்தபாலகனிருந்தால
ஆலயமுழுதுங்கோட்டையசடுவெந்தழியுந்தானே,

சோசியர்கள்சொல்வெண்பா

மைந்தன்கொடிசுற்றி வந்தவனைவைத்திருந்தால்
உந்தன்கிளையதன் னுள்ளோர்க்கும்-தந்தையுடன்
கோத்திரத்துக்காகாது கொற்றவனேயெம்முடைய
சாஸ்திரத்திலுள்ள-விதந்தான்

வசனம்,

அகோவர்ரும் ராசாதிராசனே நீர் அனேகந் தவங்களைச்செய்து பெற்றபேரிலும் ஈஸ்பரன் கற்பனையாலுண்டான குழந்தையினுடைய கழுத்தில் மாலையும் கொடியும் சுற்றி யிருப்பதினால் அந்தக்குழந்தையை நம்முடைய அரண்மனையில் ஒரு க்ஷணப் பொழுதாகிலும் வைத்திருக்கக்கூடாது நாம்குழந்தையினுடைய அபேட்சையினால் வைத்திருப்போமானால் நம்முடைய அரண்மனை ஆஸ்தானமுதலாகியதும இடிந்து பாழாய்ப்போம் அதல்லாமல் உமக்கும் உம்முடைய கோத்திரத்திலுள்ளோர்க்கும் கேட்டைத்தரும் ஆகையால் இதை நன்றாக யோசித்துப்பாரும் ராசேந்திர மகாராசனே,

விருத்தம்.

சோசியர்சொல்லைக்கேட்டுத் துயரமாய்வேந்தனுந்தான்
மேதினிதனில்மயங்கி விழுந்தனன்கோபமுற்று

நீதிமந்திரிமார்வந்து நீக்கினர்துயரந்தானைப்
போதிலேராசனுந்தான் புலம்புவான்புலம்புவானே,

இராசன்புலம்பல்

தரு-௩-ம-பைரவி. ஆடதாளம்.

கண்ணிகள்,

ஐயோநானென்னசெய்வே   னாதியேவிஸ்வநாதா
அரும்பாவியானேனையோ   சிவனே-ஐயோ சிவனே-
செய்யுந்தவத்தில்வந்த   சேயனைநானிழந்து
சிந்தைகலங்குவேனே   சிவனே-ஐயோ-சிவனே
மைந்தனில்லாததையெண்ணி   நொந்தேன்மனதிலுன்னி
மாதவஞ்செய்தேனையோ   சிவனே-ஐயோ-சிவனே
எந்தன்பதிக்கினிமே   லிளவரசில்லையென்று
எங்கும்படிசெய்தீரோ   சிவனே-ஐயோ-சிவனே
ஆருஞ்செய்யாதவினை   யான்செய்தபாவியானேன்
அண்ணலேயென்னசெய்வேன்   சிவனே-ஐயோ-சிவனே
பாரிலெந்தனைப்போல   பாலகனைப்பயின்றும்
பலனில்லாப்பாவியுண்டோ   சிவனே-ஐயோ-சிவனே
பிள்ளையில்லாதசென்மம்   போயென்னயிருந்தென்ன
பிரயோசனங்களுண்டோ   சிவனே-ஐயோ-சிவனே
வள்ளலேயென்னுடைய   மனதெப்படிகசிந்து
வையகத்திலிருப்பேன்   சிவனே-ஐயோ-சிவனே

விருத்தம்,

மன்னனிந்தவிதம்புலம்பி மூர்ச்சையாகி
மாநிலத்தின்மிசைவிழுந்துவருந்தும்போது
தென்னவனையெடு[..]தணைத்துச் சோபந்தீரச்
செய்தபின்பு[ரா]சன் மனந்திகைத்துச்சொல்வான்
சொன்னமொ[..]தவறாத மறைவல்லோரே
சுதனை[யி]னியென்னசெய்வோஞ்சுவாமியென்று
வன்னமொழிபதமிமன்னன் கேட்கும்போது
மாமறையோர்விசனமுற்று வசனிப்பாரே,

சோசியர்கள்சொல்-விருத்தம்.

நீதியுடன்காசிநகராளும்வேந்தே
நேயமுடன்கேளுமுந்தன் செயன்தன்னை
நீதில்லாத்தங்கத்தாம்பாளந்தனில்
செப்புமுடனேவைத்துத் தந்தச்சிவிகைபோற்றி

பாதிமதிதரித்தசிவன் செயலென்றெண்ணிப்
பாலகனைவனத்தில்வைத்து வாவேசொல்லும்
ஆதிமகாராசேந்திர போசாவென்று
அரசனுக்குச்சோசியர்க ளுரைசெய்தாரே;

வசனம்,

அகோவாருமையா ராசனே நாங்களிந்தமட்டுஞ் சொல்லுகிறோம் அதென்னவெனறால் உம்முடைய சேயனுகிய குழந்தையை சொர்ணத்தாம்பாளத்திலேவைத்து தந்தப்பல்லக்கின் மேலேற்றி சேனை தனங்கள் சூழ்கதக்கதாக எடுத்துக்கொண்டுபோய் நம்முடைய பட்டணத்துக்குத் தெற்கே ஆரண்யமானகாட்டிலே வைத்துவரச்சொல்லுமையா மகாராசனே.

விருத்தம்,

வேதியருரைக்கக்கேட்டு வேந்தனு மனங்கலங்கி
ஆதிபேதானேயெங்கள் அச்சுதாபச்சைமாலே
நீதியோபிரம்மதேவா நீளக்குதனைக்களித்துச்
சோதனைசெயலேதென்று துயரமாய்ப்புலம்புவானே;

இராசன் புலம்பல்,

தரு-இ-ம-ஆகிரி-திரிபுடைதாளம்;

கண்ணிகள்,

சிவசிவாவிந்த திவினைக்கென்னசெய்வேன்
சிந்தைவாடுதேகமுங்கனுஞ்சிப்பால் எந்தனுவியுமுந்திவிங்கிறேன்
அய்யசோவினையோகொடுங்காலமோ
அந்தரத்தினில்வந்திடுஞ்சிவ செந்துபோஸ்மனம்நொந்துவேகுதே
மைந்தமே ... துமாதவஞ் செய்துநான்
மாநிலத்திலேபயின்றனைக் கானகத்தினில்கானவிப்பவோ
பண்ணினோன்தவம்பாவிவனத்திலே
பத்தியாகவேசத்தியாகரும் நத்தியேயருள்புத்திரா மினி
என்செய்குவேனென்பதியாருதற்
கெத்தனை சுதன்வைத்தபோதிலும் பெற்றபிள்ளைபோலுமாதர்குமோ
கண்ணிருந்து நகரத்தைபாளவும்
ஞாயமோவாவும்மாயவேனடாசேயனே யென்னசெய்குவேனினி
சிவசிவாவிந்த திவினைக்கென்செய்வேன்

—(௧)—

பொதுவிருத்தம்,

இப்படிநாகிமன்னன் ஏங்கியேபுலம்புயபோது
மெய்ப்புடன்மைச்சர்கூடி வேந்தன்றன் றயாதவிழ்த்தார்

செப்பினார்தாதிமார்கள் செண்பகவல்லிக்கப்போ
கொப்பெனவிழுந்துமன்றில் கோதையும்புலம்புவாளே.

செண்பகவல்லியம்மன்-புலம்பல்,

தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்,

கண்ணிகள்,

என்னசெய்வேனிவ்வினைக்கு இந்தவிதிவந்ததைநான்
எவருடனேபோயுரைப்பேன் சிவனே
மண்ணுலகிலென்றுமுள்ள மானிடர்போல்வாழ்வோமென்று
மனதிலெண்ணிநானிருந்தேன் சிவனே
அந்தமாய்த்தவமிருந்து அன்னசொர்ணதானமீய்ந்து
அரனருளால்பெற்றேனேபோ சிவனே
சந்ததியைக்காட்டில்விட்டுத் தாரணியில்நானிருந்து
எந்தவிதம்வாழ்வேனேயோ சிவனே
அத்தனேவிலைவாராதா அன்னைலேகீர்த்தவராம்
அற்பமாகப்போச்சுதையா சிவனே
பெற்றும்பலனில்லாமல் பிள்ளைகளைக்காட்டில்போட்டு
பேதைமனந்துணிவேனோ சிவனே
செய்தவினைகருமுன்னுள் சேர்ந்தபாவமுமுந்தன்
சித்தமறியாதுமுண்டோ சிவனே
வையகத்தையாளுதற்கு மைந்தனில்லாப்பாவியானேன்
மண்ணிலிருந்தென்னபலன் சிவனே

விருத்தம்,

மங்கையிந்தவிதம் புலம்பி மூர்ச்சையாகி
மாநிலத்தின்மிசை[illegible]ந்த[illegible]னை
தங்கையருந்தாதியரும் தோழிமாரும்
தாங்கியெடுத்தவளைத்தழுவிமாதர்
கோங்கலர்பன்னீர்தெளித்து வீசிப்பின்னும்
கோதையர்க்குத்தேறுதலை கூறும்போது
இங்கருதயம்போலச் சுகனைப்பார்த்து
இப்பவிமன்றில்மயங்கிவிழுந்தலறினாளே,

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்வேனையோமகனே என்கண்மணியே-வேத
விதிப்கோவனையமைத்தா னென்வயிறுதன்னிலே(என்ன[illegible])

மன்னுலகாள்வாயென்றிருந்தேன் எண்ணியிருந்தேன்-இப்போ
வனத்திலுந்தனைப்போட்டு மனந்தரிப்பேன் (என்ன)
உத்தமக்குண்டென்றுயிருந்தேனே பாவி-யிருந்தேன்-நான்
உயிரோர்டிலேயிழந்து உலகிலுய்வேனோ (என்ன)
பதவியெழுவோமென்றுநினைந்தேன் மனதில்நினைந்தேன்-இந்தப்
பாரிலில்லாகொடும் பாவிபோலானேன் (என்ன)
மலடிருந்தேன்பாவிவெகுநாள் ஐய்யோவெகுநாள்-பெற்றும்
வளர்த்தேனில்லையெந்தன் மனங்களிகூற (என்ன)
தொல்லையாதகவலைகொண்டேங்கி மன-தேங்கி-பாரில்
சுழலவோபுறத்தி யார்சொல்மொழிகேட்டு (என்ன)
மண்ணாசைபெண்பொருளாசை பொருளாசை-யாரு
மறந்தார்ஞ்சுத ஞானசமறக்கப்போகாதே (என்ன)
எண்ணுதெல்லாமனதெண்ணி மனதெண்ணி-வயி
றெரியுதேயனலில் றெய்திரியதுபோலே (என்ன)

பொது-விருத்தம்.

ஐமந்தனையெடுத்துப்பார்த்துமலர்க்கண்ணிலொத்திக்கொண்டு
எந்தனற்புதமேகண்ணே யெவ்விதமுனையெடுத்து
அந்தமாய்வனத்திற்போட அங்கமும்பொறுக்குமோடா
மைந்தனேயென்றுமாதுமறுவிதம்புலம்புவாளே.

இதுவும்செண்பகவல்லிபுலம்பல்.

தரு-இ-ம்-முகாரி

கண்ணிகள்.

ஐய்யோவெந்தன்மகனே-உன்னை பெருங்கானகிலேபோட
ஆறுமோமனந்தேறுமோ வெந்த[illegible] னங்கமூருகிடுமே
பையாடரவணிந்தசிவன் பாதமதைப்பணிந்து
பரிவாய்த்தவஞ்செய்துன்னைப் பயின்றெனிந்தவிதிக்கோ
கண்ணேகண்ணின்மணியே சுவை கனியேகட்டிக்கரும்பே
உன்னைகணகாட்சிக்கோபயின்றேன்பழி காரிபுவிமீதே
முன்ஜென்செய்தவினையோ-வினை முடிமோபழியிதுவோ
அந்தமுதல்வனெனக்களித்து இந்த மோசஞ்செய்யலாமோ
பிள்ளையற்றபாவியென்று பேருலகோரேசும்
பேதைதமனந்துணிந்திடவே பிரமன்லெயித்தானோ
வள்ளச்செசிக்கின்பமெனப் பிள்ளைமொழிகேட்டால்
மறை[illegible]டைதிவதே மார்க்கமுண்டாயிருக்க
பெற்[illegible]மகனிருந்துஇந்தப் பேருலகாளாமல்
பெருங்கானகிலேஎறிந்திடவும் பிரமன்லெயித்தானோ

கன்னமறையோரோடெந்தன் கண்மணியாஞ்சுதனைக்
கொண்டு-காட்டில்வைக்கும்போதுபுலி கரடியின்றுவிடுமே
பசுவைக்கொன்றதோஷமதைப் புசிக்கத்தபோதும்-பெற்ற
சிசுவைக்கொன்றதோஷமது இராதென்னசெய்வேன்
வசுவெழுச்சிவளர்த்தவுடல் விபூதிதந்தபோதும்-இந்த
மகனைக்காட்டில்வைத்ததோஷ மறுத்துச்சுத்தமாமோ
என்னசெய்வேனிவ்விதிக்கு எந்தன்யாங்கிமாரே
மன்னன்மனஞ்சலித்துப்பெற்ற மகனைக்காட்டில்போட்டால்தாம்
மங்கையனைத்தடுக்கநீதி மார்க்கமோதாதிமாரே

விருத்தம்.

மைந்தனைப்பார்த்துப்பார்த்து வயிற்றிலலைகார்ந்துகொண்டே
அந்தரத்திடியைப்போல் அலறியேமண்மேல்வீழ்ந்து
சுந்தரத்தொல்வேறுகத் கதறியேதேவிதன்னை
மந்திரிமுதலாயுள்ள மறையவராற்றினாரே,

இதுவுமது.

அலறிடவேண்டாமம்மா ஆதியில்வேதன்றாக்கும்
தலைவிதிதன்னையாரும் தவிர்த்திடமுடியாதென்று
விலையதுமதிக்கொணாத விசித்திரம்பாளந்தன்னில்
மலைவுடன்பாலன்றன்னை வைத்துப்பல்லக்கில்சேர்த்தார்.

இதுவுமது.

பாலகன்றனையெடுத்துப் பல்லக்கின்மீதுவைத்து
ஆலகாலத்தையுண்ட அண்ணலார்திருவையென்று
காலதூதர்கள்போல்சேனை கன்னியர்சூழகாட்டில்
சாலவேகொண்டுசென்று தனிப்படவைத்திட்டாரே.

இதுவுமது.

வனத்தினிற்பாலன்றன்னை வைத்தவர்மனங்கலங்கி
கனத்தினில்நகரஞ்சென்று காசிமன்னவர்க்குரைத்து
இனத்துடனதிக்குச்சென்று எல்லோருஞ்ஸ்நானஞ்செய்து
மனத்துடன்வீடுசேர்ந்து வாகுடனிருந்தாரன்றே.

இதுவுமது.

மைந்தனும்வனத்திருந்து வயிறதுபசியெடுத்து
கந்தரத்தொலிபாராட்டிக் கதறியேயழுதசத்தம்
ஐந்தலைநாகங்கேட்டு அருகில்வந்துபசரித்து
சிந்தையாய்வெயில்மறைத்து விஷ்வாவிருந்[...]ன்றே,

கட்டியக்காரன்-வசனம்,

இந்தப் பிரகாரம் ஆரணியத்திலே வீரமரத் தூளியில் தங்கத்

தட்டில் அமர்த்திவந்த பாலனுக்குப் பசியெடுத்து அமுதசத்தத்தைக் கேட்டுப் புற்றிலிருந்த ஐந்தலைநாகம் பரிதாபத்துடன் குழந்தையினருகில் வந்து உபசரித்து வெய்யில் படவொட்டாமல் தனது படத்தால் முகத்தை மறைத்துக் கொண்டிருக்கும்போது ஈஸ்பரன் திருவையால் கோனேரிபட்டணத்தி லிருக்கும் மாதியச் சின்னான் தேவியானவள் அந்தவனத்திலே ஆவாரம் பட்டை வெட்டிக் கொண்டுபோக வருகிறவிதங்காண்க.

சக்கிலிச்சிவருகிற-விருத்தம்.

காதில்ரத்நவோலைமின்னத் திலகந்துன்னக்
கைவளையல்கலகலெனச்சரங்குலுங்க
சோதிமயமாயிடையில் சேலைமின்னத்
அடியிடையிலொட்டியாணந்தகதகென
நீதியுள்ளநிதிமம்போல்நடைநடந்து
திமலிசக்கதேவியம்மாள்பாதம்போற்றி
மாதியச்சின்னான்தேவி கொடுவாள்கொண்டு
வனத்திலாவாரைவெட்ட வருகின்றாளே

தரு-இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

வந்தாள்மாதியச்சின்னான்தேவி-விந்தையதாக
வந்தாள்மாதியச்சின்னான்தேவி

அநுபல்லவி.

செந்தாமரைக்கண்ணாட்டி
திருமதிமுகமது
வரிவிழிகயலென
செயங்கொள்பொம்மனாட்டின்
நலங்கநகெனவே
வையகங்கொண்டாட (வந்தாள்)

சரணங்கள்.

நடைகண்டன்னமின்
னளினம்பிறும்விளை
மென்திருகொங்கையும்
கொஞ்சியரஞ்சித
வஞ்சியிவள்மாதியன்
நீண்டபுருவவிழி
நெற்றிதனில்திலதக்
கீன் ... ளகொடியோ
... கையிலணிவளை
மங்கையவள்கையி
மெட்டிக்கூட-நடநங்கண்டு
யாட-பசும்பொன்குட
குலுங்கப்-பணியலுங்க
மிஞ்சியமொழியுடன்
மனையாளாமென வந்தாள்)
காட்டித்-தகதகென்ன
நீட்டிவிழியையூட்டி
ஜெகமோகினியோவென்னக்
இங்கிதஒளிசெய்ய
லுங்கொடுவாளுடன் (வந்தா

மைந்தன்கவலைநெஞ்சி லெண்ணி-சக்கதேவியின்
செஞ்சரணத்தைத்துதி பண்ணிரந்[illegible]ழூடன்
கொஞ்சங்குயில்போல்பேசி கோதை[illegible]கந்தம்பேசி
கொடுநரிபுலியொடும் கரடிகள்வாழுங்
கடுவனநாடியே கன்னிசொகுசுடன் (வந்தாள்)

விருத்தம்,

மாதியச்சின்னான்தேவி மனதினில்கவலைகொண்டு
சோதனையுடனேசாதித் தொழில்செய்யப்பட்டைவெட்டி
நீதியாய்வந்தபோது நிறைந்தகானகத்திலன்று
ஆதியோனருளால்மைந்த னழுதிடுங்குரல்கேட்டாளே

இதுவுமது.

கேட்டவள்திரும்பிக்காட்டைக் கிட்டியேதேடும்போது
வாட்டமதாகவீர மரத்தடிதனிலிருந்து
நாட்டமில்லாமற்பாலன் நபத்துடன்புலம்பக்கண்டு
ஓட்டமாயோடிமார்து [illegible]வக்கெடுத்தணைத்திட்டாளே

தரு-இ-ம்-காம்போதி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

மைந்தனையெடுத்தணைத்து மாதுமார்பில்
வைத்துமுத்தாடவந்தப் போது
சுந்தரர்கிருபையருள் தங்கிச்சின்னான்
தோகையினமிர்தருடம் பொங்கி
மிஞ்சியேதா[illegible]விட்டமிர்த பூரப்-பாலன்
வேண்டியேகுடித்தான்பசி தீர
கொஞ்சியேபாலனைமார்பில் சாத்தி-தங்கள்
குலதெய்வத்தைப்பணிந்து போற்றி
கானகத்திலென்கவலை போக்கும்-சிவ
காரணிசக்கதேவிநீ யாக்கும
நாளுனையென்றனும்மற வேணோ[illegible]தன்
நற்புனத்திலீந்தவனைத் தானே
என்றுவாத்தமாதியன்பெண் ணானும்-சுத[illegible]
வந்தியேநடந்தாளேமின் னானும்
அன்றுவெட்டும்பட்டைதனை வேண்டாள்-சிரித்
தகமகிழ்ந்தவள்வனத்தை மீண்டாள்

மாதியச்சின்னான்வருகிற-விருத்தம்.

மைந்தனையெடுத்துக்கொண்டு மாதியச்சின்னான்தேவி

சகதோஷமுடனேகாட்டைத் தாண்டியேவருகும்போது
விந்தையாய்ப்[ப]ணிகள்பூண்டு விசித்திரநடைநடந்து
சிந்தையில்கோ[ப]ங்கொண்டு சின்னானும்வருகின்றானே.

தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தானேமாதியச்சின்னான்-மங்கையைத்தேடி
வந்தானேமாதியச்சின்னான்

அநுபல்லவி.

அந்தமாய்க்கையினில்தடி ஆயுதங்களைப்பிடித்து
மொந்தையில்கள்ளுஞ்சாராயம் விந்தையாய்க்குடித்து (வந்)

சரணங்கள்.

சென்னிதனிலுருமாலை கொண்டையுங்கட்டி-நல்ல
உன்னிதமாகவிருது வெண்டயம்பூட்டி
வன்னிபோல்விழிமிரட்டி வாயுகட்டிலுலுருட்டி
கன்னிகைதன்மனையாளைக் காணமென்றெங்குந்தேடி (வந்)

கானகத்திலாவாரம் பட்டைவெட்டவேசென்று
போனவளிந்நேரமட்டும் சட்டை-கெட்டுதோவென்று
நானவளைத்தடிகொண்டு நாலடியடிப்பேனென்று
வீணிலேகோபமேகொண்டு மீசையைமுறுக்கிக்கொண்டு (வந்)

ஓடிநாடியெங்குந்தேடிக் கால்கள்வலித்துவந்
தோரிடத்திலேயிருந்து [உ]ள்ளஞ்சலித்து
நாடியேவனத்தில்சென்று நானவளையங்கேகொண்டு
கூடியேயழைத்துக்கொண்டு கொப்[பனை]ப்போகலாமென்று (வந்)

விருத்தம்.

[வா]டியேமனதுநொந்து மாதியச்சின்னானெங்கும்
தேடியேவருகும்போது சென்றுகாவனத்திலன்று
கோடிசூரியனைப்போலும் குழந்தையைக்கையிலேந்தி
[நா]டியேமனையைநோக்கி நலமுடன்வரக்கண்டானே.

இதுவுமது.

கண்டவனோடிச்சென்றுகைத்தடி தன்னையோங்கி,
கண்[டப]ேனைத்துக்கேகிச் சீக்கிரம்வந்திடாமல்
இன்றைக்கிந்நேரமட்டும் மென்னதான்செய்தாயென்று
தெண்டனையுடனேமாதியச் சின்னானுங்கேட்கின்றானே.

மாதியச்சின்னானுக்கும்-சக்கிலிச்சிக்கும்-தர்க்கம்.

தரு-இ-ம-பூபாளம்-அடதாளம்.

கன்னிகள்.

இந்நேரங்களாகத் தென்னசெய்தாயடி
பெண்ணரசேசொல்வாய் பேதமில்லாமல்

சக்கிலிச்சிசொல்-தரு.

பேதகமேதுகாண் நாதனேயென்மங்கே
தீதானவார்த்தைகள் செப்பிடவேண்டாம்

மாதியச்சின்னான்.

செப்பிடவேண்டாமென் றெப்பிதமாய்ச்சொல்லும்
தேவியெந்தனிட கோபம்பொல்லாதே

சக்கிலிச்சி.

கோபமென்செய்கிறாய் கொற்றவாவென்மீதில்
லாபமேகிடைத்தது நழுக்கிப்போகணவர்

மாதியச்சின்னான்.

கிடைத்தலாபமென்ன கிள்ளைவாழ்புனத்திலே
உடைத்துவதையெனக் குரைசெய்வாய்பெண்ணே

சக்கிலிச்சி.

உரைசெய்வதேதுகா ணுந்தன்மனதின்படி
நிறைவேறிற்றிந்த கிள்சுதன்பாரும்

மாதியச்சின்னான்

பாருமென்றுரைசெய்த பாவையேவனத்தினில்
கூறுமதிபோலிந்த குழந்தைதானேது

சக்கிலிச்சி.

எதிர்தக்குழந்தையென் றென்றுதேசகாரனான்
திதில்லாப்புனத்தினில் சென்றுகண்டெடுத்தேன்

கொச்சகம்.

கண்டெடுத்தேனென்றோதுங் காரிகையேநமக்காக
அண்டர்பிரானுண்டுசெய்து அவ்வனத்திற்போட்டாரோ
மண்டலத்தோர்கொண்டாடு மகவையெந்தன்முன்னாகத்
கொண்டுவாவென்றுமுத்தங்கொடுத்துமவன்கூறுவானே.

மாதியச்சின்னான்சொல்லல்.

தரு-இ-ம-சௌராஷ்டகம்-திரிபுடைதாளம்.

பல்லவி.

இந்தக்குழந்தைவனத்திலிருந்த தென்னகாரணமிகமையோ

அநுபல்லவி.

அந்தர்ம்லாழும்இந்திரதேவ — சருணில்தரித்தபாலனோ
அன்னமே மிரு — சொர்ணமே-நமக்
இன்னமேதுய — ரென்னுலதேதடி (இந்த

சக்கிலிச்சிசொல்லல்—சரணங்கள்

என்னகாரணமகிமையோவென்ற — எந்தன்பிராணநாதனே
வன்னமதாகியசுதனில்லாமல்நாம் வருத்தமாகிடக்கண்டுமே
வாவிருஞ்சக்க — தேவியாள்நமக்
கோவியமெனத் — தாயித்ததுவை (என்)

மாதியச்சின்னான்.

சக்கதேவியினருளானுதவுஞ் — சந்ததியான்பாலனை
பட்சிகள்மிருகசாதிகள்வாழும் பரும்புனத்தினிலிவைதேன்
பாரமோவென்ன — கோரமோ செய்த
நேரமாமன — தாரமோபெண்ணே (இந்த)

சக்கிலிச்சி.

வனத்திலிருந்தபாலனைவே — வசைகள்கூறுவதாருகாண்
தனத்தில்மீருந்தபொருளாஞ்சுதனைத்தாங்கியேஸகியில்லாங்கியேழுத்த
தாக்கியல்லல் — போக்கியேதுயர் [ந்
நீக்கவேவந்த — பாக்கியத்தைநீ (என்ன)

விருத்தம்,

கொ லன்றன்னைக் கொடுத்திடாமாதுவாங்கி
நெஞ்சினிலணைத்துக்கொண்டு நீள்மனைதனக்குச்சென்று
மிஞ்சியகவலைதீர்ந்து மிகவுமேமகிழ்ந்தசின்னான்
வஞ்சியுந்தானுமாக மைந்தனைவளர்க்கின்றாரே.

இதுவுமது.

புத்திரன்றனக்கன்பாகப்போதிளவெந்நீராட்டி
நெற்றியில்வெண்ணீரிட்டு திலக்காப்புதிலதந்தீட்டி
பத்தியாய்மகவைத்தாங்கிப் பாலமுதூட்டிப்பொன்னின்
சித்திரத்தொட்டிலேற்றிச் சிறந்ததாலாட்டினாரே.

தாலாட்டுதல்.

தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

ராரிரரோ-ராரிரரோ- ராரிரரோ-ராரிரரோ

அரவணையில்கண் துயிலும் ஆயர்குலமாயவனே
சரவணையில்வந்துதித்தசண்முகனே கண்வளரீர் (ராரிரரோ)
தேடாத்திரவியமோ தெவிட்டாக்கனியமுதோ
தாடாண்மைகொண்டுவந்த தனஞ்சயனே கண்வளரீர் (ராரிரரோ)
கவலையாவாரம்பூக் கானில்வரும்போதெனக்குச்
சிவனருளால்வந்துதித்த செல்வனே கண்வளரீர் (ராரிரரோ)
ஆர்பெற்றகல்மணியோ இந்தஆரணியந்தன்னில்வந்து
சீருடனேயென்கவலை தீர்த்தவனே கண்வளரீர் (ராரிரரோ)
தெள்ளமிர்தத்தேனே தெவிட்டாதிரவியமே
(என்) பிள்ளைகலிதீர்க்கவந்தபிரபலனே கண்வளரீர் (ராரிரரோ)
நாகங்கரடிபுலிநரிகள்சூழ்வனத்தில்
பாகமுடன்வீற்றிருக்கும் பாக்யமேகண்வளரீர் (ராரிரரோ)
பிள்ளையில்லையென்றனது பேதைமனம்வாடுவதை
வள்ளலறிந்துதந்த மைந்தனேகண்வளரீர் (ராரிரரோ)
வாசம்புகழுணர்ந்த வாத்திமைமீறுட்சிசுந்தர
தாசனுரைகேட்டுகந்தென் தங்கமேகண்வளரீர் (ராரிரரோ)

விருத்தம்,

பாலகனைத்தாலாட்டியெடுத்துமன்பாய்ப்
பருமுடிக்குயெண்ணெயிட்டு வெந்நீராட்டி
நீலவிழிகண்களுக்கு மையுந்தீட்டி
நெற்றிதனில்நீறணிந்துதிலதஞ்சாற்றி
பாலவிளம்பிறையதுபோல்சுட்டிகட்டி
வளர்கைக்குப்பொன்கொலுசு காப்புமிட்டு
கால்முதலாய்சிரம்வரைக்கு மம்மைந்தனாகத்
தனத்தினால்பணிகள்பூட்டினாரே

இ-ம்-மோகனம்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

பொன்னின்பணிகள்செய்து வன்னக்குழந்தைமெய்யில்
பூட்டினார்-பூட்டினார் எங்கும்
புகழுமிடையில்வெள்ளிச்சதங்கைபொன்னரைஞாணும்
சூட்டினார்-சூட்டினார்
அன்னம்போல்வருங்காலில்சிலம்புதண்டைகொலுசும்
அணிந்திட்டார்-அணிந்திட்டார்
காதிலாத்தினவெட்டுக் கன்முருகுபச்சை
தரித்திட்டார்-தரித்திட்டார்

ஆஸ்தகையுடனே தங்கக்காப்புக்கொலுசு
மணிந்திட்டார்-அணிந்திட்டார்
மாதியன்னாரொரு வர்ணமாய்ச்சுதனைத்தான்
வளர்த்திட்டான்-வளர்த்திட்டான்
மகனுக்குத்திருநாமம் வைத்துவீரப்பனென்
றழைத்திட்டான் அழைத்திட்டான்
பெற்றபிள்ளைதனிலும் பிரியமாய்ப்பாலனைப்
பார்த்திட்டான்-பார்த்திட்டான்-அந்தப்
பிள்ளைக்குஞ்சாந்துபருவமாகிமனம்
புகழ்ந்திட்டான்-புகழ்ந்திட்டான்
சித்தத்திலளவற்ற சிறப்புட[illegible]கூடியே
வளர்த்திட்டான்-வளர்த்திட்டான்-அந்தச்
செல்வனையோதிடச் செய்விக்கவேயெண்ணி
மகிழ்ந்திட்டான்-மகிழ்ந்திட்டான்

உபாத்தியாயர்வருகிறவிருத்தம்.

மாதியச்சின்னான்றனை மகனெனவளர்த்தைந்தாண்டில்
தீதிலாப்பள்ளிக்கூடத் திருத்திடவேணுமென்ன
வேதியர்நாள்குறித்து விளம்பியபடியேவித்தை
ஓதிவைத்திடவேநல்ல உபாத்தியாயர்வந்துற்றாரே

தரு-இ-ம்-சருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வாத்தியாயர்வந்தாரே-ஓதிவைக்க-வாத்தியார்[illegible]வந்தாரே

அநுபல்லவி.

வாத்தியாயர்வந்தாரே [illegible]த்தியதாகவே
மூர்த்திகி[illegible]ணனை போற்றிசெய்யுந்தமிழ்([illegible])

சரணங்கள்.

நெற்றியில் நீரணிந்து-சிவபதம்
நேசத்துடன் பணிந்து
வெற்றிபெறத் துணிந்து-நீர்க்காவி
வேஷ்டியிடைக் கணிந்து
பத்தியுடன்தலைப் பாகையணிந்துபின்
சத்திபிரம்பெழுத் தாணிகையில்கொண்டு(வாத்தி)
நீதிநன்னூ லுரைத்து-அரிமுதல்
ஓதிடநாள் குறித்து

சோதிடநூல் விரித்து-கணக்குகள்
ஆதியுள்ளோர்க்குரைத்து
மாதியச்சின்னான் வளர்த்திடும்பாலனுக்
கோதிக்கொடுத்து உடுவலை பெற்றிட (வாத்தி)
வேடிக்கையாய்ப் பேசி-பிரம்புகொண்
டோடிக்கையால் வீசி
வாடிக்கைடாய் நாசி-பொடிப்பட்டை
நாடிக்கையால் தீசி
கூடியபாலகா கொட்டமடக்கியே
பாடித்தமிழ்சுயம் பாலித்திடும்கல்ல (வாத்தி)

மதுரை[illegible]ன்வருகை[illegible]விருத்தம்.

சிந்தையுமகிழ்ந்துசின்னான் தேவியுந்தானுங்கூடி
மைந்தனைப்பள்ளியோத வைத்திடவேணுமென்று
சுமோதாஷமுடனழைக்கத் தந்தைமாதியன்சொல்கேட்டு
விந்தையாய்மதுரைவீரன் மேதினிதனில்வந்தானே.

தரு-இ-ம்-கலியாணி-ஆடதாளம்.

பல்லவி.

வீரையன்வந்தானே-துரைமுத்து-வீரையன்வந்தானே

அநுபல்லவி.

வீரையன்வந்தானே மேதினிதன்னிலே
ஓரைந்திலிற்பள்ளி மோதிடவேகல்ல (வீரை)

சரணங்கள்.

தங்கப்பணி துலங்க-திருமுகஞ்
சந்திரன்போ லிலங்க
[illegible]சங்கைதனில்[illegible] துங்கவளைமணி
[illegible]ங்குமிலங்கிடப் பொங்கமுடன்[illegible] (வீரை)
தண்டைசிலம் பணிந்து-இடையினில்
தங்கக்கயிற் புனைந்து
மண்டலத்துள்ளோர்ம[illegible]கொண்டாடவே
கெண்டசப்பளி கெண்டி-துலங்கிட (வீரை)
காதில்கடுக்கன் மின்ன-கழுத்தினில்
கெண்டசரங்கள் துன்ன
மாதியச்சின்னான் வழுத்தியசொற்படி
நீதியுடன்பள்ளி ஓதிடவேதுள்ளி (வீரை)

சக்கிலியன்சொல்-விருத்தம்.

வந்திடுஞ்சுதனைப்பார்த்து மாதியன்மகிழ்ந்துசொல்வான்
என்னதற்பொருளோகண்ணே யென்னிடமகனேகேளாய்

வந்தவிக்குருவின்பாதம் வணங்கியேநமஸ்கரித்து
சிந்தையிலறிவுதோன்றச் செப்பமாய்ப்படித்திட்டாயே.

(வ-ம்) அட்டாவட்டாகன்கண்மணியாகியமகனே இதோவுமதுகுருவாகி யஉபாத்தியாயர் வந்திருக்கிறார் அவருடைய பாதத்தில்விழுந்து நமஸ் கரித்துக்கொண்டுபள்ளிக்கூடத்திலேயிருந்து வாசித்துக் கொள்ளுமய்யா மகனே.

பொது-விருத்தம்.

மாதியனுரைத்தபடி கேட்டு மதுரைவீரன்ஒமெனவே,
ஆதிப்புராண முதல்துவக்கி அருணைப்புராணமவரைபடித்து
நீதிச்சிலம்பம்வில்பரிட[illegible]கிகறில்லாமற்கற்றரித்து
சோதியருளால்வளர்[illegible]துவய[illegible]குத்தாகியிருந்தனனே

கட்டளைக்கலிப்பா.

மைந்தனுக்குவயதுபத்தாகிடும்
வாலிபத்தையறிந்திடுபேர்களும்
சிந்தையிலதுயர்நீங்கிச்செழிப்பதாய்
சேயனுக்குஅறுசுவையன்னமும்
விந்தையாகப்படைத்திடவுண்டபின்
வீரன்கையில்வில்லம்புமேந்தியே
அந்தமானவனத்தினில்வேட்டைசென்
றுடவேயெண்ணிவீரையன்வந்தனன்

மதுரைவீரன்வருகிறவிருத்தம்.

ஆதினிற்காசிநகராளும்வேந்தன்
அருந்தவத்தால்பயின்று அருங்கானிற்போட
நீதியுடன்சக்கிலியச்சின்னான்தேவி
நீளகானிலாவாரம்பட்டைவெட்டச்
சோதனையாச்சென்றவள்தானெடுத்துவந்து
சுகனெனவேமுலைகொடுத்துத்தழுவிக்கொஞ்சு
மாதியச்சின்னானகத்தில்வளர்[illegible]கபு[illegible]
மதுராபுரி[illegible]துரையும்வருகின்றானே.

தரு-இம்-கலியாணி-ஆதிதாளம்,

பல்லவி.

மதுராபுரித்துரைவந்தான்-எனைரட்சிக்கும்
மதுராபுரித்துரைவந்தான்

அநுபல்லவி.

பதிராசராசர்துதி | பண்ணிப்பணியநல்
விதியோடனேகசுதன் | கிஷிதைப்பொழுதிலனுள-(மது)

சரணங்கள்,

சந்திரகாந்தியுருமாலை கொண்டையுங்கட்டி
சரிகைச்சாதராமுத்துச் சா[illegible]ர்கலிக்இபூட்டி
சுந்தரமானமுகனு சந்திரன்போல்விளங்க
துள்ளுமீசைமுறுக்கி யெல்லோரையுமயக்கி
இந்தவுலகிலே[illegible] யெந்தமாளிட்டிருக்கும்
சொந்தமாகியதேவன் கந்தமணிந்தமுத்து
தாம்தாம்தகஜெம்தரிகிட தகஜெம்சேம்செக-நாதரிதிந்தரி. மது

மதுரைவீரன்வேட்டையாடுகிற-தரு.-இ-ம்-காம்போதி அடதாளம்.

வேட்டைகளாடிட[illegible]னது கண்டு
வில்லும்அம்பும்வில்லுங்கையில் கொண்டு
தாஷ்டகமிகுத்ததுரைவீரன் கையில்
சந்திராயுதமெடுத்துதீரன்
சக்கரம்வளைத்தடிகட்டாரி டாங்கு
தான்சொருகினனிடையில்சூரி
இக்கிலுள்ளபேய்முனிகளஞ்ச துஷ்ட
தேவதைகதவடைத்துக்கெஞ்ச
வீரையனுங்கானகத்தில்சென்றான் அங்கே
வேங்கைபுலியாளிகளைக்கண்டான்
தீரனும்[illegible]ட்டித்துடைதட்டி வாளால்
சிங்கமுயல்யாளிகளை வெட்டி
கானகத்தில்யானையைப்பிடித்து வீரன்
கையினலதின்கொம்பையொடித்து
வானகத்தில்போவெனவேயெத்தி புலி
மானுகளையோடிக்கையால்குத்தி
அண்டரண்டபட்சிகளைச்சாடி மயி
லன்னங்கள்பிடித்துவிளையாடி
வண்டமுனிகானகத்தைவிட்டு வீட்டில்
வந்துஅன்னம்பாலபழம்சாப்பிட்டு
மாதியனுரைத்தபுத்திகேளான் சின்னான்
மனைவியாதேவனுஞ்சொன்னுள்தாளன் வீரன்
சேதியானுறவணைத்துமாது
செல்வமாய்மகிழ்ந்திருக்கும்போது

பொது விருத்தம்.

காட்டினில்வேட்டையாடிக் கடும்புலிசிங்கம்யாளி
தாட்டிகமுள்ளயானை தன்னையும்வதையேசெய்து
நாட்டினிலெவர்க்குமெத்த நலமுள்ளபிள்ளைபோலே
வீட்டினில்வந்துவீரன் மெய்ப்புடனிருக்கின்றானே.

இதுவுமது.

இப்படியிருக்கசாளி லியல்பொம்மணாயக்கனின்ற
செப்பிளமுலையாள்பொம்மி திரண்டநல்லருக்கப்பால்
மெய்ப்புடன்குடிசைகட்டி வேந்தனும்வைப்பதாகச்
செப்பிடவெழுந்துபொம்மி சீக்கிரம்வருகின்றாளே.

பொம்மியம்மாள்வருகிற-விருத்தம்.

மலைகளிவள்தானென்ன மாதர்கள்நெருங்கிச்சூழ
கலைமகளிவளோவென்று காசினியோர்கள்வாழ்த்த
அலைகடல்சூழ்கோனேரிக் கதிபன்பொம்மணநாய்க்கன்
வலதுடன்பயின்றமாது மங்கைபொம்மியும்வந்தாளே.

தரு-இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்—பல்லவி.

எங்குமுள்ளோர்புகழுந் தங்கின்தொட்டியர்குல
மங்கைபொம்மியும்வந்தாளே.

அநுபல்லவி.

சங்கையில்லாதமாதர் தளத்துடனிருந்
திங்கள்முகவதனந் திலேலர்கமும்விளங்க
தாகிடதக்கிட தகஜேம்ஜேம்தரி தத்தளங்குஜெணுதகதிமிதோமென
சரணங்கள். [வெங்கும்

செங்கையிலணிவளை சரிக்ககங்கணங்களும்
திவ்வியமான பணிகளும்
நங்கையரிருபுறந் கவரிசாமரைவீசும்
தளின்முஞ்சுக கெலிப்பும்
தங்கமயமாய்மேனி தகதகென்றொளிசெய்ய
மங்களத்துடன்மாதர் மகிழ்ந்தெச்சரிக்கைகூற (எங்கும்)

தோகைமயிலின்சாயல் குலுக்குமுகத்தளுக்கும்
சுந்தரமுளள மெலுக்கும்
தேகமினுக்குங்கோல விழிகளுந்தேன்மொழியுந்
சிந்தூரம்பொட்டி னொளிவும்
நாகரீகமும்மி நயமுமொய்யாரமும
சாயல்மயிலன்னம்போல் தானேநடனஞ்செய்து (எங்கும்)

நடனசங்கீதமேள முடனேமிகுவல்லாச
நடையும்வென்ன முத்தின்குடையும்
கடினமொழியுங்கயல் விழியும்பசுங்கிளியுங்
கருணைதங்கிய மதியுங் —
இடமுமினியசுக செயமுமெவர்க்குமின்பத்
தடம...கும்ப ஸ்தானங்களதுகுலுங்க(எங்கும்)

விருத்தம்.

நடனசங்கீதமேள நாட்டியத்துடனேமாதர்
இடவலஞ்சூழ்ப்பொம்மி யெழுந்தவள்குடிசைசென்று
இடருடனிருக்கும்போது இரண்பொம்மநாயக்கன்
மடமயில்தனக்குக்காவல் வைத்திடநினைந்திட்டானே.
காவல்வைத்திடவென்றெண்ணிக் கம்பளப்பொம்மநாய்க்கன்
ஆவலாய்ச்சின்னனென்தன்னை யழைத்தெந்தன்மகட்குநீயோய்
சாவதானமதாய்த்தோஷ சஞ்சலம்வந்திடாமல்
காவல்காத்திடுவாயென்று கருத்துட னுரைசெய்தானே
உரைசெய்யக்கேட்டுசின்ன னுவந்தெழுந்தகத்தில்வந்து
விரைவுடன்விருந்துபூண்டு வில்லம்புகையிற்கொண்டு
பிறைநுதல்மகின்மாது பேட்டைபொம்மியனாக்காக்கத்
துரைபொம்மநாய்க்கன்சொன்ன சொற்படிநடந்துசென்றான்.
சென்றவன்குடிசைமுன்போய் தேன்மொழிபொம்மியாளை
நன்றுடனிருபத்தெட்டு நாளுமேகாக்கும்போது
சென்றிடுமொருநாள்தன்னில் செகமெலாமிருண்டுமேகங்
கொண்டுமேமழைதான்பெய்யுங் கொடுமைகண்டறிந்திட்டானே
மனதினிற்கவலைகொண்டு மாதியச்சின்னனப்போ
தனதுள்ளமகளைப்பார்த்துத் தளர்ந்துமேயுரைக்கக்கேட்டு
உனதிடமகளிருக்க உள்ளத்திற்கவலைவேண்டாம்
வினவிநீயெனக்கிப்போது விடைகொடுத்தனுப்புமென்றான்
விடைகொடுத்தனுப்புமென்ற வீரயன்மொழியைக்கேட்டு
இடருடன்சின்னன்மெத்த சிந்தையில்மகிழ்வுகொண்டு
தடைவறச்சென்று அந்தத்தையல்பொம்மியனாக்காத்து
அடைவுடன்வருவாயென்று அனுப்பிடநடத்திட்டானே.

மதுரைவீரன்பொம்மியம்மாள் காவலுக்குவருகிற

தரு-இ-ம்-ஆனந்தக்களிப்பு

தன்னதன-தனதந்தனனை-தன-தனனதன-தனதந்த-னதந்தனனை
மாதியனுரைத்தமொழிகேட்டு (வீரன்)

மனதினில்சந்தோஷமாகவேயெழுந்து
நீதியுடன்னம்புசித்து — மருங்கிப்
நிலைபெற்றசல்லடங்கச்சையுங்கட்டி
சந்தனம்புனுகுமலர்சூடி — சிரசில்
சந்திரகாந்திபுருமாலைசரிகையுங்கட்டி
அந்தமுடன்முத்துக்கடுக்கன் — காதி
லணிந்துமேமுருகுதனையழகாகப்பூண்டு
கண்டகாழுடன்முத்துமாலை — நல்ல
கனகநவமணிமாலை கழுத்திலேபூண்டு
வண்டரிடநெஞ்சங்கலங்க — முறுக்கு
வளையுடன்முகநாரிவச்சிரவளைபூண்டு
கைவிரலில்கணையாழிபூண்டு — பாங்கு
கட்டாரிவளைதடியுங்கைச்சூரிகொண்டு
சையோகமாகதுரைவீரன் — துட்டுக்
தடியுடன்மந்திரவாள்சக்கரங்கொண்டு
மிதியடியுமிருகாலில்தொட்டுக் — கொண்டு
மின்னலிடுவெளிச்சமதில் மிதித்தேநடந்து
மதிபொம்மியாள்குடிசைநாடி — நடந்து
வருகிறான்வீராயனுமனவேகமாக

தனனதன-தன்தநனனா

விருத்தம்.

வடிவழகானவீரன் மங்கைமேலாசைகொண்டு
விடியுமுன்னவளைக்கூடி மேவிடவேணுமென்று
துடியுடனடந்துகாட்டில் தோகைபெண்ணிருக்கும்பச்சைக்
குடிசையினருகில்வந்து குணமுடனிற்கின்றானே.

கட்டளைக்கலிப்பா.

வந்துவீரன்குடிசைக்கருகாக
மங்கைபொம்மிக்குமையல்மேறுகவே
கெந்தம்பன்னீர் புனுகுசவ்வாதுகள்
கீறிமார்பிலணிந்திடும்போதிலே
சந்தனப்பொடிவாசங்குபீரெனத்
தையல்பொம்மியு மையல்பெருகியே
விந்தையாகவெளியினில்வந்தவள்
வீரனிற்பதைக்கண்டுமொழிவாளே.

பொம்மியம்மாளுக்கும் மதுரைவீரனுக்கும்-தர்க்கம்

சிசபக்தியம்.

பொம்மி ஆரடாபாவி நீஅர்த்தராத்திரியிலே

நீருடன்வந்தவன்செப்புவாய்நீ
(வீரன்) செப்புவாயென்னிலென் சேதிகேள்மாதியன்
மெய்ப்புடனருள்முத்துவீரனுனே
(பொம்மி) மாதியன்மகனேநீவந்தவாறென்னடா
நீதிசேர்மாதிய னெங்குசென்றான்
(வீரன்) மங்கையென்தந்தையுமழையிருட்டானதால்
...லாசாமலேயென்னைப்போவென்றான்
ஆகையாலுன்னுடைய அருகில்வந்தேன்
மாய்கைபோல யிருட்டானதாலே
ஏகமாய்விசகமேலாடுதிப்போ
தோகையேதய்வுசெய்யடி சுகுணமாமே.

பொம்மியம்மாள்சொல் கந்தார்த்தம்.

தோகையேதயவுசெய்வாய் சுகுணமானேயென்று
வாகலாவார்த்தைப்பேசு மாதியன்மகனேகேளாய்
சாகிறகாலம்வந்து தலைப்புழுகிறந்துபோச்சோ
...கியேபோடாபாவி
ஏண்டாகொடுமைபேசுறாய்-மாதியப்பையா
ஏண்டாகொடுமைபேசுறாய்
ஏண்டாகொடுமைபேச வேண்டாமடாநீசத்
தீண்டாப்பயலேயுன்னை மாண்டாலுந்தொடுவாரோ—ஏண்

மதுரைவீரன்சொல்-கந்தார்த்தம்,

மாதியப்ப...லென்றென்னை மரியாதைபயமில்லாமல்
சேதிகள்துணிவாய்ப்பேசுந் சேயிழைபொம்மிமாதே
நீதியோமழையில்நானும் நிற்பதைப்பார்த்திருக்க
ஈதினியென்மேல்மோடி
இப்பவுஞ்செய்யலாமோடி-அன்னமேயிந்தச்
சற்பனையாகுமோபோடி.
அப்பன்சலுகையென்ன ஆதரவோவுனக்கு
எப்படியுமனது ஒப்பாமலேநீமோடி—இப்ப

விருத்தம்.

ஆரடாபாவியிந்த அர்த்தராத்திரியில்வந்தாய்
கூரடாயில்லாவிட்டால் கொடியவென்கைவாளாலே
பாரடாவிருதுண்டாகப் பகுந்துவுன்னுடலைவெட்டி
வேறடாசெய்வேனென்று மெல்லியாளுரைசெய்வாளே

தர்க்கம்-இ-ம்-மோகனம்-அடதாளம்

பொம்மியம்மாள்சொல்லல்

சீதடாசிறுபிள்ளாய் பீரவினில்கள்ளன்போலே

இவிடத்திலவந்தவனியாரு-அடா-இப்பொழுதே-புன்னைக்கூறு

மதுரைவீரன்சொல்லல்.

கூறுமெனைவே[illegible]ன்னைக் காறுபாறுசெய்யுறாய்
கொம்[illegible]ரநாயன் மகன்தானென்னை
கூடிறு[illegible] சுகந்தான்

பொம்மியம்மாள்சொல்லல்.

கூடிச்சுகியமென்ற வேடிக்கைவார்த்தையிங்கே
கொண்டுவருகலாமோ மூடாநாமும்
பண்டுபழகினமோ போடா

மதுரைவீரன்சொல்லல்.

போடாவாடாவென்று மோடியாய்ப்பேசாதே
பெண்ணேநாமிருவருஞ் சோடு-அடி.
கண்ணேவந்தணைந்தென்னைக் கூடு

பொம்மியம்மாள்சொல்லல்.

வந்தென்னைக்கூடுமென்று சொந்தம்போலேயுரைத்த
மார்க்கத்தைப்பாலேநீ போடு-இந்த
வாயிடும்வேண்டாகெட்ட கேடு

மதுரைவீரன்சொல்லல்.

கேடென்னவுனக்குப் பேடுஞ்சேவ[illegible]ம்போலே
கிட்டியேசேர்ந்திருக்க வா[illegible]-பேதைக்
கிருதுசெய்யலாகுமோ போடி

பொம்மியம்மாள்.

வாடிபோடியென்று வார்த்தைவித்யாசஞ்சொல்ல
நாடியநாக்கையறுப் பேண்ட-என்னைக்
கூடத்தகுமோவுனக் கேண்டா

மதுரைவீரன்.

கூடத்தகுமோவென்ற பேடைமயிலேபொம்மி
கொஞ்சிவந்தணைந்தென்னைச்சேரு அடி-
வஞ்சியேயென்கவலை தீரு

கொச்சகம்.

என்கவலைதீருமென்று ஏழைமதியாலுரைத்தாய்
உன்கவலைதீர தற்குன் னுள்ளவரைத்தானழைப்பாய்
பெண்கவலைபாராத பேயாபோவென்றுநெஞ்சில்
நன்கவலைகொண்டுபொம்மிநாயகியுஞ்சொல்வாளே.

பொம்மியம்மாள்சொல்-தரு
இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

இதுவுனக்கழகல்லடா-சக்கிலியாகீ
எட்டியப்பாலில்லடா
துதிசெய்துபண்ணிடுந் தொழில்மாகேளுடன்
பதில்சொல்லியெனைக்கூடி பெருமைவந்துபாவிபாவி (இது)

மதுரைவீரன்சொல்லல்.

தயவுசெய்தெனைச்சேரடி-அன்னமேபொம்மி
சந்தோஷயென்முகம்பாரடி
சயமும்பயமுஞ்சொன்னால் நான்போகுவழியெங்கே
செயமுமபசெயமுஞ் செகத்திலொருவர்பங்கோ (தய)

பொம்மியம்மாள்.

செயமென்னசெயம்போடாசக்கிலியாவென்
சேதியையறியாயோடா
பயமில்லாமலென்னைப் பரியாசஞ்செய்கிறாய்
சயமாயெனக்குரிய சொந்தமாமன்மகன்போல் (இது)

மதுரைவீரன்.

மாமன்மகளும்வேறையோ-அடிநான்சொந்த
மச்சானெனபதுபாராயோ
காமன்கணைதொடுக்கக் கலங்குதெனதுமனஞ்
சோமன்முகவதனத் தோகைமயிலேபொம்மி (தயவு)

பொம்மியம்மாள்.

மனதுகலங்காவாறடா-சக்கிலியாகீ
வந்தவழியைப்பாரடா
தனதுமொழிபகரத் தகுமோடாவுனக்கிப்போ
எனதுமனிதர்கண்டா லிருபேரையும்வதைப்பார் (இது)

மதுரைவீரன்.

வதைத்தாலும்பெரிதல்லடிபொம்மியுந்தன்
மனதென்னகருங்கல்லடி
பதைக்கபதைக்கவென்னைப் பாவிவெளியில்வைத்து
மதக்கத்துடனிருக்கும் மங்கைமயிலேபொம்மி (தயவு)

பொம்மியம்மாள்.

அடியடியெனப்பேசுறாய் அடட்டமெத்த
அதனைவீச்சுகள்வீசுறாய்
மடிபிடித்தென்னுடன் வழக்காடவந்தாயோ
குடிகேடாநீயெந்தன் குடிசைமுன்னிற்பது (இது)

மதுரைவீரன்சொல்விருத்தம்.

குடிகேட்டனெனவுரைத்த கோதைமாமயிலேபொம்மி

துடியுடன்கோபங்கொண்டு சொல்வதைமறந்திளந்தன்
வடிவழகதனைப்பார்த்துமனதுவைத்தின்றாத்திரி
விடியுமுன்னென்னைக்கூட்டி மேவியென்மயல்தீர்பெண்ணே.

மதுரைவீரன்சொல்-தரு

இராகம்-மோகனம-கல்யாணி ஆதிதாளம்.

மையல்மீறுதேபெண்ணே-என்னை
மருவிச்சேரடிகண்ணே.
தையலர்கரசேயென்னைச் சந்தோஷமாய்ச்சேரடி
தானே-செழுந்-தேனே- (மையல்)

பொம்மியம்மாள்சொல்-தரு.

அடடாகொஞ்சப்பேச்சு-உனக்
கேண்டாயிந்தவெறும்வீச்சு
பாதகத்தனஞ் சொல்வதால்வரும்
பழியோபோடாவெளியே (அடடா)

மதுரைவீரன்சொல்-தரு.

வெளியில்போவதோநாயம்என்னை
வேண்டிச்செய்யடிநேயம்
பழிகள்வந்தாலும் வரட்டுமென்முகம்
பாரு-கூடிச்சேரு (மையல்)

பொம்மியம்மாள்சொல்-தரு

கூடமனதிலெண்ணாதேயேழைக்
குறும்புஇக்கேபண்ணாதே
மாட்டிறைச்சியின் தோல்பணிசெய்யும்
மதியோஉந்தன் விதியோ (அடடா)

மதுரைவீரன்சொல்-தரு.

விதியென்னவென்னைக்கூடமனம்
விரும்பிவந்துன்னைநாட
சதிசெய்யாதே வீண்போகாதேயென்
தாவம்-ஆண்-பாவம் (மையல்)

பொம்மியம்மாள்சொல்-தரு.

பாவமென்னடாஎனக்குப்பரி
யாசமென்னடாவுனக்குப்
கோபம்வந்திடும் இனிமேலுந்தன்
கொல்வேன்-மொழி-வெல்வேன்

மதுரைவீரன்சொல்-தரு,

வெல்லவென்தனைப்படுமோகாம
வெற்றாலுந்தனைவிடுமோ

வல்லமைத்தனம் பேசினனுடன்
மாதேநீகூடவாதே (மையல்)

பொம்மியம்மாள்சொல்தரு.

கூடவென்றால்கோடிசேனைவந்து
கொல்லுமுந்தனைத்தானே-
காவல்காத்தது போதுமப்பாலே
கடப்பாய்வெளியில்நடப்பாய் (வதடா)

மதுரைவீரன்சொல்-தரு

வஞ்சியேயுந்தன்மோக வலையிலேசிக்கியானும்
பஞ்சைசயைப்போலேயுள்ளம்பரதவித்தலையக்கண்டு
நெஞ்சினிலிரக்கமில்லாநிஷ்டூரவார்த்தைசொல்லும்
ரஞ்சிதமயிலேகோஞ்சி நயந்தனைபொம்மிமாதே.

மதுரைவீரன்சொல்லும்லாவணி

ரஞ்சிதமயிலேகொஞ்சிவந்தணைய வஞ்சியேசீவாடி-உன்
நளினமுகமிருவிழி நயமதுகண்டேன் ஞவியுமுருகுதடி

பொம்மியம்மாள்சொல்லல்.

ஆவியுமுருகிடத்தாவியேவருகிற பாவிப்பயல்போடா-உன்
னகமதினிலிந்தச்செகமதில்மாதர்மே லாசைகொண்டாய்மூடா

மதுரைவீரன்சொல்லல்.

ஆசைகொண்டேனடிமோசமில்லாமலே பேசடிமடமானே-என்
அங்கமுருகுதென்மங்கையேநீயென் அருகில்வாமானே

பொம்மியம்மாள்சொல்லல்.

அருகினில்வாவென்றயூமைபோலுளைத்திடும் அறியாப்பயலேபோடா
போனலாச்சுதுஇனிமேல்பேச்சுக்கள்பேசினு லாக்கினைவருங்கேளடா

மதுரைவீரன்சொல்லல்

ஆக்கினைதருபொம்மணநாய்க்கன்மகளே அறிவேனுன்சேதிஎன்னை
அணைந்துமேமதகேளியாடியேமகிழவ தல்லவோபெருநீதி
நீதியென்னடாபாவிமாதியன்மகனே நீயார்நானாருநீதான்
நிற்கிமவிடம்விட்டுஇக்கணமுன்மனை நிமிஷத்திற்போய்ச்சேரு
போவென்றாலுனக்கினிகாவலாரடிஇங்கே பொம்மியென்னுமாதேஎன்
னைப்-பூரிப்பாயணையாமல்வீரியம்பேசுறாய் பெண்ணேவீண்வாதே
பெண்ணைவாதுநீபேசுறாயென்றின்னம் பிதற்றுகிறாய்மூடாஉந்தன்
பிரட்டுக்கும்வெறுப்பித்துருட்டுக்குப்பயப்படேன நீபோடா

மதுரைவீரன்சொல்கந்தார்த்தவெண்பா

போவென்றெனையுரைத்தபொற்கொடியேபொம்மிமுன்னுன்
சாபமெனக்கீசனிட்டதாலகையினால்ஆவலுடன்

காவலுக்குவந்தேனடி கன்னியேஉன்மையல்கொண்டு
மேவியிருபேரும் விளையாடுவோம்வாராய்

பொம்மியம்மாள்சொல்-தரு-இ-ம்-சங்கராபரணம்

விளையாடவாரேன் வீண்வார்த்தைபேசவந்தாய்
நாளைக்காலமேயுன்னை காக்கையருப்பேன்
அருக்குத்திராணியற்றவே அருமைபிளஞ்குயிலே
மருவும்வாலரதியே வஞ்சியேவாராய்
மருவமனந்துணிந்த மாதியச்சின்னான்மகனே
வரும்வினையறியாமல் வாதுபேசுறாய்
வினையேதெனைமருவில் வேண்டுஞ்சுகம்பெறுவாய்
உனையேகொண்டுசெல்வேனு னூர்வழியிலே
கொண்டுசெல்வேனென்றுரைத்த கொழுப்பையடக்கியுன்னைத்
துண்டுதுண்டாய்வெட்டிநான் தூரவெறிவேன்
துண்டுதுண்டாய்வெட்டுகின்ற தொட்டியப்பெண்மாதரசே
பெண்களுக்கித்தனை பெருமையேதடி
ஏதடிபெருமையென்று யிஷ்டமுண்டோமனமினிநீதான்
காதல்கொண்டுளருகிறாய் கள்ளன்போலவே
கள்ளனும்வெள்ளனும்வென்னைக் கலந்தனைந்தால்தெரியும்
தெள்ளமிர்தமேமனது செய்ய[illegible]பொம்மி
செய்யவுலகெலாந் சிறக்குந்தொட்டி[illegible]பெண்மேல்
மையல்கொள்ளத்தகுமோ மாதியன்மகனே

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

மாதியன்மகனென்றென்னை மரியாதையில்லாமல்தான்
சேதிகள்துணிவாய்ப்பேசுஞ்சேயிழைபொம்மிமாதே
நீதியோமழையில்நாளும் நிறப்பதைப்பார்த்திருந்தும்
அதினியென்மேல்மோடி இரங்கடி சகியேபொம்மி

தர்க்கம்-தரு-இ-ம்-காம்போதி

என்னடிபெண்மணிசகியே யிப்படிசெய்கிறாய்
இன்னமுமுன்கல்மன திரங்கிலையோடி
கல்மனதிரங்கெனவே காவலனையிக்குவந்து
வலமனதுடனிருட்டில் வாதுபேசுகிறாய்
இங்கமழைக்காலிருட்டி லெந்தனைத்தனியவைத்து
நிந்தனைசொல்வதுனக்கு நீதியோபொம்மி
நீதியல்லவென்றுனது சாதிமதியாலுரைத்துச்
சேதிசொல்லுறாய்மாதியச் சின்னான்மகனே
மாதியச்சின்னான்மகனென் றோதியபெண்ணமிர்தமே

ஆதியில்நான்றுந்தவறாது யறியாமல்சொன்னாய்
வந்தவகையறியாமல் நிந்தனைசொன்னேனெனவே
சொந்தம்போலுனைக்கவந்தாய் துரோகிநீபோடா
துரோகியென்றாலுந்தன்மீதிற் சோபமுண்டோவெந்தனுக்குப்
போசனமுண்டாகுமடி பேடைமயிலே
பேடைமயிலேயெனவே சாடைசொன்னதாலுமென்னைத்
கூடவேதகுமோபோடா மூடசென்மமே
சென்மமென்னசென்மமுன்னைச் சேர்ந்தனையாமல்விடுத்தால்
சென்மம்வந்துசேருமடி காதல்ரதியே
காதல்கொண்டால்பூதலத்திற் கண்டவர்களேசுவார்கே
நீதமல்லபோடாபாவி நீவெளியிலே

மதுரைவீரன்சொல்-கொச்சகம்.

நீதமல்லபோவெனவே நிஷ்டூரவார்த்தைசொல்லும்
பேதைமதியைப்படைத்த பெண்ணரசேகேளுமென்னை
பாதமிரண்டுநோகுதடி பாவிமனமிரங்கிலையோ
தேசமில்லையுந்தனுக்குத் தேவிபொம்மிநாயகியே

வசனம்.

அடிவாடி பொம்மிநாயகியே யிப்போது நான் சொல்லிய வார்த்தை நீதமல்லவென்று நீ நிஷ்டூரமாகிய வார்த்தையாடி என்னை ஓடிப்போவென்று சொல்லுகிறாய் நான் இந்நேரமட்டும்மழையிலே நின்று என்பாதம் ரண்டும் நோகுது இப்போதாகிலும் மனமிரங்கி என்னைக்குடிசைக்குள்ளழைத்துச்சேர்ந்தனையடிபொம்மிநாயகியே.

மதுரைவீரன்சொல்-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

அன்னமேதயவுசெய்யடி உன்மே
லாசைகொண்டுவந்தேனென்னைமோசஞ்செய்யாதேபொம்மி
வன்னமயிலேமத னென்னையும்வருத்துகிற
வாதைபடமுடியாமல் கோதையேயுன்னிடம்வந்தேன்
கன்னலேயெழுந்திருந்து என்முகமலரைக்கண்டு
நன்னயத்துடனென்ன யின்னமுமனதில்லையோ (அன்)

என்னவார்த்தைபேசுறாய் போடாபாவிநீ
எத்தனைவார்த்தைசொன்னாலும் நத்திடேன்புத்தியில்லாமலென்ன
அன்னிதஞ்செய்யவோவிந்த முன்னிருட்டிலேவந்து
ஆசைகொள்ளும்படிசெய்தாய் மோசநாசமல்லவோடா
கன்னிகழியாதமுன்னே யென்னைவலதழிக்கிட
எண்ணினாலுனக்குமின புண்ணியமோகுடிகெடா-என்ன
காவலெனவந்தே னுவலின்றதிரக்
கனிவாயிதழமிர்த மூற

மேவச்சமயம் இன்பங்களில்
பூவுலகெல்லாம் புகழ்ந்தேவனென்று குழியாமல்
பெண்ணேயெந்தன் வரலாறையின்னதென்றறியாமல்
கோபஞ்செய்வதுனக்குப் பாபமல்லவோபொம்மி
கொஞ்சியழிவிரக மிஞ்சிரஞ்சிதவஞ்சி-அன்ன
வசைகொள்வதுபாபமல்லவோ போடாபழிகாரநீயெனக்கு
வாய்பேசவந்தாயோடா பெருங்கேடா
தேசம்புகழ்கோனேரி வாசகனெந்தந்தைகண்டால்
தெட்டுங்கர்வமடங்கவெட்டுவான் ரண்டுதுண்டாய்
மோசம்வர்ப்போகுமுன் நீசமதிவிட்டிடுவாய்
மூடிவந்தவழியைத் தேடியோடிப்பேகாமல் (என்ன)

மதுரைவீரன்சொல் சேபத்தியம்.

கஞ்சினுமிகுபார்வை நளினமுந்தேசுசும்
மஞ்சுலவுகூந்தலின் வரிசையழகும்
செஞ்சிலம்பணிபாத சிற்றடிநடக்கையும்
கொஞ்சுவாயதரமுங் குணமறிந்து
வஞ்சியேயதிமோக மிஞ்சியேபெருகுதுன்
நெஞ்சினிற்கபடத்தை நீவிடுத்து
கொஞ்சிவந்தணையடி கோமளகுணகர
ரஞ்சிதப்பொம்மணாளருளுமயிலே
மிஞ்சியவிரவேதனையினாலே
பஞ்சையைப்போலேநான்பரதவிக்க
வஞ்சகஞ்செய்வதுமார்க்கமல்ல
தஞ்சமேநீயடி சரசமயிலே

தர்க்கம்-தரு-இ-ம். ஆனந்தபைரவி.

வஞ்சிரஞ்சிதபொம்மிநாயகி எந்தன்
வருத்தம்பாரடிகொடும்பாதகி
பாதகியென்றென்னைச்சொல்லுறாய் உன்னைப்
பதைக்கவேவதைசெய்துகொல்லுவேன்
பதைக்கவெனைவதைத்தபோதிலும் அந்தப்
பாவமுனக்கேயெய்துமீதிலும்
பாவமெனக்கேண்டாமாதியா இந்தப்
பரியாசமுனக்கேண்டாநீதியா
நீதியென்னடியிந்தநாளையில் விரகம்
நிற்கப்படாவிருட்டுவெளியில்
நிற்கப்படுவதில்லையென்றேய்க்கிறாய் கொஞ்சம்

நெகிழ்ந்தவிடங்கெல்லவே பார்க்கிறாய்
இந்தவேளை தயவுசெய்யடி பொம்மி
என்மீதினில்மனதுவையடி
மனதுவைத்துனைச்சேரக்கூடுமோ உன்னை
மருவவென்மனஞ்சற்றுமாகுமோ
ஈடந்திடுமென்றுபொம்மி நாயகிகோபங்கொண்டு
தட்டம்புயமதனாவீரசாமியை வெளியில்வைத்து
அடர்ந்துமேகுடிசைசென்று அரிவையாளயிருந்தபோது
திரமுடன்மதுரைவீர திராணுமுனைசெய்வானே

தர்க்கம்-தரு-இ-ம்-லாவணி

மாதேநீகுடிசையிலோடிப்போய்ப்புகுவ தேனோ-நான்
மழையில்நின்றுநனைந்துருகியுடல் மெலிவேனோ-மெலிவேனோ
உருகியென்னுடல் மெலியளந்துநிற்பானோ-நீ
யுனதுதந்தைதனைவரவேசொல்லு போய்தானே-போய்தானே
தந்தைவந்தாகினி யிந்தமழையில்நனைவாரோ-அவர்
தனையன்வந்துபடுந்துயரை வெளியில்வந்து பாரோவந்துபாரோ
வந்துடயரென்வேரிங்கேதயானமொழி சொன்னால் சொன்னால்
வா...வெந்துவிடும்ஞாயமல்லபோடா பின்னால்-போடா-பின்னால்
போடா...டாவென் மூடாமூடியாய்ப்பேசாதே-இதைப்
பொறுத்து...கொள்ளடியென்வருத்தம்பாராமல் வீசாதே வீசாதே
வெறுத்தும்பாரடியென் முறத்துக்காரணன்போல்நீதான்சொன்னா
வாய்கிழித்துன்னைத் தீயில்கொளுத்துவேநான்தானடேநான்தான்
தீயில்கொளுத்திவிடும் நாய்க்கர்பெற்றபொம்மிமாதே-என்
சேதியின்னமறியாமல் மெத்தவே துள்ளாதே-துள்ளாதே
துள்ளாதேயென்று சொல்லாதேகோபம்பொல்லாதே--வெகு
துரிதமாகவேயோடிப்போடா நில்லாதே-நில்லாதே

விருத்தம்.

துரிதமாயோடிப்போகச் சொன்னபொம்மியோகேளாய்
அரியின்முன்கரிதானின்று அதட்டினல்பயந்துபோமோ
வரிவிழிமாதேயென்று மனமதுதுணிந்துவீரன்
மருவவேநெருங்கக்கண்டு மங்கையுந்துயர்கொண்டாளே.

இதுவுமது.

தொட்டியகுலத்துராச துரந்தரன்வயிற்றுதித்தேன்
கட்டியேகொடுத்தெனக்குக் கன்னிதான்கழியுமுன்னே
தொட்டிசக்கிலியன்கூடச் சிரந்தனில்விதியோவென்று
மட்டிலாத்துயரங்கொண்டு மங்கையும்புலம்புவாளே.

பொம்மியம்மாள்-புலம்பல்

தரு-இ-ம-பைரவி-அடதாளம்.

கண்ணிகள்.

இந்தவிதிக்கென்னசெய்வேன்சுந்தரனேகாலகண்ட
ஈசா-கிரி-வாசா
விந்தையுடன்காவலுக்குவந்தனழிக்கத்துணி
வேனோ-விதி-தானோ
நீதிசேர்பொம்மணநாய்க்கன்சோதியோலென்னைப்பயின்ற
நேரம்-பொல்லா-வாரம்
இதுசெய்தெனையிப்போதுமாதியன்மகனழிக்கச்
சென்றான்-மையல்-கொண்டான்
மாலையிட்டெனக்குமணக்கோலஞ்செய்யுமுன்வேகூட
வந்தான்-காத-லுந்தான்
பாலமிர்தபானமதில்காலவிஷங்கலந்தாற்போல்
பாவி-வாரான்-தாவி
ஒருவர்கதியுங்காணேன்வருவாரையுங்காணேன்
ஓடி-என்னை-நாடி
திருவேழுத்தாலம்மாள்திருவைவைத்தெனையாளுந்
தேவி-ஐயோ-பாவி

விருத்தம்.

இவ்வகைபொம்மிகூறி யேங்கியேபுலம்பும்போது
அவ்வனந்தன்னைவிட்டு ஆக்கிரமத்துடனேவீரன்
தவ்வியேகுதித்துத்தாண்டித் தையலைக்கூடச்சென்று
ஒவ்வியேகுடிசைசென்று ஒண்டோடிமுன்னின்றானே.
குடிசையிற்புகுந்துவீரன் கோதையையெடுத்தணைந்து
மடியின்மேல்வைத்துக்கொண்டு மலர்க்கண்ணீர்துடைத்துச்சொல்வான்
துடியிடைமாதேயுந்தன் துயரத்தைவிடுத்துஎந்தன்
வடிவழகதனைப்பார்த்து மனமகிழ்ந்தணைகுவாயே.
நயமுடனுரைக்கக்கேட்டு நாயகிமனதிலுற்ற
துயரமென்பதைவிடுத்துச் சுந்தரமுகமலர்ந்து
தயவுடனிமிர்ந்துவீரசாமிதன்முகத்தைப்பார்த்து
மயலுடன்வீரன்பாதம் வணங்கியேசொல்லலுற்றாள்.

பொம்மியம்மாள்சொல்-தரு-இ-ம-பந்துவராளி.

கண்ணிகள்.

மன்னவனேயென்னரசேமாரனேமுத்துவீராகேளாய் நீ
தென்னவனேஎஸ்பமேசெங்கமலவாசனே சுவாமி

அ

இந்திரனேவானவனேஇக்குவேளமதனே சுவாமி
சந்திரனேசூரியனேகாரணியின்மன்னவனே சுவாமி
திக்கிதுவளருந்திரனேதேவனே அறிகிலேன் சுவாமி
சக்கிலியன்வீட்டில்வந்து தான்வளர்ந்ததென்னசொல்லுஞ்சுவாமி
ஆர்பெற்றகண்மணியே பூருவத்தைச்சொல்லுமெந்தன் சுவாமி
சிறுதலையானாலுமாத்திரசேதியைபொறுத்திடுவீர் சுவாமி

விருத்தம்.

மனமதுமகிழ்ந்துபொம்மி மன்னவன்முகத்தைப்பார்த்து
தனதுடன்கேட்கவீர சாமியுமகிழ்ந்துசொல்வான்
எனதாஅற்புதமேபெண்ணே யின்பமாய்க்கேள்நீயென்று
குணமுடன்பூருவோத்திரங் கோதையர்க்குரைசெய்வானே.

மதுரைவீரன்சொல்-சிந்து.

மானேமரகதமேஎந்தன் வஞ்சியரேமோகரஞ்சகமே
தேனேஅமிர்தகுணமாதே செப்புகிறேன்கேள்இப்புவியில்
ஆதிசிவனருளால்காசி யாண்டிடுமன்னகர்தன்னிலே
நீதியுடன்பிறந்தேன் அன்று நேரிழைமன்னர்கூறிடவே
மெத்தமனமகிழ்ந்துமன்னன் வேதமறையோரைத்தானழைத்து
பக்தியுடன்தொழுதுஎந்தன் பாலன்பிறந்தபலாபலனை
பார்த்துவுரையுமென்றே அந்தப்பாரமுடிமன்னன்கூறிடவே
நேத்தியுடன்மறையோர்சாஸ்திரந்தன்னைபார்த்துவுரைத்திடுவார்
மைந்தன்கழுத்தினிலேகொடி மாலைவிழுந்துஇருக்குதையா
அந்தச்சுதனிருந்தால்உமக் காகாதுகாணிந்தபாலகனை [வே
கொண்டுபோய்க்கானகத்தில்வைத்துக் கொப்பனவாவென்றுசெப்பிட
மன்றில்விழுக்கழுதுகாசி மன்னனுந்தேவியுந்தான்புலம்பி
சோசியர்சொற்படிக்குஎன்னைச் சொர்ணதாம்பாளத்தில்வைத்தெடுத்து
தாசியராடல்செய்யசேனை தன்னுடன்மந்திரிமார்கள்சூழ
வந்துவனத்தில்வைத்துப்போக மங்கையேயானங்கிருக்கையிலே
ஐந்தலைநாகமதுவந்து ஆதரவாயென்னருகிருந்து
சோதிவெய்யிலைமறைக்கநான் துயர்த்துடனேபுலம்பையிலே
மாதியச்சக்கிலிச்சிவந்துமைந்தனெனவேயெடுத்தணைந்து
சீராய்முலைகொடுத்து என்னைச் சேயெனவேவளர்த்தெடுத்து
பாரோரறிந்திடவே தமிழ்ப் பள்ளியிலேயென்னைப்படிக்கவைத்து
வாலிபனாயிருக்கையிலே அந்த மாதியச்சின்னானென்னையழைத்து
தூலினிடைமாதைச் சென்று நுண்மையுடன்காருமென்மகனே
என்றுஅனுப்பிவைத்தான் நானு மேகிறைமுடிவேந்தன்காவலுக்கு
இன்றுவரைநடந்த சேதிஇந்தமட்டும்நானறிந்ததென்று
சொன்னான்துரைவீரன் அப்போ தோகையெனும்பொம்மிதான்கேட்டு

நின்றுச்சுகாரியங்கள் என்று நாயகிமெத்தமனமகிழ்ந்து
கட்டிலின்மீதிருந்து வீரன்கன்னத்தலெட்டியேமுத்தமிட்டான்
மட்டிலடங்காதவீரன் மங்கையைக்கூடவேமுத்தமிட்டு
துரைசாமிவீரையனும் அந்தத்தோகையுடுத்திருந்துயில்களைந்து
விரைவாகத்தன்னுடைய வெள்ளைமெல்லியதுப்பட்டாதானவிழத்து
சிங்காரியுடனே செகமாரன்கலந்திடும்பாவனைபோல்
கொங்கைதனைநெருடி வீரன் கொக்கோகவித்தைதொழில்புரிந்தான்
மரித்துவிளையாடி-பொம்மி சித்தமகிழவேசேர்ந்தணைந்து
இருக்குந்தருணத்திலேபொம்மி யேகாந்தமாகவெதிர்த்துரைப்பாள்
பொழுதுவிடியதுநான்இன்றுபோய்ப்பிழையுமென்றுநாயக்கன்மகள்
தொழுதுஅனுப்பிவைத்தாள் அந்ததோகையார்க்குத் திடஞ்சொல்லிவி
ட்டு-வலுவேகமாய்நடந்து துரை வந்துதனிதனில்தந்தையாமுன்
னறியாமல்நிற்கிறதைக்கண்டுநொடியேமாதியன்தான்மகிழ்ந்தான்

தந்தனதேனா-தென்னனனே.

பொது-விருத்தம்.

மைந்தனைக்கண்டபோதே மாதியச்சின்னான்மெத்த
[illegible]முடனேகொஞ்சித் தழுவியேமுத்தமிட்டு
வந்தவன்வீட்டிலன்னம் வாருடன்புசித்துவீரன்
விந்தையாயிருக்கும்போது விளம்புவான்மாதிதானே.

மாதியச்சின்னான்சொல்-விருத்தம்.

என்னிடமகனேகேளா யின்றையதினமும்பொம்மி
தன்னிடகாவற்கேகிச் சர்வசாக்கிரதையாகச
சொன்னசொற்றவறிடாமல் தூரவேதினமுகாத்து
நன்னயத்துடனேவீடு நாடியேவருகுவாயே.

வசனம்.

கேளாயென்துகண்மணியாகிய மகனே நேற்றையதினம் பொம்மிய ம்மாள் காவலுக்குச்சென்று காத்திருந்ததுபோல் இன்றையதினமுஞ் சென்று தூரத்தில்நின்று சாக்கிரதையாகக் காத்திருந்து பொழுதுவிடி ந்தவுடன் வருவாயப்பாமகனேவீரையா,

மதுரைவீரன்சொல்வசனம்.

அப்படியேசாக்கிரதையாகக்காத்துவருகிறேன்பிதாவே

பொது-விருத்தம்.

தந்தைமாதியன்சொற்கேட்டு சம்மதித்தெழுந்துவீரன்
விந்தையாய்ப்பணிகள்பூண்டு வெம்புலிபோலேகட்டில
சிந்தையில்துணிவுகொண்டு சீக்கிரமாகவீரன்

வந்திடக்கண்டுபொம்மி மனமகிழ்ந்துரைசெய்வாளே.

பொம்மியம்மாள்சொல்-தரு

இ-ம் சங்கராசரணம்-அடதாளம்,

வாரும்வாருமென் னாசைவரோ அழகில்மிகு
மங்கையர்குணவ சிகரோ
பாருலகுள்ளோ ரறியவே என்னையும்நீ வி
வாகஞ்செய்தெனக் குறியவே
மங்கிலியஞ்சூட்டு மன்னவா னென்னையணிந்து
மையல்தீர்க்கவடிக் கண்ணவா
இங்கிதலீலாவி னோதனே னனவேபொம்மி
எட்டிமுத்தமிட்டு நாதனே
மஞ்சணைமீதினிற் கூடியே இதம்பருகிப்
ப[illegible]சமுடன் விளையாடியே
மிஞ்சியலீலைகள் புரிந்து ஸ்தனம்நெருடும்
மேவடிக்கைவிநோத மறிந்து
தீராதஆசைகள் கொண்டு பொம்மியெழுந்து
திகைத்துரைப்பாள் மனம்விண்டு
வீராதிவீரனே கேளும் ஆச[illegible]ன்று
[illegible]ந்தால்முப்பது நாளும்
நாளை[illegible]பொழுதி லென்னையும் தந்தையழைத்து
நாடியேபோவா னென்றனையும்
மாளிகையிலென்னை வைத்துமே தந்தையெனக்கு
வைத்திடுவான்காவல் சுற்றுமே
உன்னைவிட்டுநா னிருப்பேனோ ஆகாதிமிஷம்
உள்ளமுஞ்சலித் திருப்பேனோ
சங்கையில்லாமலென்னை மருவுந் சாமிநீர்நாளை
சாங்கியவேளைக்கு வருவீர்

விருத்தம்.

சாந்திரசாங்கியவேளை சாமிநீர்வருவீரொன்று
ஆத்திரத்துடனேபொம்மி பங்கமும்பதரிரண்டு
நேத்திரம்நீர்கள்சிந்த நேரிழைபுலம்பக்கண்டு
மாத்தியேதுயரந்தன்னை மன்னவனுரைசெய்வானே.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

பேடைமாமயிலேபொம்மி பெண்களுக்கரசேகேளாய்
நாடெல்லாங்கடந்துநாமும் நலமுள்ளதெற்குசென்று
தேடலாந்திரவியங்கள்திருச்சிறுப்பள்ளிசேர்ந்து
கூடிநீவருவாயாகில் குறிப்புடனசொல்வாய்பெண்ணே.

பொம்மியம்மாள்சொல்-விருத்தம்.

நல்லதுசுவாமியிந்த ராச்சியம்போனாலென்ன
செல்வமாய்வளர்த்தஅப்பன் திரவியம்போனாலென்ன
உல்லாசமனையின்வாழ்க்கை உறன்முறை தாய்போனாலுந்
சல்லாபசரசலோலா சாமிநான்பிரியேனுன்னை.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

என்னைநீபிரியேனென்று இதமுடனுரைத்தாய்மாதே
உன்னையேசடங்குசெய்து உன்தந்தைவீடுசேர்த்தால்
அன்னையுந்தந்தைசுற்றத் தாரையைமறந்துநீதான்
பின்னாலேவருவேனென்று பிலத்துடன்கைதாபெண்ணே.

பொம்மியம்மாள்சொல்-விருத்தம்.

கைதார்சொன்னீரெந்தன் கணவனேசொல்லக்கேளும்
வெய்யவன்தேவர்மூவர் விமலர்கள்விண்மண்ணுள்ளோர்
வையகம்பூமாதேவி மறையவாசாட்சியாக
மெய்யிதுவுமையைவிட்டு விநாடிநான்பிரிந்திரேனே.

மதுரைவீரன்சொல்-விருத்தம்.

வங்கண[illegible]பிரியாதந்தச் மயிலெனும்வடிவினாளே
செங்கையுஞ்சிவந்தமேனி திருமுகமதியேபொம்மி
அங்கேயுன்தகப்பன்வாழும் அரண்மனைகடந்துநாளை
மங்கையுன்படுக்கைவீட்டில் நானுமவந்தெழுப்புவேனே.

பொது-விருத்தம்.

வருகுவேனென்றுசொல்லி மங்கைக்குத்திடமுரைத்து
உருகியேமனதுநொந்து உத்தமன்போலவீரன்
வருவனைதக்கண்டுபின்னுன் மனையுந்தழுவிக்கூட்டி
திருவளர்மனையில்புகிச் செழிப்புடனிருக்கின்றானே.

இதுவுமது

செழிப்புடனிருக்கும்போது தீரன்பொம்மணநாயக்கன்
முழுங்குடன்மகளுக்கின்று முப்பதுநாளுமாக
குளிப்புடன்மிகுசீராட்டிக் கோதைபொம்மியர்க்குத்திஷ்டி
கழிப்புடன்சடங்குசெய்யக் கருத்தினில்நினைத்தெழுந்தான்

(வ-ம்) இந்தப்பிரகாரமிருக்கும்போது கோனேரிப்பட்டணத்தையாள
பட்ட பொம்மணநாயக்கன் தனது மகளாகிய பொம்மியம்மாள் ரு
வாகி முப்பதுநாளானபடியால் அரண்மனைக்கு அழைத்துக் கொண்
போக வருகிறவிதங்காண்க.

பொம்மணநாயக்கன்வருகிற-விருத்தம்.

திரையுடன்தொட்டியர்சேனை நெருங்கியேபுடைதான்சூழ.

பூரீசுபேரிகைடமார முழக்கியேயொலிதுடிக்கத்
திரைகடல்சூழகோணேரித் திருநகர்தன்னையாளும்
துரையெனும்பொம்மணநாய்க்க துரைத்தனவருகின்றனே.

தரு-இ-ம-நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.

துரைபொம்மணநாய்க்கன்வந்தான்-ரதகஜ
துரகபதாதிதளங்களுஞ்சூழ (துரை)

அநுபல்லவி.

மிரகஸ்தூரிகைசின்ன மூத்-கட்
டிஞ்சியவஞ்சிய ரூடனோரஞ்சித(துரை)

சரணங்கள்.

சுகதுகெனக்கொண்டை பிலங்கமார்பில்
தாழிப்பதக்கஞ்சங்கி ராரமுந்துலங்க
பீக்கெனவேயங்கி குலுங்கமுத்தி
ஞலவட்டக்குடை நகமுமவிளங்க(துரை)
மட்டில்லாவகைப்பணி பூட்டிமன்னர்
மயங்கவேநுதல்தனில் வசியமைதீட்டி
தொட்டியர்படைசேனை கூட்டியெங்கும்
துலங்கிடப்புகழ்கீர்த்தி விளங்கவேநாட்டி(துரை)
சித்தமத்தாள முழங்க-ஜெய
ஜெயவெனமுரசொலி திசையெட்டும்விளங்க
பதுமாய்விருதுகள் துலங்க-வெள்ளைப்
பரியேறித்திருமுகம் பரிதிபோலிலங்க(துரை)

விருத்தம்.

பரிசரிசேனைமன்னர் படையுடன்பொம்மணநாய்க்கன்
அரிதமாய்நடத்திச்சென்று தோழியர்தனையழைத்து
வரிவிழிமகட்குஸ்நானம் வகையுடனடத்துமென்ன
சுரிகுழல்மாதர்கூடிச் சுறுக்கில்நீராட்டினரே

நீராட்டித்துகிலுடுத்தி நேரிழைமாரான்கூடி
சீராட்டிப்பணிகள்பூட்டிச் சிவிகையின்மீதிலேற்றி
வாராட்டுங்களபகொங்கை மாதர்களிருபார்சூழ
பாராட்டிப்புகழ்ந்துகொண்டு பட்டணஞ்சேர்ந்திட்டாரே

பட்டணஞ்சேர்ந்தபின்பு பைங்கிளிபொம்மியாட்கு
திட்டெனச்சடங்குசாங்கியஞ் செய்திடவேணுமென்று
கட்டபொம்மணநாய்க்கன் கனதளப்படையோர்சூழ
சட்டமாய்வேதசாஸ்திரச் சடங்குகள்முடிப்பித்தானே

வேதசாங்கியமுடிந்த வேளைசக்கிலிச்சின்னான்

பாதரட்சையுமேகொண்டு பாலவீரனுங்கூட
நீதவான்போலேவந்து நிற்பதைக்கண்டுபொம்மி
காதலாய்வீரனுக்குக் கண்ணைசைகைசெய்திட்டாளே
சைகைகண்செய்தாள்பொம்மி சாதம்வாங்கிடவாவென்று
நயத்துடன்வீரசாமி நல்லதென்றுவந்துசென்றான்
பயத்துடன்பொம்மிதன்னை மாளிகைதனிற்சேர்த்து
செயத்துடன்மறையோர்க்கெல்லாஞ்சிறக்கன்னம்படைத்திட்டாரே
அன்னமும்புசித்துமன்னர் அழகுதாம்பூலம்வாங்கி
மன்னவன்விடையினாலேவந்தவர்விடுதிசேர்ந்தார்
நன்னயத்துடனேபொம்ம நாய்க்கன்மனம்பூரித்து
தென்னவனிருக்கும்போது சின்னனும்மகனும்வந்தார்
மாதியன்வரவைக்கண்டு மன்னவன்பொம்மணநாய்க்கன்
தாதியையழைத்துச்சின்னான் தனக்கின்னம்படையுமென்றான்
ஓதியமொழியைக்கேட்டு உவந்துமேயெழுந்துபொம்மி
மீதியாய்ச்சாதங்கொண்டு வீரையன்முன்வந்தாளே

தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

கண்ணிகள்.

சாதமுங்கறிவகைகள் தட்டிலெடுத்துப் பொம்மி
சக்கிலியன்கொண்டுவந்த தாழியில்போட்டு
நீதமுடன்வீரதுரை நிற்பதைக்கண்டு பொம்மி
நெஞ்சகத்தினிற்கவலைமெத்தவேகொண்டு
மங்கையுங்கலங்கியேகண்ணீர்கள்சொரிய வீர
மன்னனுங்கண்டாசைசெய்தான் மங்கையறிய
அங்கவன்கண்டாசைகண்டு மாதுநடந்தாள் நங்கள்
ஆணிமுத்துவீரனுஞ் சின்னனுநடந்தார்
வந்திருந்துமாளிகையிலன்னம்புசித்து வீரன்
மங்கைபொம்மியைக்களவுசெய்யயோசித்து
சிந்தையுடன்பஞ்சணையின்மேல்வீரன்தான் சித்திரை
செய்யவேகூடாமல் மனதேங்கியிருந்தான்
மாதியனும்வீரையனும்போனவுடனே நாய்க்க
மன்னனுமெழுந்துஅஸ்தமானவுடனே
நீதியுடனேமகளைமாளிகையிலே வைத்து
நேரிழைக்குக்காவலாய்த்தநாழிகையிலே
செந்திருபோல்தாதியர்கள் சூழவேவைத்து வாசல்
சித்திரக்கதவடைத்து முத்திரைவைத்து
அந்தமுடன்பொம்மணனும் வாசல்முன்னிலே கத்தி
ஆயுதத்துடன்படுத்தான் கட்டில்தன்னிலே

விருத்தம்.

கட்டிலிற்படுத்துமன்னன் கண்விழித்திருந்தாக்க
தொட்டியர்சேனைகோடி சுற்றிலும்பாரியோட
மட்டிலாப்பரியிலேறி மலுக்கரும்தட்டிச்சூழ
இட்டமாய்க்கோட்டைநான்கு திசையிலுங்காக்கின்றாரே
காவல்பத்திரமாவைத்துக் காத்துமேயிருக்கும்போது
ஆவலாய்ச்சின்னான்தேவி அருமையாய்வளர்த்தவீரன்
மாவனிந்தபர்மேலாசைவைத்துமேநடுச்சாமத்தில்
பாவையைச்சிறையெடுக்கப் பணிந்தவனெழுந்திருந்தான்
மனந்துணிகதெழுந்துவீரன் மதுபொம்மிகவனத்தாலே
தனைவளர்த்தெடுத்ததந்தை தாய்தனக்குரைத்திடாமல்
க்ஷணந்தனில்பணிகள்பூண்டு தனதுஆயுதமெடுத்து
களிந்துளமகிழ்ந்துகச்சை கட்டியேபுறப்பட்டானே

தரு இம்-புன்னாகவராளி-அடதாளம்

கண்ணிகள்,

கன்னிகைபொம்மியைக்கன்னமிடவென்று
காணியாஞ்சக்கதேவிபாதந்துதி
உன்னிதமாகவேசாரிசெய்துதுரை
உத்தண்டமாகடந்துசென்றான்ரண
கோட்டையைச்சுற்றிலுங்கொற்றவர்சேனையை
கொஞ்சப்படையென்றுநெஞ்சத்திஸ்துரை
காட்டைடெல்லாம்வெட்டிசிட்டுக்கோட்டையிடு
காம்பைவெட்டப்பிரயாசையென்னமோவென்
என்றுதான்மாயப்பெட்டிச்சிமிழ்தன்னையும்
எல்லோர்கள்பேரிலும்வீசிட்டான்துரை
மாயப்பொடிபட்டுமன்னன்படையெல்லாந்
தூக்கில்லவர்வர்வாய்திறக்கவில்லை
கேய்த்துடனக்கோட்டைமதிலேறிக்
நித்திரைசெய்திடும்மா[illegible]கா
பொம்மண்ணன்வாசல்[illegible]கட்டிலேம்
போகையிலேவிடுமூச்சைக்காதிலே
தெம்மாடிபோவென்றுசொக்குப்பொடிகொண்டு
சேனையும்பொம்மண்ணன் தானுமெனக்கொரு
என்றுமதிபொம்மிவாசல்கதவைத்
திறந்துழைந்துத்தட்டியெழுப்பினான்துரை
நன்றுடன்பொம்மியெழுந்து அவள்மனங்
களிதனேநீயொன்றுசொல்வாள் வீரன்பாதம்

எண்ணி-சிவ
பஞ்சணி
வீரன்-வெகு
சூரன்
பார்த்து-இது
ரோர்க்கு
மெனக்கு ஒரு
தனக்கு
திறந்து-வாரி
விரைந்து
இயங்கின்ற
மயங்கி
குதித்துபொம்மி
னுதித்து
போட்டு-நித்திரை
கேட்டு
வீசி இவன்
தூசு
திறந்து-அந்த
விரைந்து
துணிந்து-பிராண
பணிந்து

விருத்தம்.

கோட்டைகொத்தளங்கள்சேனை கொடியதோர்குதிரைபாரா
பூட்டையும்காவல்கட்டும் பொம்மணன்சண்ணுந்தப்பி
காட்டைடங்யுகடந்து நீரும் கஸ்திகள்பட்டுவெந்தென
வீட்டினில்வந்தசாமி விலையுமக்கழிப்பென்னறு
விலைமதியாத்தங்க மெல்லியேபொம்மிநல்ல
சிலைவளர்நுதலினாளும் சீக்கிரம்விடம்விட்டு
கலையுமான்போலேசேர்ந்து கடக்கவேபோகவேணும்
இலைகுலுங்காதகோ மேகுவோம்புறப்படென்றான்
எகுவோம்புறப்படென்று இருவருமெழுந்திருந்து
வாகுடன்தனக்குவேண்டும் வகைபணியெடுத்துச்செங்தேன்
பாகுடன்சாமிக்கேற்ற பட்சணமுந்தலாய்க்கொண்டு
வேகமாய்ப்பொம்மிமாதும் வீரனும்வெளியில்வந்தார்
வந்துபொம்மணாசாய்க்க மன்னவனருகில்நின்றும்
செந்தலைப்புரவிதனனைச் சீக்கிரமவிழ்த்துச்சீனி
விந்தையாய்த்தரித்திறுக்கி மெல்லியைத்தூக்கிவைத்து
சந்தோஷமுடனேவீர சாமியும்பரிமேற்கொண்டான்

மதுரைவீரன்-பொம்மியம்மாளை-சிறையெடுத்துப்போகுதல்.

தரு-இ-ம்-நொண்டிச்சிந்து.

வீரையன்பரிமீதில் - பொம்மியெனும் மெல்லியரைத் - தூக்கிவைத்துவல்லபமதாய் - காரியப்புரவியின்மேல் -தானுமெந்தக் - கன்னியர்க்குப்பின்னிருந்து -உன்னிதமுடன் - பஞ்சகலியாணிப்பரியை -கட்டிவென்று - பாவையையிடதுகையால்- மேவிப்பிடித்து- அஞ்சாமல்- துரைவீரன்நாயக்கன் - அரண்மனை தான்கடந்து - அரைக்ஷணத்தில் - வந்துநின்று கோட்டையருகில் குறடாகையில் - வாங்கியே - அதட்டியந்த வாசிப்பரியை - தந்திரத்துடனடித்தான்கோட்டைமதில் - தாண்டியெ குதித்து மாந்தலைப்புரவி - தெற்குமுகாடிப்பறந்து - பொம்மணாங்கிமையும் பாளையப்பட்டுந் - தேசங்கடந்து - திக்குவன்ச்சோலையும்விட்டு அழிஞ்சியடர்ந் - திருக்கும் வன்னங்கடந்து -ஏகாந்தமாய்கொள்ளடாரணியமும்விட்டு - கோல்விமலை - கூடிபேருந்தாலவழிகாடிநடந்து - கண்டோர்கள் - மகிழ்ந்திடவே - தொட்டியமுங் - கடந்துமுசிரிவழிகங்குளிருளில் - ஆமூர்வழியாக - காவேரி -யாற்றில்வந்திறங்கியே - கூடாரமடித்து - தாமிருபேருமிருந்து - பலகாரஞ் - சாப்பிட்டிளப்பாறி - முத்துசாமிவீரையன் - இளமயில்பொம்மியுடனே - கல்வியிலே - காந்தமாகியிருக்கையிலே -அலைகதிரோனுதித்தோன்-அப்போ-அரண்டு பொம்மணன் விழித்தெழுந்தனனேனென்.

தனனு-தனதனனு.

விருத்தம்.

காலமேயெழுந்துபார்த்துக் கட்டபொம்மணாய்க்கன்
நீலமார்ந்தேசிபக்கம் நின்றதைக்காணேனென்று
சாலமார்விகையில்சென்று தையல்பொம்மியைக்காணுமல்
ஓலமிட்டழுந்துநின்று இருணடவஞ்புலம்புவனே.
ஆரடாபொம்மணன்மேப ரதிந்தமீமபகந்தையாலே
சீருள்ளபொம்மியாளைச் சிறைபெடுத்தேகினேனோ
பாரடாகையால்வெட்டிப் பங்கமேசெய்யவேணும்
கூறடாவயண்மெந்தன்கொடிவபட்டாளத்தோர்க்கே.
பயணமேபுறப்படுங்கள் பைந்தொடிமகளைநீங்கள்
வயணமாய்த்தேசமாரும் வாகுடன்பார்க்கவேணும்
நயமுடன்ராணுசேனை நமக்குள்ளதளங்களெல்லாம்
பயணமாங்தெற்கேயனு பறைத்தையறையுமென்றான்.
பனறதனையறைந்தசத்தம்பகடைமாதியனுங்கேட்டு
வினையிலேயோடிவந்து வேந்தன்முன்விதமாய்ச்சொல்வான்
இறையவனெனக்குத்தந்த இயல்புடன்வளர்த்தவீமன்
மறையவேபோனதேந்தன் மகளையுங்காணேனென்றான்

மாதியச்சின்னான்சொல்-வசனம்.

அகோசரணஞ் சரணஞ்மயாசுவாமிபொம்மணநாய்க்கரேஸ்ப ரனருளிஞலேநாங்கள் வனத்திலேயிருந்து எடுத்துவந்து ஆசையுடனே வளர்த்த என்னுடைய கண்மணியாகியமகளையுங்காணேனையாசுவாமீ

பொம்மணநாய்க்கன்சொல்-விருத்தம்.

மாசம்விட்டகலாநேசப் பைந்தொடிபொம்மியாளை
தாசனையிருந்தமாதி தன்னிடமகன்தான்கூட்டி
நேசமாய்ப்போனனென்று நிலவரநோணுதிப்போ
மோசஞ்செய்தவனைக்கொல்ல மூடுகியேநடங்களிப்போ.

வசனம்.

அகோவாருங்கள்என்னுடைய சேனாதிபதிகளே இப்போதுஎன் அருமைப் புதல்வியாகிய பொம்மியம்மாளை நம்முடைய தாசனையிருந் த மாதியன் மகன்தான் மோசஞ்செய்து கொண்டுபோனனென்றுசி த்தமாய்த் தெரியவந்தது ஆகையால் அவனைச் சித்திரவதைத் செய்யும் பொருட்டாய் சதுதியில் சேனைகளை நடத்தி நடவுங்கள் சேனாதிபதிகளே.

விருத்தம்.

நடவுங்களென்றுரைக்ககேட்டு ரதகஜதுரகத்தோடு

அடங்கியதளங்கள்யாவும் ஆயுதமெடுத்துக்கூட்டி
இடங்களில்லாமல்வீதி யெங்குமேநிறைந்துசென்று
தொடங்கியேநடத்திக்கொண்டு துரைபொம்மநாய்க்கன்சென்றான்
சென்றிடும்போதுபேரி செசெயவெனமுழங்க
மண்டியேதுலுக்கரானோர் மாறுமாரென்றுகட்ட
முண்டியேநடவுமென்று முன்னதாய்நாய்க்கன்சொல்ல
கொண்டூராணியத்துப்பாதைகூடியேநடந்திட்டாரே
படையுடனடந்துபோகும்பாதையிலாடுமேய்க்கும்
இடையனைக்கண்டுநாய்க்கன் இவ்வழிகுதிரையேறி
திடமுடனொருபெண்ணும் திருடனும்போனதுண்டோ,
அடைவுடனுரைப்பாயென்ன ஆயனுமுரைக்கின்றானே.

இடையன்சொல்-தரு.

கன்னியுமோராண்பிள்ளையுங் குதிரையேறியே-கருங்
கால்வழியாய்ப்போனாரிந்தப் பாட்டைசாரியே
உன்னிதமுமவர்களபோற் நன்னயங்களுமிகு
உல்லாசவினோதமதை யென்னசொல்லுவேன்
என்றவனுரைத்தமொழி பொம்மணன்கேட்டுப் படை
எட்டியோடவுங்களென்று ஆத்திரப்பட்டு
கொண்டவன்தொட்டியம்விட்டு அழகர்வழியாய்-வந்து
கொற்றவனுங்கரையேறிப் பார்த்திடும்போது
காவேறியாற்றினடுவில் கூடாரங்கண்டு-நாமு மவ
கள்ளனைக்கண்டோமெனவே துள்ளியேகொண்டு
கோவென்னவிரைச்சலிட்டுக் கொண்டுநிறைந்தார் ஆற்றில்
கொப்பெனவிரங்கியேபே ரிகையறைந்தார்
பேரிகையறைந்தசத்தம் பெண்களுக்கரசிகேட்டு
வாரியேயெழுந்துநின்று வடமுகம்பார்க்கும்போது
மீறியதளங்கள்கூடி வேந்தனும்வந்தானென்று
வீரையன்மீதில்வீழ்ந்து மெல்லியாள்புலம்புவாளே.

பொம்மியம்மாள்புலம்பல்

தரு-இ-ம்-நாதநாமக்கிரியை சாப்புதாளம்.

கண்ணிகள்,

என்செய்வோ மன்னவனே-ஐயோமனந்
தேங்குதே மன்னவனே இப்போ
கண்கொள்ளாப்படைகொண்டு கட்டபொம்மணன்வாரான்
கடிகியே மன்னவனே
மதிபூகி மன்னவனே-தொட்டியன்படை.

வருகுதே
சதிசெய்துகொல்லுவான்
தானினி
வைபோக
தர்பிக்கும்
கையோகவென்றாலுந்
ஆசித்தீர்
துரைமுத்து
சுந்தர
குறைவில்லாச்சேனையைக்
கூடுமோ
துணைவேறில்லையே
துணைசொல்லவுமென்னரசே
முனைகொண்டபெருஞ்சேனை
முடியுமோ
எழுந்திருமென் து[illegible]ரையே
ஏகுவோ
செழுமையாகவே
செய்குவோ

மன்னவனே-உன்னைச்
சல்லடாளனென் தந்தை
மன்னவனே
வீரையனே-இன்பசுகங்
வீரையனே-இன்றைக்
குவியிறக்கவோ
வீரையனே
வீரையனே-அதிரூப
வீரையனே-இந்தக்
கொன்றிடவும்மாஸ்
வீரையனே
அரசே-உமக்கொருபடைத்
இந்த
மூன்னித்கவும்மாலே
என்னரசே
க்ஷணத்தினில்
மென்துரையேயிப்போ
சேனைகள்வருகுதென்
மென்துரையே

விருத்தம்,

தையல்பொம்மியிந்தவிதம் புலம்பக்கேட்டுச்
சாமிமுத்துவீரையனுஞ் சகித்துக்கொண்டு
செய்யவனிதையர்பேதைமதியினாலே
செப்பினளென்றேசனை செய்திருக்கும்போது
வெய்யவனைத்தூளம[illegible]றைக்கப் படைகள்வந்து
வீரையன்கூடாரமதை வளைத்துக்கொண்டு
கையுதனுஞ்சஞ்சாலிவே[illegible]டுத்தீர்த்து
கனமா[illegible]பொழிந்திட[illegible]வகல்[illegible]

விருத்தம்.

கண்ட[illegible]ழுந்திருந்து கண்களுஞ்சிவந்துமெத்த
[illegible]ண்ட[illegible]மதிரக்கோப மதிகமாயவந்துநீல
கண்டப[illegible]ங்தேசிபீதில் கடுகவேபாய்ந்துவநி
வன்டு[illegible]சூழ்குழலாய்கத்தி வாழ்த்தியேகொடுவென்றானே
கத்திவையெடுத்துவாழ்த்திக் கையினில்தாருமென்ன
வெற்றிபெற்றிடுவீரென்று மெல்லியாளெடுத்துயீய்ந்தாள்
சத்தியங்க[illegible]ருவீரன் சந்தோஷத்துடனேவாங்கி
[illegible]க்தியாய்ச[illegible]தேவி பதந்துதிசெய்குவானே

ஒன்பதுகம்பளத்துக் குறுதியாய்நின்றதேவி.
நம்பியுன்குலத்திவந்து நாயகிபொம்மிதன்னை
இன்பமாயெடுக்கும்போது என்னிடபக்கில்நின்ற
அன்புள்ளசக்கதேவி ஆபத்தைவிலக்குவாயே
நானொருதனியேனம்மா நமக்கொரு துணைவேறில்லை
தானைவேதளங்கள்கொண்டு தடுத்தபொம்மனைவெட்டி
கானகந்தன்னிற்போட்டேன் கவலையைத்தீர்ப்பாயென்று
தானவன்பரியைத்தட்டிச் சலுதியில்நடந்திட்டானே
நடந்திடுந்துடியைப்பார்த்துன் நலமாமனொருத்தன்சென்னி
இடர்ந்திடவேண்டாமென்று வந்திழையுரைக்கக்கேட்டு
அடர்ந்தவன்வருகும்போது அதட்டிபொம்மணன்தன்சேனை
தொடர்ந்துவீரனைச்சுற்றிச் சூழ்ந்துகொண்டமர்செய்தாரே.

மதுரைவீரன்சண்டைசெய்கிற-தரு

இ-ம்-சங்கரகபரணம்-அடதாளசாப்பு.

அமர்செய்யச்சேனைகள் அடர்ந்துவீரனைச்சுற்றிக்கொண்டார் பய
லதோவாரான்விடாதேயென்றுசொல்லி விண்டார்
சமரிடும்பரியேறிப்பட்டாணித்துலுக்கர்வந்து தெறித்தார்சேனை
சனங்களம்புகள்தொட்டுவேட்டுவெடிச்சத்தமு ழுதித்தார்
மாதுபொம்மியையக்கொண்டுவந்தகள்ளனவன்தானென்பார் லகோ
மாறுமாறென்றுகிட்டிவந்தார் வீரனுக்கு முன்பால்
இதிவன்செய்ததற்குச் சித்திரவதைசெய்யுங்களென்பார் இந்தத்
திருடனையம்பினாலே சிரசைதுணித்துவிடு மென்பார்

விருத்தம்.

சிரசைத்துணியுமென்றும் சித்திரவதைசெய்யென்றும்
உரசுகள்பேசிச்சேனை யொருமித்துநெருக்கக்கண்டு
வரைபுயனைவீரன் மனதிலேகோபங்கொண்டு
விரைவுடன்பரிநடத்திவினைசெய்யத்துணிந்திட்டானே.

மதுரைவீரன் சண்டைசெய்யும் வர்த்தம்.

துணிந்தவன்தனக்குமீசை துடிக்கவேபடையைக்கண்டு
தணிந்திடாக்கோபங்கொண்டு சர்ப்பம்போல்சீறிப்பாய்ந்து
குனிந்தவர்நிமிருமுன்னே கொக்கரித்த[illegible]பேரில்
சினந்துவாளுருவிக்கொண்டு.
சேனைமன்னரைக்கிட்டினான்-வீராதிவீரன்
தானேபடையைவெட்டினான்
ஆனைப்புரவிகுழுந்த சேனைபடைக்காலாளும்
அங்கமாடுங்கியே கண்கள்கலங்கிட
சஞ்சைகயில்லாப்படை பங்கமதாகிட (சேனை)

வெட்டினான்வீரன்முன்பின் விச்சுக்காயிரம்பேர்மாள
தொட்டியர்வடுகர்மல்லர் சோனகர்துலுக்கரோடு
மட்டில்லாச்சேனையாவும் மயங்கியேகெதிகெட்டோட
மூட்டியேபொருதவென்று

முடுக்கிப்பரி நடத்தினான் - வீராதிவீரன்
கடுகிடியக் கிடத்தினான்
சடுதியிலோடிமுந்த முடுகிப்பொருதவந்த
சம்பிரதாயமும் கெம்பீரதீரமும்
அம்புவில்வீரமும் வம்பிலேபோய்விட (முடுகி)

நாற்றிசைதனிலுஞ்சேனை நடுங்கியேமதிமயங்கி
கூற்றுவனிவன்தானென்று கோவெனக்கதறியோட
நேத்திரயாய்த்தொக்கின்மீதுநேர்ந்தராஜாளியைப்போல்
பார்த்தீபன்சேனைதன்னைப்

பாய்ந்துதுரத்திவெட்டினான்-வீராதிவீரன்
பாய்ந்துதுரத்திவெட்டினான்
பாய்ந்துதுரத்திவெட்ட[illegible]ாய்ந்துபடைகள்முட்டத்
தேய்ந்துதுஞ்சலைப் போலே
காய்ந்துநிலத்திலுய்யப் (பாய்ந்து)

விருத்தகம்.

மாந்தலைதேசிகாலால் மடிந்ததுசிலதுசேனை
பூந்தவுன்வாளால்வெட்டப்போனதுசிலதுசேனை
தீர்ந்ததுகவலையென்று தீரனும்நிற்கும்போது
பாய்ந்துமேபொம்மணன்போய்பள்ளத்திலொளிக்கக்கண்டான்
கண்டவன்கோபங்கொண்டு கடுகவேபரிநடத்தி
கொண்டவனருகில்சென்று குலுங்கவேநகைத்துச்சீறி
இன்றுநீவந்தகோல மிப்படியாச்சோவென்று
[illegible]ண்டகனுகவீரன் தொட்டியன்முன்சொல்வானே.

மதுரைவீரன்சொல்-தரு-இ-ம-பைரவி
கண்ணிகள்.

செப்பமுடையதிருநகர்கோனேரி யானே-எந்தன்
தேவிமை[illegible]ப்புறதயவுக்காய்நாலுனைத் தானே
[illegible]பவிடுவேனுனை யிப்போபொம்மியர்க் காகபின்னும்
தான்வருவாய்விளைதேடியென்மேற்பகைக் காக
ஈன்றேபவனையுங் கொன்றுசிறந்தனைத் தறித்து - இனி
ஏதுகவலையென்றே துரைவீரையன் சிறந்து
காவே[illegible]ாற்[illegible]னில் கத்தியலம்பியே வீரன் -- இரு
[illegible]கையுங்காலுஞ்[illegible]க்கிசெய்து கொண்டிருந் தான்

மாவேரிக்கொண்டு மகிழ்ந்துகூடாரத்தை காடிதுரை
வாரணைதக்கண்டு மதிபொம்மிநாயகி யோடி
சந்தோஷமாய்வருஞ் சாமிதிருமுகங் கண்டாள்-ஐந்தன்
தந்தையெங்கேயவர் சேதியென்னசொல்லு மென்றாள்
செந்திருவேயுன் தகப்பன்சேனையுடன் மடிந்தான்-என்று
செப்பிடபொம்மியழுதுபடுகளம் கடந்தாள்

விருத்தம்.

மூதுதான்வந்துபார்த்து அப்பன்றன்சேனையெல்லாம்
பழுதுறவிழுந்துமாண்ட படுகளமெல்லாஞ்சுற்றிப்
பழுகணிமார்பனான பொம்மணன்றனைக்கண்டங்கே
மெழுகுபோலுருகிப்பொம்மி மிகத்தவித்தலறுவாளே,

பொம்மியம்மாள்படுக்களம்வந்துதகப்பனைக்கண்டுபுலம்பல்

தரு-இ-ம-புன்னாகவராளி-அடதாளம்.

கண்ணிகள்

ஐயையோவென்னசெய்வேன் எந்தனது
அங்கமுருகுதிப்போ
வையகத்திலென்னைப்போல் நிந்தைக்காக
மாபாவியெங்குமுண்டோ
தாரணியிலேயென்னை விட்டால் யெனதுபொன்னின்
தண்டைககால்நோகுமென்று
அன்றையிலெனைவளர்த்த எந்தனது
ஐயாவைநானிழந்தேன்
பாராளுமென்தகப்பா யென்னைவந்து
பட்டீரோஎன்தகப்பா
தேளுதெனதுசிந்தை இனியென்ன
செய்குவேனென்தகப்பா
வெண்ணிலாமாளிகையென்று அந்நாளில்
பிரமன்லெபித்தானோ
என்றுமேயுந்தனுயிர் இப்போது
யெமலோகஞ்சேர்ந்ததோதான்
கட்டிலின்மெத்தையின்மேல் படுத்துமே
கண்துயிலுந்தந்தையே
வெட்டவெளிமணலில் உறங்கிட
வேதன்விதியிதுவோ
ஆவிபதறிநொந்து மெழுகுபோல்
ஆங்கமுருகுதையோ

பாவிகையாயுதத்தால் சென்னியற்றும்
பாரில்விழுந்திரோ

விருத்தம்.

தந்தையின்பேரில்விழுந்து தனித்தவள்புலம்பும்போது
சிந்தையாய்வீரன்சென்று தேவியின்துயரமாற்றி
எந்தனற்புதமேபொம்மி யெழுந்திருமென்றுசொல்லி
சந்தனக்கட்டைகொண்டு சதிருடனடுக்கினானே
அடுக்கியேகட்டைமீதி லரசன்பொம்மணனைவைத்து
முடுக்கியேசெந்தீயிட்டு முடித்தெரித்தானபின்பு
எடுத்தங்கமாற்றிப்போட்டு இருவருமஸ்நானஞ்செய்து
மடக்கொடியுடனேவீரன் வந்துகூடாரஞ்சேர்ந்தான்
வந்தவணிருந்து அன்னம் மங்கையைச்சமைக்கச்சொல்லி
சுந்தரன்புசித்துஎந்தன் தோகையேசாப்பிடென்று
விந்தையாயுரைக்கக்கேட்டு மெல்லியாள்துயரங்கொண்டு
சுந்தனுயக்கனேயென்று ஏங்கியேயுரைசெய்தாளே
என்னிடதகப்பன்மாண்டு எரிந்தவின்றையதினத்தில்
அன்னமும்பழமுமென்னை யருந்திடச்சொன்னீரிப்போ
உன்னிடசாதமென்ன உயர்த்தியோதுணையோவென்ன
மன்னவன்பொம்மிதன்னை வார்த்தையால்தேற்றினானே
வார்த்தையால்தேறிப்பொம்மி மகிழ்ந்தன்னம்பொசித்தபின்பு
காற்றையும்பழிக்கும்வேதக் கடிக்தோர்புரவியேறி
ஆற்றையுந்தாண்டித்தெற்கே அரிவையுந்தானும்வாய்க்கால்
சோமறையுங்கடந்துவீரன் சீக்கிரம்வருகின்றானே
வந்திசிந்தாமணிவட்டக்கு வாசலினருகிறங்கித்
தந்துகளுடனேயங்கே தனித்தகூடாரம்நாட்டிச்
செ[illegible]திருமாதுக்[illegible]ட்பாங் தேவியைவைத்துவீரன்
சந்திரமதியேபொ[illegible]ம்மி சாதம்[illegible]மென்று[illegible]
அன்னமென்னடையாள்பொம்மி யரிவையுஞ்சமைத்தாள்சாதம்
மன்னவன்புசித்துமோக வஞ்சியைப்பார்த்துச்சொல்வான்
தென்னவர்புகழும்நல்ல திருச்சிறுப்பள்ளிராசன்
தன்னிடம்போறேனென்று சலுதியில்நடந்திட்டானே
திசையெட்டும்புகழுங்கீர்த்தித் திருச்சிறுப்பள்ளியாளும்
விசையமால்சொக்கலிங்க வேந்தர்தன்கோட்டைசென்று
அசையாதசுவாமிவீரன் ஆசாரவாசல்நின்று
கசமதைப்போலுலாவிக் கின்னரிமுழக்கினானே

வி[illegible]ர்க்கசொக்[illegible]லிங்கராஜன்வருகிறவிருத்தம்.

[illegible] யடித்திடுயத்தைக்கேட்டு

மிகுந்ததயவுடனெழுந்து வேந்தனு[illegible]மைச்சர்சூழ
செகந்தனில்புகழ்பெற்றோர்க்குந் தி[illegible]சிரபுர[illegible]த்திற்செங்கோல்
சுகம்பெறுவிஜயரங்கச் சொக்கலிங்[illegible]கேந்திரன்வந்தான்

தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சொக்கலிங்கேந்திர[illegible]தான்-விஜயரங்கச்
சொக்கலிங்கேந்திரன்வந்தான்.

அநுபல்லவி.

திக்கெங்கும்புகழ்கீர்த்தி சிறக்குஞ்செங்கோல்கொண்டு (சொக்)

சரணங்கள்.

எங்கும்பளபளென்னவே-முடியில்கொண்டை
இலங்கித்தளதளென்னவே
தங்கக்கவசமெய்யில் தகதகென்றொளிமின்ன
மங்களத்துடன்மாதர் மகிழ்ந்துநடனம்பண்ண (சொக்க)

சரிகைஅங்கிகுலுக்கவே-அதன்மேல்தங்கச்
சந்திராரமுமிலங்கவே
விருதுக்குடைகள்கூட விளங்குஞ்சாமரைபோட
அருகிலுபசரித்து அமைச்சர்புகழ்ந்துநாட (சொக்க)

மன்னமன்னவர்சூழவே-இருபுறமும்
மருமலர்மழைதாழவே
முன்னமறைகளோத மூன்றையேர்பூரசுகந்தஞ்
சொன்னமொழிதவறு மன்னன்விஜயரங்கச் (சொக்க)

விருத்தம்.

முழங்கியவீணைவாத்திய மொழிதனைராசன்கேட்டு
பழம்பொருள்வேதசாஸ்திரம் படித்தவனின்[illegible]றென்று
விளங்கவேயவனைக்கூட்டி விந்தையாய்சமுகந்த[illegible]னில்
வழங்கியகையோன்மன்னை வா[illegible]ழைத்திட[illegible].

வசனம்.

அகோவாருங்கள் மந்திரிமார்களேஇப்போது ந[illegible]முடைய ஆசர்
வார்சவிலேலங்குநின்று வெகுவினோதமாய்வீணைவாசிக்கிறவனை இன்னா
னென்று விசாரித்தறிந்து அவனை என்னுடைய சமுகத்துக்குஅழைத்
துவாருங்கள் மந்திரிமார்களே.

விருத்தம்.

பூலோகவர்சன்வார்த்தை புனிதமந்திரிமார்கேட்டு
ஆலோசித்தவிடம்வந்து ஐயனைப்ப[illegible]ர்த்துகண்டு

மேலோகமிருந்துவந்த விசித்திரனிவனுமென்று
சிலையைமறைத்துவைத்து சேகின்முன்புவிட்டார்
பொன்னணிமார்புவீரன் துரைமையைக்கண்டுநாய்க்கன்
தன்னயமாகத்தம்பி நம்பிட்டிருநீயென்று
சொன்னதைக்கேட்டுவீரன் சாத்திரவசனமாக
அன்னையுந்தந்தைநீரே அன்புடன்காருமென்றான்
காரென்றுசொன்னவார்த்தை கருணையாய்நாய்க்கன்கேட்டு
வேறென்றுங்கவலைவேண்டாம் வீரனேயுனக்கிப்போது
தாரேனாயிரம்பொன்மாதம் சம்பளம்வாங்கிக்கொண்டு
நீரனேயெனதுகோட்டை செப்பமாய்க்காத்திரென்றான்
திக்கெங்கும்புகழ்செங்கோல் செலுத்திடும்விஜயரங்கச்
சொக்கலிங்கேந்திரன்சொன்ன சொற்படிநடந்துகொண்டு
சிக்கெனக்கோட்டைநான்கு திசையிலுஞ்சாரிசெய்து
மெய்க்கவேபொம்மிவாழும் வீதியில்வந்துசேர்ந்தான்
வந்தவனிருந்துபொம்மி மாதுடன்வசனம்பேசி
சந்தோஷமுடனேயன்னஞ் சாப்பிட்டிருபேருந்தான்
கந்தகஸ்தூரிபூசிக் கயல்விழிமாதைச்சேர்ந்து
விந்தையாயன்றுராத்ரி விடிந்தவுடனெழுந்திருந்தான்

கொண்டிச்சிந்து.

காலையிலெழுந்திருந்து-துரை-காவேரிதீர்த்தத்தில்-ஸ்நானஞ்செய்து-ஆலமுண்டோர்பதம்போற்றி-நல்ல-ஆடையாபரணங்கள் மிகத்தரித்து-ஸ்ரீரங்கனைப்பணிந்து-வீரன்-சிங்காரமானபரியேறி - பாரெங்கிலும்புகழுங் கோட்டை-பட்டணமெங்குமேசாரிசெய்துவீதிவரும்போது-துரைவீரனைக்கண்டுமையல்பெருகினதனுடன்மாதர்-இரு-கைசோர்ந்துமெய்சோர்ந்துநிற்கிறதும்-மதிமேலேறிபார்க்கிறதும் - இவர்-வந்தெனைச்சேராரோவென்கிறதும்-இச்சகவார்த்தைசொல்லி-பெண்கள்-என்னையணையாரோவென்கிறதும்- அன்னநடைமாதர்கூடி - ஆலோசனைசெய்யக்கண்டு-துரை-மன்னனவ்வீதிவிட்டு-நாய்க்கர்-மருகர்வீதிவரும்போது-கஸ்தூரிக்காரனென்னும்-கிருஷ்ணப்பநாய்க்கனுடன்-புதல்வி - விஸ்தாரநாயகியாஞ்-செய-வீரலட்சுமியாளென்றொருபெண்வீரன்வருகிறதைக்கண்டு-மெத்தமயல்கொண்டு-நின்றிடவே-கூர்மையுடன்பார்த்து-அந்தக் -கொம்பனைமேல்மனதின்பம்வைத்து கண்டதுரைசாமி-பொம்மி-மாதிடம்வந்து-அன்னம்புசித்து-நன்றாகப்பள்ளிகொண்டு-அன்று- ராத்திரியினுச்சாமத்திலே-காமேகண்டபெண்ணை- இப்போ -கற்பழிக்கவேண்டுமென்று மெய்ப்பட்டனை-[illegible]யுடைந்துசென்று - கோட்டை - நெடுமதிலேறித்தாண்டிக்குதித்து கன்னி[illegible]த்தனக்கும்-பொன்னின்- கட்டாரிமணியி

னுட்புகுந்து-உன்னிதமாகநின்றான்-அந்தஒண்டொடியாள்மையல் கொண்டுமெல்லப்-பாவையெழுந்திருந்து-முகம்-பார்த்து மயங்கியேகீழ்விழுந்தாள்-அவளுடன்வீரன் சோபமாற்றியேமெத்தையின்மேலிருத்தி- தனதுமொழிபேசி-அந்தத்-தையலைக்கூடியே-லீலைசெய்து- மனதுகளிகூர்ந்து-அந்த-மங்கையுமின்பமடைந்தாள்அன்பு பலகாரந்தான்புசித்து - நல்ல - பாக்கிலைதின்றுமகிழ்ந்திருந்தான்[illegible]கவீராயனும்-கிருஷ்ணநாய்க்கர்மகளேபோய்வாரேனென்று செ[illegible]விவிடைபெற்று-அந்தத் தோகையரண்மனைவிட்டெழுந்து- வல்லியெனுமாது-பொம்மி - வாழுமரண்மனைநாடிவந்தான்

தந்தனனே-தானனே,

தூதுவர்கள்சொல்-விருத்தம்,

செப்புவீரென்றதென்னவாகேளும்
நற்புவிமதுரை நாட்டினையாளும்
அற்புதன்திருமலையாண்டவனனுப்பும்
மெய்ப்புளநிருபம் வேந்தனேயிதுதான்.

வசனம்,

அகோசரணஞ்சரணமையாசுவாமிசொக்கலிங்கேந்திராதென்மதுராபுரியையாளப்பட்ட மன்னவனாகிய திருமலைநாய்க்கர் கொடுத்தனுப்பிய நிருபமையாசுவாமி.

விருத்தம்,

திருமலைநாய்க்கன்தந்த சீருள்ளநிருபமென்று
இருசெவிதன்னிற்கேட்டு என்னகாரணமோவென்று
விரைவுடன்சருகைக்கச்சி வேங்கையனிடங்கொடுத்து
வரிசையாய்நிருபந்தன்னை வாசித்துஉரையுமென்றான்

வசனம்.

அகோவாரும் பிள்ளாய் வேங்கையா இந்த [illegible]ருபந் திரு[illegible]லைநாய்க்கர் அனுப்பியதாகையால் இதைச்சீக்கி[illegible]மாக வா[illegible]யும்பிள்ளாய வேங்கையா.

வேங்கையன்வசனம்.

அப்படியேவாசிக்கிறேன்சுவாமி

அகவல்.

உரையெனக்கேட்டு உகந்துவேங்கையன்
விரையுடன்கையில் நிருபத்தைவாங்கி
வரைதலைப்பார்த்து வாசித்துரைப்பான்
குறைவிலாத்திரிசிராக் கோட்டையாள்வேந்தே
தேவரீர்தமக்குத் திருமலைநாய்க்க[illegible]
ஆவலாயெழுது மறிக்கையின்[illegible]ழ்

ஸ்ரீமதுதங்கள் திருவுளத்தாலும்
நரிபரியாக்கும் நாதனாரிடம்வாழ்
நாரணிமீனாள் நற்பதம்போற்றி
தாரணிமதுரை தன்னிலேசெங்கோல்
நீதிதப்பாமல் நேமமாயரசில்
நீதிரைதிருந்தேன் திருமலைநாயக்கன்
எங்குமேகீர்த்தி யிலங்கிடும்நாளில்
சங்கையில்லாமல் தனிக்காட்டுகள்ளர்
ஏகமாய்க்கூடி யென்னிடமதுரையில்
வேகமாய்வந்து விளைசெயுங்கொடுமையை
சொல்லிடப்போமோ துரையேயென்கோட்டையில்
அல்லும்பகலும் அறுபதுநாழிகையும்
கோடானுகோடிபேர் கூடியேகொண்டு
நாடானமதுரை ராச்சியந்தனிலே
கோட்டையுங்கொள்ளை கோவிலுங்கொள்ளை
பேட்டையுங்கொள்ளை பெருநிதிகொள்ளை
கொல்லர்கைபிற்பணங் கொடுத்தனுப்பிட்டால்
வல்லிடிக்கொள்ளை மாடாடுகொள்ளை
அரண்மனைநீங்கலா யடங்கலுங்கொள்ளை
தரமிதுவென்று சாற்றிடப்போமோ
ஆகையாலென்ன லடக்கவுங்கூடா
தேகமாய்ப்பெருகுந் திருட்டையடக்க
தேவரீரவர்களுஞ் சேனையைக்கூட்டி
பூஜைவந்துநாளையில் முடுகியேவந்து
கள்ளரைச்செயித்தென் கலக்கந்தீராட்டால்
கள்ளதுவெல்லவே னுத்தண்டகள்ளர்
என்னையுங்கொன்று எழுதுரைப்பதி
தன்னையுங்கள்வர் தானுமேயாள்வார்
போலவேகாணுது பொய்யல்லநிசம்நிசம்
சீலமாய்நீங்கள் சீக்கிரம்வருகுவீர்
என்றுதிருபித் தெழுதியசேதியை
நன்றுடன்வேங்கைய நாயக்கனுரைத்தான்
உரைத்ததைக்கேட்டு உள்ளமேகலங்கி
திறந்தப்பிமன்னன் தியங்கியேசொல்வான்

விருத்தம்.

சீருபத்திலுள்ள சேதிநிலவாமதிந்துகொண்டு
திரிசிரபுரந்தன்னிலுறுந் தென்னவனேதுசொல்வான்

கருமமோமதுரைக்கோட்டை கள்ளராளிருந்துபோக
வருமினையப்பயனோவென்று மன்னவனுரைசெய்வானே,

சொக்கலிங்கேந்திரன்மந்திரிகளுக்குச்சொல்விருத்தம்

தாஷ்டிகத்துடனேவந்து சங்கரிமதுரைநாட்டில்
போட்டியாய்க்கொள்ளைசெய்யப் பொருந்தியகள்ளர்தன்னை
காட்டிலேதுரத்திபொல்லாக் கள்ளரைக்கருவறுத்துக
வாட்டிடவல்லோர்யாவர் வகையெனக்குரைசெய்வீரோ,

விருத்தம்,

ரம்மியத்துடனேவீரன் நன்மனைவருகக்கண்டு
பொம்மியுமெழுந்து பொருமியேகோபங்கொண்டு
செம்மையோவுமக்குமித்தச் செகப்புரட்டென்றுகேட்க
நன்மைவான்போலேசுவாமி நயந்துரைசெய்திட்டானே.
நயந்துரைசெய்யக்கேட்டு நாயகிமனமகிழ்ந்து
நயந்தவள்வார்த்தைபேசிச் சுகத்துடனிருக்கும்போது
செயந்தவருதமன்னன் தென்னவனுக்கிணைக்குப்
பயந்தவன்போலேவீரன் பாங்குடனெழுந்துசென்றான்.
சூரியனுதிக்குமுன்னே சுந்தரப்பரியிலேறி
விரையன்கோட்டைபுக்கி வேந்தனுசாரஞ்சென்று
காரியத்துடனேநாயக்க கர்த்தனைக்கண்டுபேசி
பாரியசமுகந்தன்னில் பாங்குடனிருக்கின்றானே.
மாசம்விட்டகலாநேசப் பருமபுயன்வீரசாமி
ராசமன்னவன்சபைக்குள் நலமுடனிருக்கும்போது
தேசமன்னவர்சூழ்கூடல் தென்னவன்திருமலேந்திர
வாசவனனுப்புமோலை வாங்கியேதூதர்வந்தார்.

தூதர்வருகிற-விருத்தம்.

தம்டிசல்லடமுங்கட்டி [illegible] நிறசிலம்புகட்டி
இட்டமாய்சிரசில்கொண்டை சிங்காரமுடனேகட்டி,
வட்டமாய்த்திலதந்தீட்டி வர்ணதடிசூலமேந்தி
அட்டனையடக்கும்வீர தூதுவர்வருகின்றாரே.

தரு-இ-ம்-கலியாணி-ஆதிதாளம்.

பல்லவி,

தூதர்நாங்களே செதிசொல்லும்-தூதர்நாங்களே,

அநுபல்லவி.

காதவழிபலநாளில்நடந்து கானகமுமலைகடுங்கடந்து
நீதன்திருமலைநாய்க்கனுத்தர
நேயத்துடனேகொண்டு . பயத்துடனேவந்திடும்(தூதர்)

சரணங்கள்

மங்களமாய்மதுராபுரிபட்டணம்
வாழ்ந்திருமலையன்
செங்கோல்செலுத்தியென்றுநீசமுடன்
தேசத்தையாள்கையிலே
சங்கையில்லாமலேகள்ளர்படைகூடித்
தான்கொள்ளையாடவேமன்னன்மனம்வாடி
எங்கள்கையிலோலை யீந்திடவேகாடி
ஏகச்சொல்லியேதந்திட வேகத்துடனேவந்திடும் (தூதர்)

தென்மதுராபுரிபட்டணந்தன்னிலே
சீருடனேவாழ்ந்திருப்போமெங்கள்
மன்னன்திருமலை நாயக்கன்சொல்லிய
வார்த்தைக்குத்தாழ்ந்திருப்போம்
அன்னீதமாகவே யின்றைக்குநாளைக்கென்
றட்டிசொல்லுகின்ற துஷ்டர்களையொரு
கண்ணிமைமூடுமுன் தள்ளியிப்போதிலே
கனவேகமாய்நடவென்றினி மனவேகமதாய்வந்திடும் (தூதர்)

எத்திசையுங்கீர்த்திபெற்றிடும்மீனாள்
இருபதத்தைப்பணிவோமிந்த
அத்திருமூர்நாடெல்லாஞ்சுற்றியேடியினி
லன்[illegible]வரத்துணிவோம்
வெற்றிபெருந்தமிழ மீனாட்சிசுந்தர
விட்சணயனுக்கு விரோதஞ்செய்யவெண்ணி
சத்தியந்தப்பியமூடர்களையிந்திர
சாலத்துடனேகட்டியே சீலத்துடனேவந்திடும் (தூதர்)

விருத்தம்

[illegible]தூதர்கள்சென்று மன்னவன்சமூகந்தன்னில்
இந்தனந்[illegible]னேபோற்றியென்று
விந்தையாய்நிருபந்தன்னை விசையரங்கேந்திரன்முன்னால்
சந்தேகமில்லாத்தூதர் சதுரினில்வந்துநின்றார்

சொக்கலிங்கேந்திரன்சொல்-விருத்தம்

ஆரடாதூதர்நீங்கள் அதிவேகமாகவந்து
நேராகவேந்தன்முன்னால் நிருபத்தைவைத்துநின்றீர்
கூறடாவிந்தவோலை கொடுத்தனுப்பிட்டோர்தன்னை
சீருடனெனக்கிப்போது செப்புவீர்செப்புவீரே.

வசனம்

அகோ வாருங்கள்தூதர்களேநீங்கள் அதிசீக்கிரமாயென்னுடைய

சமுகத்திலே நிருபத்தைவைத்தீர்கள் ஆகையால் இந்த நிருபம் எழுதி த்தனுப்பி வைத்தவர்கள் இன்னாரென்று எனக்குத் தெரியும் படியாகச் சொல்லுங்கள் தூதுவர்களே.

வசனம்

அகோ வாருங்கள் மந்திரிபிரதானிதளகர்த்தர்களே தென்மதுரா புரி நாட்டிற்கு வந்து கொள்ளை யடிக்கின்ற பொல்லாததுஷ்டராகிய க ள்ளரைத் துரத்திவெட்டிக் கருவறுக்கப் பட்டபேர் உங்களில்யாவர் தி றமையுண்டானால் சொல்லுங்கள் தளகர்த்தர்களே.

தளகர்த்தர்கள்சொல்-விருத்தம்

பொங்கமாய்மதுரைக்கேகிப் போமென்றுதேவரீரும்
எங்கட்குச்சுமக்கும்பாரம் இருநிதிகொடுத்திட்டாலுந்
சிங்கம்போல்வலிமையுள்ள திருடரைசெயிக்கவென்றால்
எங்களால்முடியாதய்யா ஈஸ்பரன்சாட்சியாக,

வசனம்

ஆகோ கேளுந் சுவாமி பொங்கமாகிய மதுரைநாட்டுக்குப் போ ங்க ளென்றுஎங்களுக்குச் சுமக்குந்தக்க திரவியங்கொடுத்தாலும் தெ ன் மதுரைக்கு எட்டியடி வைக்கோம் அந்தத் திருடரைச செயிக்கவு மெங்களால முடியாது ஆனுலொருசேதி சொல்லுகிறோம் கேளும்மகா ராசனே

இதுவுமவர்கள்சொல்-விருத்தம்.

சீரணிமதுரைநாட்டுத் திருடரைசெயிக்கவென்றால்
ஆரையுநம்பவேண்டாம் ஆயிரம்பேர்க்குச்சேர்வை
வீரையன்தன்னாலாகும் வேறொருவரால்லாகாது
பார்தனையாளும்வேந்தே பரிந்தனுப்பிடுவீரானே

வசனம்,

அகொ கேளுமைய்யா ராசனே யந்தத்திருடரைச் செயிக்க வென் றால் எங்களில் யாரையுநம்பவேண்டாம் உம்மிடத்தில் ஆயிரம்பேரு க்குச் சேர்வையாயிருக்கப்பட்ட வீரையனாலே யாகுமேயல்லாமல் மற் ற வொருவராலுமாகாது ஆகையாலவரையனுப்புமைய்யா மகாராசனே

விருத்தம்.

மந்திரிமாருமற்ற மன்னவறரைக்கக்கேட்டு
சுந்தரமுகமலர்ந்து சொக்கலிங்கேந்திரன்சொல்வான்
சந்தனற்புதமேவீரா என்னருகில்வாவென்று
சந்தோஷத்துடனேராசன் தானழைத்துரைசெய்வானே.

சொக்கலிங்கேந்திரன்சொல்-தரு

கண்ணிகள்.

அதிசூரபராக்கிரம வீரனே நானென்
றறையக்கேள்துரைமுத்து வீரனே
கோடி தருகிறேன் வீரனே
நினைவின்படிநடத்தும் வீரனே
கள்ளர்செய்யுமிம்சை வீரனே-பட்டுக்
கச்சித்திருமலையான் வீரனே
உள்ளங்கலந்துநொந்து வீரனே-எனக்
கோலையெழுதிவிட்டேன் வீரனே
அருமைசிறுமையட்டு வீரனே-அமன்
அவதிப்படுவதினால் வீரனே
மதுராபுரியைநாடி வீரனே-இப்போ
வலுவேகமாய்ச்சென்று வீரனே
அருமெதிரிலாக்கள்ளர் வீரனே-அவர்
அகத்தையொடுக்கிவைப்பாய் வீரனே
போர்செய்தவருடனே வீரனே-வெட்டிச்
பொருதிக்கருவறுத்து வீரனே
தன்னரசு நாடும் வீரனே-சர்வ
சங்காரமாக்கிநீ வீரனே
பெண்ணரசாளவனுக்கு வீரனே-நல்ல
பேர்கொடுதுரைமுத்து வீரனே
உன்னாலாகாதகாரியம் வீரனே-பின்னை
ஒருவராலாகுமோசொல் வீரனே
சொன்னசொற்படிசெய்யும் வீரனே-என்
துரைசிங்ககுட்டிமுத்து வீரனே

விருத்தம்

மன்னவன்விசயரங்க மாதுரைதன்னைக்கேட்டு
நன்னயத்துடனேவீரன் கன்றெனச்சம்மதித்து
அன்னவன்கையைநீட்டி யழகுதாம்பூலம்வாங்கி
கன்னிகைதனக்கொய்யான கன்னிவான்விடுதியேந்தான்
வந்தவனைபொம்மிநேரோ வார்த்தைகளெல்லாஞ்சொல்லி
சந்தோஷமுடனேவீரன் தானன்னம்புசித்துக்கொண்டு
விந்தையாய்பொம்மிகூட வீடுதியிற்றுயின்றெழுந்து
தந்திரமுத்துவீரசாமியு பூசைசெய்வானே
பொன்னரசானகன்னி பூசையேமதுரைக்கேக
நன்னயத்துடனேநீயும் நடந்திடுபேயனையென்ன

சொன்னவாய்மூடுமுன்னே தோகையும்பயணமானாள்
அன்னவன்சென்றுராசன் அருகினிலுரைசெய்வானே
தேசமன்னவர்கள்சூழத் திருச்சினாப்பள்ளியாளும்
ராசனேமதுரைக்கேகி நானிதோவாரேனென்று
வாசமாய்விடையைப்பெற்று வந்துராணுவத்துள்ளோர்க்குப்
போசனும்பயணஞ்சொல்லிப் புரவிமேலேறினனே
ஏறினன்புரவிமீதி லிருபக்கம்படைகள்சூழப்
பாரிய ஆனைசேனைப் பரிகளும்பயணமாக
சீரியத்துடனேசொல்லும் வீரையன்பிலத்தினாலே
தேரியமதுரைநோக்கிச் சேனைகள்நடக்கின்றாரே

சேனைகள்-மதுரைக்குப்போகும்-தரு.

ஆனைசேனையோடாயிரம்பரி அங்கலிங்ககலிங்கரும்
அச்சிகொச்சிமராட்டருந்துளு மாளவதேசமன்னரும்
கத்திகேடையமீட்டிசக்கரங் கையினில்வளைதடியும்
கனகதோமரம்பிண்டிபால்முங் கட்டியேபடைகூடினார்
நாய்க்கமார்படையேகபோகமாய நாலுபக்கமுங்கூடினார்
நாவுத்தார்படைகோடிகூடியே ஆவிலாவிகொண்டாடினார்
வெற்றிச்சாமரைவீசவேகுடை வெங்கலச்சின்னமூதவே
வீரையன்பதியேநிட வென்னச்சேனைகள்சூழவே
தந்தப்பல்லக்கின்மீதிலேபொம்மி தானுமேறியேகூடவே
சாமிவீரையன்தென்மதுரைக்குச் சாரிசெய்துநடக்கவே
மன்னனுக்குப்பயணஞ்சொல்லியே வாயுவேகமதாகவே
மங்கம்மாள்சாலைப்பாதையின்வழி மார்க்கமாய்நடந்தேகினார்

விருத்தம்.

சிங்காரவீரன்கூட்டச் சேனையுடனிங்கும்
தங்காமல்நத்தஞ்சென்று தனிப்படவிருந்துபேசி
பங்காருலிங்கநாய்க்கன் உசனமுங்கண்டுகொண்டு
என்காதம்நடக்கவேன்று ஏகினார்தளமுந்தானே
அடர்ந்துதன்படையுந்தானும் அரிவையாள்பொம்மிகூடத்
தடம்புயனானவீர சாமிதென்மதுரைநோக்கி
நடந்துமேவைகையாற்றின் நதிவடக்கரையிலன்பாய்
இடம்படடேராநாட்டி விறங்கினார்ராணுவசேனை
ராணுவத்தோர்களெல்லாம் நாலுபக்கமுமிறங்கி
ஆணுவத்துடனேவீரன் அவ்விடத்திறங்கினானே

காணுமேலம்இருமலேந்திர கர்த்தனையென்றும்பொம்மி
மானுடன்கூடாரத்தில் வந்துபோயிருக்கின்றானே
பெண்ணமுதானகன்னி பூவையையசாதங்கொண்டு
நன்னயத்துடன்வாவென்று நலமுடன்புசித்துவீரன்
எண்ணமில்லாமலன்று இந்திய மதனும்போலே
வண்ணமாமெத்தைமீதில் மகிழ்ந்துகண்துயின்றானங்கே
துயின்றவனுதையகாலஞ்சூரியனுதிக்குமுன்னே
முயன்றவன்கைகைதன்னில் மூழ்கியேஸ்நானஞ்செய்து
பயின்றவர்புதல்வர்தம்மைப் பட்சமாய்விசாரிப்பார்போல்
நயந்தவன்றளங்கள்தன்னை நலமுடன்விசாரித்தானே.
சேனைகாவலர்கள்மற்றச் சேவகர்துலுக்கரோடு
ஆனையொட்டகமாவெல்லாம் ஆசாரய்ப்பார்த்துக்கொண்டு
மானுபனனவீரன் வந்துபோரணியிலேநின்று
பேணியேநகபத்தோடு பேரிகைமுழக்கச்சொன்னான்

வசனம்.

இந்தப்பிரகாரமாக வீராயனானவன் சேனைகளைக்கூட்டிக்கொண்டு தென்மதுரைப்பட்டணம்வந்து வைகையாற்றின் வடகரையிலே பாளையத்துடனிறங்கி உடனே ஆனைசேனை முதலானதளங்களை அணியணியாகநிறுத்திப்போரணியிலே வந்துநின்று பேரிகையடிக்கச்சொன்னான் அந்தப்பேரிகைசத்தத்தைத் திருமலைநாய்க்கன் கேட்டு திடுக்கிட்டெழுந்திருந்து மந்திரிபிரதானிகள்சூழ உப்பரிகைமீதேறி வருகிறவிதங்காண்க.

திருமலைநாய்க்கன்வருகிறவிருத்தம்.

பேரிகையறைந்தசத்தம் பெருகியதிருமலேந்திரன்
சூரியசெவியிற்கேட்டுக் கொப்பெனவெழுந்திருந்து
மீறியவன்மச்சர்சூழ திருவாமறைகள்போடப்
பாரியுப்பரிகைநாடி பாங்குடன்வருகின்றானே

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெகராஜர்புகழ்ம்கராஜன்கூடல்வாழுந்திருமலைநாய்க்கன்வந்தான்

அநுபல்லவி.

சீமாகவேதென்கூடல் நகராளும்நாளினிலே
துஷ்டரெனுங்கள்ளர் சட்டமாய்கூடியே
பட்டணந்தனிற்கொள்ள பிட்டிடவேகண்டு (ஜெகரா)

சரணங்கள்.

ஆருமெதிரில்லாமல் ஊரும்பேரும்விளங்க
அரசாண்டுகொண்டிருந்தேன்
சீருஞ்செல்வமுங்கெடத் திருடர்கொடுமைசெய்யச்
சிந்தைகலங்கியிருந்தேன்
பெருங்கோடையிலிடி பெருக்கஇடித்தாற்போலப்
பேரிகையடிபட மறியேநினைவுகள்
ஆரிடபடையென வீருடன்காணவே (செகரா)
கச்சித்திருமலையன் கணவானென்றபேருங்
கள்ள[illegible]பாச்[illegible]
அச்சமில்லாதவந்தனமேமைக்குடிகளுக்கும்
அதிகபயமுண்டாச்சே
மிச்சமாய்வலுச்செய்யும் மேனாட்டுக்கள்ளர்களை
வெட்டியேநற்பொலி யிட்டிடவேயொரு
கெட்டிக்காரனெப்போ திட்டப்படுமோவென்று (செகரா)
வித்தகியேமதுரை மீனாட்சியுன்பொற்பாதம்
வேண்டியத்துதித்தேனேவே
பெற்றபிள்ளையிலுநான் உற்றபிள்ளையெனக்குப்
பேதம்நினைத்தாயெனவே
உற்றதுணையில்லாம லுவந்தெழுதுமோலைக்காய்
உள்ளபடியெனக் குதவியேவந்தது
கள்ளர்படையோவென்ன காரணமோவென்று (ஜெகரா)

விருத்தம்.

என்னகாரணமோவென்று ஏங்கியேதிருமலேந்திரன்
கன்னவேயெழுந்துஏழுகட்டரண்மனையுங்கடந்தி
அன்னவனமைச்சர்சூழ ஆசாரந்தன்னில்வந்து
மன்னனும்[illegible]மீதில் வாகுடனேதிப்பார்த்தான்.

வெண்பா.

பார்த்ததான்[illegible]க்குழுகம் பசர்மன்னன்சேனைகளை
மாற்றுனேகள்ளர் வலுப்படையோ-பார்த்தோடி
வாங்களரக்காரர்களே வந்தபடையாருதெனத்
தங்காமலேயறிந்துதான்

வசனம்,

அகோவாருங்கள் அர்க்காராகளே [illegible]ங்கள் அதிசீக்கிரமாகப் போர்
வைகையாற்றின் வடக்கரையிலே [illegible] இறங்கியிருக்கின்றசேனை

தளங்களை ஆருடைய சேனைகளொன்று அதிசீக்கிரமாய் விசாரித்துவந்து சொல்லுங்கள் அர்க்காரர்களே.

அர்க்காரர்கள்வசனம்

அப்படியேயல்லதையா திருமலைநாய்க்கரே.

விருத்தம்

அறிந்துவாவென்சேதி அர்க்காரர்காதிற்கேட்டுப்
புரிந்தவாய்மூடிமுன்னே போய்வாரோமென்றுசொல்லி
பரிந்தவர்வையை தாண்டிப் பாளையத்தின்னில் [illegible]
தெரிந்திடும்படியேவந்த சேனைக்காவல [illegible]

வந்தமன்னவர்கள்சேனை மதிமந்த்ரிமாரேநீங்கள்
எந்தவூரெங்கேபோதீர் இங்குவந்திறங்குவானேன்
விந்தையாமெங்கள்வேந்தன் விசாரித்துவரவேசொன்னார்
சந்தேகமில்லாமற்றன் சமுகத்திலுரைசெய்வீரே

வசனம்.

அகோவாருங்கள் சேனாதிபதிகளே நீங்கள் எந்ததேசம் எங்கே போகிறீர்கள் இங்குவந்திறங்கினகாரணமென்னவென்று எங்கள்ராசனாகிய திருமலைநாய்க்கர் விசாரித்துக்கொள்ளவரச்சொன்னார் ஆனபடியால் சமுகத்தில் சொல்லுங்கள் சேனைக்காவலர்களே,

சேனாதிபதிகள்சொல்-விருத்தம்-

அன்புடனுரைசெய்கின்ற அர்க்காரு அய்யமாரே
இன்பமாய்நாங்கள்வந்த தியம்பிடக்கேளீரெங்கள்
திண்புயவிசயரங்க தீர்ப்புத்தரவால்வந்தோம்
நன்புடன்சென்று உங்கள் ராசனுக்குரைசெய்வீரே

வசனம்,

அகோ வாருங்கள் அர்க்கார் மார்களே எங்கள் திரிசிரபுரத்தை யாளப்பட்ட விஜயரங்க சொக்கலிங்க நாய்க்கர் உத்திரவின்படி இவ்விடத்திற்கு வந்தோம் ஆகையால் உங்களுடைய ராசனுக்கு நாங்கள் வந்த சங்கதிகளை துரிதத்தில் தெரியப்படுத்துங்கள் அர்க்கார்மார்களே

விருத்தம்,

திரிசிரபுரத்தையாளும் தென்னன்விசயரங்கன்
வரிசைதந்தனுப்பிவைக்க வந்தவரென்றுசொல்ல
இருவருமகிழ்ந்துவாரோ [illegible]மென்றுசொல்லிவிட்டு
திருமலைநாய்க்கன்முன்னே [illegible]ன்றுகண்டுரைசெய்வாரே

அர்க்காரர்கள்சொல்-தரு.

திக்குவிசயம்நடத்தியேசெங்கோல் செலுத்தும்வீரனே-அதி
செயகெம்பீரனே
சக்குவமுடன்தாங்களுரைத்த படியேநாங்கள்சென்றோம்-வந்த
உடைமன்னரைக்கண்டோம்
வந்தமன்னவர்தங்களைநீங்க ளெந்தவூரென்றோம் இங்கே
எதுக்கேவந்தீரென்றோம்
சிந்தமகிழும்படியெங்கள் மனக்கேதும்வகைசொன்னார் நாங்கள்
திரிசிரபுரமென்றார்
மன்னன்விசயரங்கேசனனுப்பிட வந்தோமதுரைக்கு நீங்கள்
போய்ச்சொல்லுந்துரைக்கு
என்னமனதுமகிழ்ந்துநடந்து இருவருநம்வந்தோம்-உங்க
ளிடத்தினிம்புரிந்தோம்
நமக்குதவியாய்வந்தபடையோர் ஞாயங்காணுது-அவர்கள
நவிலத்தோணுது
சுமக்கும்பாரமவர்கள்பேரில் திருமலேந்திரனே-ரூப
அழகுசுந்திரனே

அர்க்காரர்கள்சொல்-விருத்தம்.

சுந்தரமிகுந்தயெங்கள் துரைசிகாமணியேகேளாய்
சிந்தையுமயங்கவேண்டாம் திருச்சிறுப்பள்ளிராசன்
உந்தனுக்குதவியாக உவாந்தனுப்பிட்டசேனை
வீந்துமேவையையாற்றின் வடக்கிறங்கிருக்குதையா.

(வ-ம்) அகோகேளும் ராசசிகாமணியாகிய திருமலைநாய்க்கரே தாங்கள் சிந்தைகலங்கவேண்டாம் திரிசிரபுரத்தை யாளப்பட்ட விசயரங்க சொக்கலிங்கநாய்க்கர் உமக்குதவியாகச்சேனைகளையும் சேனாதிபதியை அனுப்பிவைத்தார் அவர்கள் வையையாற்றின்வடகரையில்வந்து இறங்கியிருக்கிறார்களையா திருமலைநாய்க்கரே,

விருத்தம்.

தளபதியுடனே சேனைத் தளங்கள்வந்திருக்குதென்ன
ளபதிதனக்கொப்பான நாயகன்மகிழ்ந்துசொல்வான்
அள்விலா மகிழ்ச்சிதந்த அர்க்காரேநீங்கள்சென்று
இராசமரங்கையன்தன்னை நேசமாயழைத்துவாரீர்.

வசனம்,

அகோ வாருங்கள் அர்க்காரர்களே நீங்கள் அதிசீக்கிரமாகப்போய் என் செல்வகுமாரனாகிய ரங்கப்பநாய்க்கனை என்சமுகத்துக்கு அழைத்து வாருங்கள் அர்க்காரர்களே.

விருத்தம்.

மைந்தனையழைத்துக்கொண்டு வாவென்று திருமலேந்திரன்,
சந்தோஷத்துடனேகூறத் தண்டியக்காரர்சென்று
சுந்தரசவுந்தரியத் துரைரங்கதீராவுந்தன்
தந்தையாந்திருமலேந்திரன் சமுகத்துக்கழைக்கச்சொன்னார்

(வ-ம்) அகோவாருங்களையா ரங்கப்பநாய்க்கரே தங்களுடைய தந்தையாகிய திருமலைநாய்க்கர் சமுகத்துக்கு அழைத்துக்கொண்டுவரச் சொன்னாரையா ரங்கப்பநாய்க்கரே.

ரங்கப்பனாய்க்கன்வருகிற-விருத்தம்.

அஞ்சலிலோடிச்சென்று அர்க்காருரைக்கக்கேட்டு
இஞ்சொல்லாய்வார்த்தையடி ஏகமாய்ப்பணிகள்பூண்டு
வஞ்சியரிருபால்வெண்சாமரைபணிமாரிவாழ்த்த
ரஞ்சிதமுடன்ரங்கப்பநாய்க்கனும்வருகின்றனே,

தரு-இ-ம-எதுகுலகாம்போதி-அட,தாளம்,

கன்னகனொனுந்தன்கூடல் மன்னவன்திருமலையன்
புண்ணியத்தினாலுதித்த பூபாலன்வந்தான்
சென்னியில்கொண்டையங்கட்டிச் சித்திரப்பணிகள்பூட்டி
மன்னவர்புகழ்ரங்கப்ப மகானுபவன்வந்தான்
கொஞ்சியேநடைநடந்து கோகிலம்போல்வார்த்தையாடி
ரஞ்சித்துணைரங்கப்ப நாய்க்கனும்வந்தான்
சத்தியுத்தமிகயற்கண் சங்கரிபதம்பணியும்
புத்திரனெனும்ரங்கப்ப பூபனும்வந்தான்
மங்கையரிருபுறமும் வந்குடன்கவரிவீச
நங்கையர்சூழரங்கப்ப நாய்க்கனும்வந்தான்
புத்தியாலெதுகுலகாம் போதிபாடித்தந்தைபதம்
சத்தியேதுரைரங்கப்ப நாய்க்கனும்வந்தான்

ரங்கப்பனுய்க்கன்சொல்-விருத்தம்.

சுந்தரிமீனாள்பாதந் துதிசெய்துமகிழ்ந்தென்னாளும்
இந்தநற்பதியையாளும் என்தந்தையாரேபோற்றி
அந்தணரானவீரஅர்க்காரர்தமைவிடுத்து
எந்தனையழைத்தசேதி யின்னதென்றுரைசெல்வீரே

வசனம்,

அகோ சர்வேசுரன் சரணமையா என் தந்தையாரே தேவரீர் ஆர்க்காரை யனுப்பி அடியேனைத் தங்கள் சமுகத்துக்கு அழைப்பித்த காரியம் இன்னதென்று தெரிவிக்கவேண்டும் பிதாவே.

திருமலைநாய்க்கன் சொல்-விருத்தம்.

இன்னதென்றுரைசெய்யென்ற என்னிடமகனேகேளாய்
தென்னவர்புகழும்நல்ல திரிசிரபுரத்துராச
மன்னவருடையசேனை வந்துமேவைகையாற்றில்
நன்னயத்துடனிறங்கி நலமுடனிருக்குதப்பா
நலமுள்ளசுதனேகேளாய் நமக்குமேயுதவியாகப்
பலமுடன்வந்தசேனை பெருந்தளபதியைநீயும்
இலகுவெண்கரியிலேறி எதிர்கொண்டழைத்திப்போது
நிலவர்முடனேஎன்முன் நிமிஷத்தில்வருகுவாயே

(வ-ம்) அடாவாடா உன்கண்மணியாகியபுத்திரனே இப்போது திரிசிரபுரத்திலிருந்து நமக்குதவியாகச் சேனைகளும் தளகர்த்தனும்வந்துவைகையாற்றின் வடகரையிலே இறங்கியிருக்கிறார்கள் நீ வெள்ளையானையின்பேரிலே ஏறிக்கொண்டு அதிசீக்கிரமாக எதிர்கொண்டுபோய் சந்நிதியில் அழைத்துவாடாமகனே.

ரங்கப்பநாய்க்கன்வசனம்.

அப்படியேயல்லதையா பிதாவே.

விருத்தம்.

தந்தைசொற்படியேசென்றுதளபதிதனையழைக்க
விந்தையாய்பணிகள்பூண்டு வெண்கரிமீதிலேறி
அந்தமாய்ச்சேனைசூழ ஆர்க்காரர்முன்னேசெல்ல
சுந்தரத்துரைரங்கப்ப துரைதான்வருகின்றானே
வந்தவன்வைகைதாண்டி வடகரைமீதிலேறி
சிந்தையுமகிழ்ந்துவந்த சேனைக்காவலனைப்பார்த்து
இந்தராணுவத்துக்கெல்லாம் எச்மானாய்வந்தவீர
சுந்தரன்தேருவெங்கே சொல்லியேகாட்டுவீரே

வசனம்.

அகோவாருங்கள் சேனைகளே இந்த ரானுவத்துக் கெல்லாம் எசமானய் வந்த சுந்தர வீரையன் கூடாரம் எது எனக்குக் தெரியப்படுத்துங்கள் காவலர்களே.

விருத்தம்,

சொல்லுவீரென்றுகேட்கும் துரைரங்கதிர மெய்கள்
வல்லவருனவீரன் வாழ்கின்றகூடாரந்தான்
நல்லதோர்பச்சைப்பட்டால்நாற்புறஞ்சாலாகட்டித்
துல்லியமாகவேதோ தோற்றுதுயாருமையா

(வ-ம்) அகோவாருமைய்யா துரைரங்கப்ப நாய்க்கரே யெங்களெசமானகிய வீரையன் கூடாரம் அதோ நாலுபக்கத்திலும் பச்சைப் பட்டினல் அலங்கரித்து விநோதமாய்த் தோற்றுதே அதுதானையா ரங்கப்பநாய்க்கரே!

விருத்தம்.

சல்லாபத்துரைகூடாரந் தானிதுவென்றுசொல்லு
நல்லாண்மையுடன்ரங்கப்ப நாய்க்கனுமகிழ்ந்துசென்று
வல்லமையுடையவீர மன்னவனருகிற்சென்று
சல்லாபத்துடன்றங்கப்ப தயான்னுமுரைசெய்வானே,

ரங்கப்பநாய்க்கன்சொல்விருத்தம்,

தேசமன்னவர்...டல் தென்னவன்திருமலேந்திர
ராசனென்தந்தை...மையுநலமுடனழைக்கச்சொன்னார்
போசனேயெழு...வாரும் போகலாங்கோட்டைக்கென்று
நேமமாய்வார்த்தைபேசி ரங்கப்பனழைத்திட்டானே,

வசனம்,

அகோவாருமைய்யா வீரையனே என்தந்தையாகிய திருமலைநாய்க்கர் உம்மை எதிர்கொண்டு அழைத்துவரச்சொன்னார் ஆகையால் எழுந்திருந்து கோட்டைக்குவாருமையா வீரையனே,

விருத்தம்,

திருமலைநாய்க்கருமமைச் செப்பமாயழைத்தாரென்று
தருமவானென்னுப்ரங்கப்ப நாய்க்கனுரைக்கக்கேட்டு
மறுமொழிப்கந்திடாமல் மன்னன்வீரப்பசாமி
சரூரென்வெழுந்துபெளூமபி தன்னுடன்ப்பயணமானன் ஆ

பொம்மியும்பல்லக்கேறிப் புறப்பட்டவீரசாமி
செம்மையாம்வேகம்பெற்ற தேசியின்மீதிலேறி
கம்பியேயிருபால்சேனைக் காவலருகிற்சூழ
ரம்மியத்துரைவீரையன் நலமுடன்வருகின்றானே.

௫-இம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

துரைவீரையனும்வந்தானே-திருமலைய
துரந்தரன்சமூகத்திற்றானே

அநுபல்லவி.

மறைவேதமும்புகழ மனுவலர்புடைசூழ
வையைநதியைக்கடந்து வல்லபவுல்லாசமுடன் (துரை)

சரணங்கள்.

செயபேரிகை முழங்கவே-வீரையனென்று
தென்மதுரைபேர்விளங்கவே
நயமாய்மொழிபகர்ந்து நன்னகரிதென்றுவந்து
தயவாய்த்திருமலையன் சஞ்சலமகற்றவென்று (துரை)
ரதிபொம்மிநாயகி கூடத்தண்டிகையேற
நங்கையர்வெண்சாமரைபோட
அறியன்ரங்கப்பநாய்க்கன் அருகிலுபசரிக்க
ததியிதுவெனச்சேனை தளத்துடனதிர (துரை)
சங்கரிமீனாளைப் பணிந்துகள்ளரைவெட்டிச்
சதைத்திடனெஞ்சந்துணிந்து
சங்கையில்லாவிருதுள்ள தளமன்னர்புடைசூழ
செங்கையில்மந்திரவாள்கொண்டு சித்திரப்பரியிலேறி (துரை)

விருத்தம்.

வருவதைக்கண்டுகூடல் மன்னவன்திருமலேந்திரன்
இருபுசம்பெருகிமேன்மேலினியசந்தோஷமாகித்
தருமதேவதைபோல்வந்த சாமிவீரையனேயென்று
கருதியேயெழுந்துநாய்க்கன் கைகொடுத்தழைத்திட்டானே.

இதுவுமது.

கைகொடுத்தழைத்துவந்து கனகசிம்மாசனத்தில்
பையவேயிருத்தித்தானும் பக்கத்திலிருந்துகொண்டு
செய்யுபசாரமெல்லாஞ் செய்துவீரையனைப்பார்த்து
வெய்யவேயெழுந்துநாய்க்கன் விசனமோடுரைசெய்வானே.

திருமலைநாய்க்கன்சொல் தரு-இ-ம்-பைரவி-சாப்புதாளம்.

ஜெகராஜர்புகழ்பெற்றஜெயசூரதுரைமுத்து வீரையனே-அஷ்ட
திக்குவிஜயாங்கசொக்கேசனைத்துப்பித்த வீரையனே
மகராஜனெனும்நவமணிமாலைபுனைமுத்து வீரையனே-எந்தன்
மனதிற்கவலையொன்றுவழுத்தக்கேள்துரைமுத்து வீரையனே
ஆருமெதிரில்லாமல்அரசாண்டிருந்தேனுன் வீரையனே-கள்ளர்
அலங்கோலஞ்செய்தென்னைஅவதிப்படுத்துகிறார் வீரையனே
இருஞ்செல்வமுங்கெடத்தேசத்தையழிக்கிறார் வீரையனே-அந்த
திருடரகமடக்கத்தெய்வம்போலநீவந்தாய் வீரையனே
நன்றைக்கோரியேசெங்கோல்நடத்துமென்னன்மைக்கோ வீரையனே [பொல்லா
நமனைப்போல்வதைச்செய்யும்நாட்டுக்கள்ளர்கூடினர் வீரையனே
என்னுமக்குச்சுகமாகவிருந்தரசாள்வேனுன் வீரையனே-இந்த
ஜெகமண்டத்திருடரால்இம்சைப்படாமல்முத்து வீரையனே
காட்டில்திரிந்தோர்வந்தென்காட்டைவளைத்துக்கொண்டு வீரையனே
கலகமில்லாமலென்னைவிலக்கவல்லவநீயே வீரையனே [செய்யுங்
கூட்டிலடைத்திட்டக்குருவிபோல்தவிக்கிறேன் வீரையனே-கும்பி
கொதிக்குதேயவர்செய்யுங்கொடுமையால்துரைமுத்துவீரையனே
கெதியுன்னையல்லால்வேறுகிடையாதெனக்குதவி வீரையனே-உந்தன்
கீர்த்திமிக்கவெந்தன்கவலைசமகற்றிவைப்பாய் வீரையனே
சதிசெய்யுங்கொடுங்கள்ளர்தனத்தைக்கறுவறுத்தால் வீரையனே எந்
தந்தைதாய்குருதெய்வந்தானுநீயேமுத்து வீரையனே

விருத்தம்.

தந்தைதாய்குருநீயென்று சாற்றிடக்கேட்டுவீரன்
சிந்தையுள்மகிழ்ந்துசொல்வான் திருமலைநாய்க்கனேகேள்
நிந்தனைசெய்யுங்கள்ளர் நெத்தியைப்பிளந்துதள்ள
எந்தனுலாகுங்கண்டீர் இனிவிடேன்துயர்தீர்ப்பேன்
நாட்டகமிருந்தகள்ளர் தம்மைநான்கருவறுத்துன்
நாட்டினில்பயமில்லாமல் நாளொட்டுக்குள்ளேசெய்வேன்
வாட்டமேயினிமேல்வேண்டாம் மன்னர்மன்னவனேயென்று
நாட்டமாய்வீரசாமி நாய்க்கனுக்குரைசெய்வானே

வீரையன்சொல்-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மனதிற்கவலையினிமேல்வையாதேமன்னன்திருமலைநாய்க்கனே.

அநுபல்லவி.

ஊனதுபதியினிமேல் இருடர்
உபத்திரமில்லாசசுகத்தைப்பெறுவீர் (மனதிற்)

சரணங்கள்.

தென்மதுராபுரிதேசத்தைமுன்னிலுஞ்
சீர்பெறுகஅர . சாளுவீர்
நன்மையுடன்செங்கோல்நீதிவழுவாமல்
ராஜராஜேந்திரன்போல் வாழுவீர்
கன்னமிடுமுன் கள்ளர்குலத்தைதான்
கைகொண்டுவெட்டிக் கருவையறுக்கிறேன் (மனதிற்)
மண்டலமெங்குமென் கீர்த்திவிளங்கவே
வைக்கிறேன்கள்ளரை மாய்க்கிறேன்
கண்டுகொள்ளுமெந்தன்வல்லபமுள்ளதைக்
கர்த்தன்திருமலை நாயக்கனே
சண்டப்பிரசண்டஉத் தண்டமாகவே
தாக்கிறேனுன்பயந் தீர்க்கிறேனிட்சணம் (மனதிற்)
சத்தியமம்பாளிருபதம்போற்றியே
சஞ்சலமில்லாமல் வாழ்மே
இத்திசையுள்ளோருன்வார்த்தைக்கடங்கி
இருந்துன்னடியிற் ஆழுமே
வெற்றிபெருங்கள்ளர் வீறுப்பையடக்கி
மேனுடெங்கும்பெண்கள் தாளச்செய்யுறேன (மனதிற்)

விருத்தம்.

மனதினிற்கவலைவேண்டா மன்னர்மன்னவனேயென்று
தனதுடன்வீரசாமி சாற்றியமொழியைக்கேட்டு
கனவெகுமதியுமீந்து காவலர்தம்மைநோக்கி
கூந்தமதில்வீடுதிநன்றாய்ச் சிங்காரஞ்செயுமென்றானே.

வசனம்.

அகோவாருமையா திருமலைநாயக்கரே நீர் இனிமேலமனக்கவலை வைக்கவேண்டியதில்லை யென்று வீரையன்சொல்லிய வார்த்தையைக் கேட்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டு வீரையனுக்குவேண்டிய வெகுமதிகளுங் கொடுத்து தன்னுடைய காரியக்காரர்களையழைத்து ஒருவீடுதி சிங்காரமாக அலங்காரஞ் செய்யச்சொன்னான் திருமலைநாயக்கரோ.

விருத்தம்.

விடுதிசிங்காரஞ்செய்து வேந்தன்முன்சுற்றுகூறச்
சடுதியில்திருமலேந்திரன் சாமிவீரையனைப்பார்த்து

கடுக்கவேவிடுதிக்கேகுங் காளைவீரையனையென்ன
திடுதிடென்றதிரப்பேரி கெம்பீரமுடனெழுந்தான்
மதுரைவாழ்சொக்கலிங்க மன்னனையனுப்பிவிட்டுக்
குதிரைமேலேறிச்சேனை கொக்கரித்தருகிற்சூழ
அதிசயக்கள்ளர்செய்யு மகந்தையையழிப்பேனென்று
மதிபொம்மியுடனேவீரன் வந்துமேவிடுதிசேர்ந்தான்
சேர்ந்திடும்போதுசாமி செங்கதிர்மலையிறங்க
பாய்ந்தியமுடனேசாதம் பலகனிபுசித்தப்போது
காந்தியினொளியாள்பொம்மி கன்னியுந்தானுமாக
ஏந்தியமெத்தைமீதி லிருவருங்கண்டுயின்றார்
துயின்றவருதையகாலஞ் சூரியனெழுந்தபோது
பயின்றுடன்வெளியில்வந்து பட்டணம்பார்க்கவென்றே
இயன்றதோர்தளங்களோடு மகிதோநகரமெல்லாம்
நயம்படப்பார்த்துவீரன் மதிபொம்மியிடத்தில்வந்தான்

வீரையன்சொல்-கந்தார்த்தம்

வந்தவன்பொம்மிதன்னை வாகுடனழைத்துச்சொல்வான்
எந்தனற்புதமேகேள் நாமிருபேருமாகச்சென்று
நந்தகோவிந்தன்தங்கை நாயகிமீனாள்பாதம்
சிந்தையில்வைத்துப்போற்றி
தெரிசிப்போம்வாராய்மகனே-ஜெகதாம்பாளைத்
தெரிசிப்போம்வாராய்மகனே

நரிபரியாகச்செய்த	நாதனுமையாள்பாதம்
வரிசையாயிருபேரும்	வாழப்பணிந்துப்போற்றி(தெரி)

தெரிசித்துத்துதிக்கநாமுஞ் செங்கண்மால்தங்கையர்க்கு
வரிசையாயிரம்பொன்வாகுடன்சிலவழித்து
அறுவகைப்பழங்கள்வைத்து அபிஷேகஞ்செய்துபோற்றி
இருவரும்வருவோம்பெண்ணே
எழுந்தென்பின்வாராய்-பொம்மிம[illegible]
எழுந்தென்பின்வாராய்

எழுந்தென்பின்வாராய்நாம்	இருபேரும்போய்மீனாள்
செழுந்தும்பைமலர்சூடும்	திருபதந்தெரிசிக்க(எழுந்)

விருத்தம்,

இருப்பதந்தெரிசித்தேற்றத் தேவிநீவாராயென்று
விருப்பமாய்ப்பொம்மிதன்னை வீரையனழைத்துக்கொண்டு

[illegible]ருக்கமாமலையைதன்னி லுவந்துமேல்சானஞ்செய்து
மருக்கொழுந்தணியுமீனாள் மலப்பதந்தொழுதிட்டானே.
தொழுதுமீனாட்சியாள்பாதஞ்சொக்கநாதனையும்போற்றி
பழுதில்லாவரங்கள்பெற்று பாங்குடனிருவருந்தான்
செழுமதியுதித்தார்போலுஞ் சென்றவர்விடுதிசேர்ந்து
வழுவிடாதிருந்து அன்னம் பாகுடன்புசித்தாரன்றே.
அன்னமுன்பழமுநல்ல அறுசுவையுடன்புசித்து
வன்னமாளிகையைவிட்டு வாகுடன்பரியிலேறி
மன்னவன்சமுகஞ்சென்று வார்த்தைகள்பேசிக்கொண்டு
தென்னவர்மதுரைமாசித் தெருவீதிசாரிவந்தான்
சுவைதருமதுரைநாட்டில் தோகையர்தன்னைச்சாமி
நவசித்திரப்பெண்களென்று நாட்டமாய்க்குறித்துவந்து
அவசியமுன்னேவீர னழிக்கவேநினைத்துக்கொண்டு
சுவைவொன்றும்நினைக்கவில்லை கன்னியர்மோகத்தாலே
மோகமேயதிகரித்து மொய்குழல்மயக்கிற்சிக்கிப்
போகமேவிரிதாயெண்ணிப் பொம்மியைமறந்துவீரன்
வேகமாய்க்கள்ளர்செய்யும் வினைதனைமறந்தானென்று
தாகமாய்த்திருமலேந்திரன் சாமியையழைத்துச்சொல்வான்,

திருமலேந்திரன்சொல்-கந்தார்த்தம.

நல்லது தம்பிநீயும் நம்மிட துயரந்தீர்க்க
வல்லவனென்றுபின்னே வரச்செய்தகதைதனைக்கேளும்
உல்லாசமுடனேமுன்னே உறுதிதான்மெத்தப்பேசி
சல்லாபத்திருடர்கோட்டை

தன்னையுங்கெடுக்கவோவந்தாய்-உன்றாலேபாதி
என்னையுமுடிக்கவோவந்தாய்
முன்னேயே[illegible] மோசமில்லாமல்காக்க
உன்னையேயழைத்ததற்கென் னூரெங்கினுமாதர்கள்

விருத்தம்

கள்ளராலிம்சைபட்டுக் கலங்கியேயிருந்தவென்னை
உள்ளமேதெளியப்பேசி யுதவிபோலிருந்தென்கோட்டைக்
கொள்ளைசெய்யாமற்செய்து கோதையர்கற்பழித்தாய்
தெள்ளியதிருடனுன்போல் தேசத்திலில்லைதம்பி.

வசனம்.

அகோர்வாரும் தம்பி வீரையனே கொடும் பாவிகளான கள்ளர்களினால் இம்சைப்பட்டு மனதுகலங்கியிருந்த என்னையென்னுள்ளந்தெளியத்தக்கதாக எனக்குதவிபோலவந்து மனதிற்கவலை வேண்டாம் உன்கல

க்கத்தைத் தீர்த்துவைக்கிறே னென்று சொல்லி யிப்போது நீ என்னு டைய பட்டணத்திலே யிருக்கப்பட்ட பெண்களைக் கம்பழிக்கத்தலைப்ப ட்டாய் ஆனு லுன்னைப்போல தெளிவிமையுடையசல்லாபத்திருடா இ ந்தத்தேசத்தில் நானெங்குங்கண்டதில்லை தம்பிவீரையனே.

விருத்தம்.

சல்லாபத்திருடனென்று சாற்றிட திருமலேந்திரன்
ல்லமையுடையவீர மன்னனுங்காதிறகேட்டு
பொல்லாதகாளைவேங்கைப் புலியெனக்கதும்பிச்சொல்வான்
சொலலாதவார்த்தைசொன்னீர் சிந்தையிற்பொறுத்தேன்மன்னு
சிந்தையுட்பொருத்தும்ராசன் செப்பியவசனத்தாலே
அந்தரம்பூமியெங்குமதிர்ந்திடக்கோபம்வந்து
இந்தநாழிகையிற்கள்ளர் எவ்விடத்திருந்தபோதும்
பந்தயங்கூறிக்கொள்ளப் பாக்கிலைதாருமன்னு

வசனம்.

அகோவாரும் திருமலைநாய்க்கரோ நீர் சற்றுமெண்ணிப் பாராமல் என்னைச சலலாபத்திருடனென்று சொன்னீ ரலலவா நல்லது ஆகட்டு ம் இந்தநாழிகையில் கள்ளப்பயல்களெவ்விடத்திருந்தபோதிலும் துண் டுதுண்டாக வெட்டியெறிவேன் எனக்குத் தாம்பூலங்கொடும திருமலை நாய்க்கரோ,

விருத்தம்.

பாக்கிலைதாருமென்று பதரியேவீரசாமி
தாக்கியமொழியைக்கேட்டுத் தாரணிமன்னனான
நாயக்கனும்பயந்தெதிர்ந்து நலமுள்ளவார்த்தைபேசி
சீக்கிரமருகலவந்து சிந்தைநொந்துரைசெய்வானே.

திருமலைநாய்க்கன்சொல்-கந்தார்த்தம்.

நாற்றிசையெங்கும் நடுங்கவேகள்ளர்
கூற்றுவன்போலே கூடியேகொண்டு
ஆத்திரத்துடனே யமடுசெய்யாமல்
காத்திடுவாய்நீ

பார்த்திபனானவீரனே-யிதுசமயம்
பாரும்வீராதிவீரனே,

பார்த்திபனேகேள்கள்ளப் பயல்கள்செய்யிமைசையால்
சேற்றில்நட்டகம்பம்போல் தியங்குதெனதுசிந்தை (பார்த்தி)
இதுவேசகாயமெனவேநினைந்தெ னிடர்களும்வீரதுரையே
மதுராபுரிக்குளியாருனைப்போல் மனதுக்கிசைந்ததுரைவரு

பதியாளுமட்டுமின்தானநாட்டைவலதாகினேப்பில்மறவேண்டி
சதிசெய்த்கள்ளர் தனையேவ்வதைக்கத்

திருண்மையாநடந்திடும் சுவாமிவீரர்யீ
திருணமையாநடந்திடும்சாமி

திரணமாகவே கள்ளர்படைகளைச்
சித்திரவதைசெய்து வெற்றிகொண்டுவா (திரு)

வெண்பா.

சித்திரைவதைசெய்துகள்ளர் சேனைகளைக்கொன்றழகனீ
வெற்றிபெற்றுவாருமுத்து வீரையனே-சத்தியமாய்
பாக்கிலையிந்தாருமென்று பாரான்திருமலைய
நாய்க்கல்கொடுத்தனுப்பினான்

வசனம்.

ஐகோ வாரும்தம்பி வீரையனே என்மனது சந்தோஷமாகும்படி யாய் நீபோய் அந்தகொடும்பாவிகளான கள்ளர்களை வெட்டியெறிந்து வருவாய் இது சத்தியம் இந்தாரும் தாம்பூலம் அதிசீக்கிரமாகப்புறப்படும் வீரையனே.

விருத்தம்.

பாக்கிலைவாங்கிக்கொண்டு பாங்குடனடவுமென்று
நாய்க்கனுத்தரவுபெற்று நலமுடன்வீரசாமி
சீக்கிரம்பொம்மிவாழுஞ் [illegible] கையில்வந்து
பாக்கிலைதன்னையந்தப் பைந்தொடிகையிலீய்ந்தான்,
பைந்தொடிகையிலீந்து பரும்புயன்வீரசாமி
சந்தோஷத்துடனேபொம்மி தன்னுடனேதுசொல்வான்
எந்தனுயிரியேகேளாய் இப்பவேகள்ளர்தம்மை
சிந்தகள்வெவ்வேறாக்கச்செய்துநான்வாரோன்பெண்ணே
வீரையன்சொல்-தரு-இ-ம்-காம்போதி-அடதாளம்,

பல்லவி;

கள்ளரைச்செயித்திடப்பெண்ணேசென்று
கடுகியேவருகிறேன்கண்மணியே

சரணங்கள்;

வள்ளல்மீனாட்சிமதுரையில்வந்து
வாகுடனேவெகுபடைகூடி

கொள்ளைகளாடியே பாவிகள்செய்திடும்
   கோரணிக்காய்பொம்மிமாதரசே (கள்ளரை)

வந்துஇந்நாள்வரை சந்ததந்திருமலை
   மன்னவன்[illegible]துயராதுதிர
[illegible]தரபரிமிசையேறியேநான்வெகு
   சுறுக்கினில்போய்வாரேன்பெண்ணரசே (கள்ளரை)

அஞ்சலென்றோர்கள் நெஞ்சிற்கவலையை
   யகற்றிடநான்போய்வருமட்டும்
பஞ்சணைமீதிலே மகிழ்வாயிரு
   பைந்தொடியேபொம்மிமாதரசே (கள்ளரை)

விருத்தம்.

இப்படியாகவீரன் ஏகாந்தவார்த்தைபேசி
மெய்ப்புடனிருக்கும்போது மேனாட்டுக்கள்ளரெல்லாஞ்
செப்பிரைய்க்கூட்டஞ்சேர்ந்துசிறந்தவாயுதங்கள்கொண்டு
கொப்பெனமதுரைமேற்குக் கோட்டைவாசலில்வந்தாரே

கள்ளர்கொள்ளையடிக்குதல்

விருத்தம்.

வந்தவர்நாலுகோட்டைவாசலும்வளைத்துக்கொண்டு
சந்தோஷத்துடனேமீனாள் சந்நிதிமுதலாலள்ள
அந்தணர்வீதிராச அமைச்சர்கள்வீதிதோறும்
விந்தை[illegible]புகுந்[illegible]ர் மிகுகொள்ளையாடினரே.

தரு-இ-ம்-பர்துவராளி-சாப்புதாளம்.

பல்லவி.

கொள்ளையாடினர்கள்ளர் கூடிக்கொள்ளையாடினர்

அநுபல்லவி.

துள்ளியேபடைநாலுதிக்கிலும் சூழ்ந்துகும்புகும்பாகவே
   தெள்ளிமையுடன் குலவையிட்டவர்
   பள்ளிபணாகளி துள்ளிநடுக்குந்து கொண்டு (கொள்

சரணங்கள்.

கத்திகேடயம்ஈட்டிசக்கரம் கைதனில்வளைதடியும்
   பத்திபத்தியாய்க் கொண்டுமதுரைப்
   பட்டணமெங்கும் கொட்டமடித்துக்(கொள்ளை)

பேட்டையுங்கடைவீதியும்புகுந் பெருந்திருமலைநாயக்கன்
வீட்டையும்புகுந் தே[illegible]டயே
வெட்டிவெகுநிதி கட்டியேகொண[illegible](கொள்)
சுந்தரிமீனாள்கோவிலுங்கொள்ளை துவக்கியேவெகுமுடிக்கா[illegible]
பந்துவ[illegible]ளியின் ராகம்பாடிச்
சந்துதெரு[illegible]னில் வந்துமூடுகி(கொள்)

விருத்தம்.

ஆடினார்கொள்ளையெங்கும் அதவடியாக்வப்பேர்
வாடியேதிருமலேந்திரன் மாளிகையடைத்துக்கொண்டு
நீடியேபெருமூச்சிட்டு நிராயுசாயிருக்கும்போது
நாடியேவீரன்பொம்மி நாயகிக்குரைசெய்வானே

கலித்துறை.

தேனேயமிர்தகுணவான் திருமலைத்தென்னவன்சொல்
நானேவிரும்பிவந்தானேயிந்நாழிகை நண்ணியந்தக்
கானேகுடிகொண்ட பொல்லாதகள்ளர்கறுவறுக்க
மானேயெனக்கினி தானேவிடைகொடேஞ்சியரே

வசனம்.

அகோவாராய்ப் பெண்ணேபொம்மிநாயகியேஇப்போது அமிர்த குணவானாகிய திருமலைநாயக்கன்படும் இம்சைதீரும்படியாய் இந்தகூனத்திலேபோய் அந்தப் பொல்லாதகள்ளரைக் கறுவறுத்துவருகிறேன் எனக்குவிடைகொடுத்தனுப்பும்பெண்ணே.

பொம்மியம்மாள்-கலித்துறை.

பொல்லாதகள்ளர்தலையைவெட்டிடப்போறேனென்ற
வல்லமையுந்தன்மனங்கொண்டபோதுமறுவசனஞ்
சொல்லுவதேதுசுகமாகச் சென்றுசிறுக்கினிலே
சல்லாபமாய்வருவீரிதுகா[illegible]னுமக்குத்தான்விடையே

வசனம்,

அகோவாருமென் பிராணநாதரோ நீர்போய்அந்தப்பொல்லாதகள்ளர்களைச் செயித்துவருகிறேனென்றவல்லமை யும்முடைய்இருதயத்திலே யிருக்கும்போது மறுவசனமேது ஆகையால் நீர்சுகமாகப்போய் செயித்துவாரும் இதுதான்விடை போய்வாரும்சுவாமியென் பிராணநாதா.

விருத்தம்,

விடைதனைப்பெற்றுக்கொண்டு விரையன்பரியிலேறி
மடமயில்தன்னைப்பார்த்து வாகுடனேதுசொல்வான்

விடுமெனுமென துகையில் வீரவாள்தனையெடுத்து
திடமுடன்கொண்டுவாராய் சீக்கிரமதீர்தமானே.

வசனம்.

அடி வாடி பெண்ணே பொம்மிநாயகியே இப்போதுன்வீட்
டிலேயோ சீக்கிரமாயெடுத்து வாழ்த்திக்கொடும்பெண்ணே

விருத்தம்.

வீரவாளெடுத்துக்கொண்டு வேகமாகப்பொம்மிவந்து
தீரனேகள்ளர்தம்மைச் செயித்துநீர்வாருமென்று
காரொளுங்கூந்தல்மாது காளைவீரையனார்கையில்
கூரியவீரவாளைக்கொடுத்துமேயனுப்பினாளே

வீரையன்சண்டைசெய்யும்-கந்தார்த்தம்.

உத்தண்டமுடனேவீர னுருவியேவீரவாளை
மெத்தவேகொக்கின்சேனை மேவும்ராசாளிபோலே
தத்துவத்துடனேபாய்ந்து சண்டமாருதம்போல்சுவாமி
சுற்றியேவளைத்துக்கொண்டு
துண்டுதுண்டாகவெட்டினான்கள்ளப்படையைத்
துண்டுதுண்டாகவெட்டினான்
துண்டுதுண்டாகவெட்டிக் கொண்டைகளைப்பிடித்து
மூண்டுசெய்தபயல்கள் மண்டைமூளைசிதைய(துண்டு)

மண்டை[illegible]ன்மூளைசுகத[illegible]ருமாரென்றுசொல்லிச்
சண்டப்பிரசண்டவீர சாமியும்நொறுக்கிக்கொண்டு
துண்டபுத்தியுள்ள துஷ்டராங்கள்ளர்தம்மை
சித்திரவதைகளைசெய்தானே சிலதுபேரைப்
பற்றிச்சிரத்தைக்கொய்தானே
சித்திரவதைகள்செய்தான் [illegible]ம்வளைத்துக்கொண்டு
குத்துமிரோடேகள்ளர் கத்தியபயமிட(சித்திர)

விருத்தம்.

இப்படிவீரசாமி இடம்வலஞ்சாரிபாய்ந்து
சுற்பனைசெய்துகள்ளர் தளங்களைவதைக்கும்போது
கொப்பெனப்பின்னுங்கள்ளர் கோடானுகோடியோர்கள்
செப்பமாய்வந்துவீர தீரனையெதிர்த்திட்டாரே

வசனம்.

அங்கே செப்படியென்றால் இந்தப் பிரகாரம் வீரையனானவன்
கள்ளர் சேனைகளிற் புகுந்து தாறுமாறாய் வெட்டி யெறிவதைக்கண்டு

பெரியகள்ளர்கள் சேனைகளைக்கூட்டி ஈட்டி வளைதடிமுதலிய ஆயுதங்
களைக்காட்டி வீரனைச் சூழ்ந்துகொண்டெதிர்த்தார்கள்.

கந்தார்த்தம்,

எதிர்த்திடக்கண்டுவீரன் இருவிழியனல்போலாகித்
கொதித்திடுஞ்சினங்கொண்டப்போ கொக்கரித்து[illegible]
துதித்து[illegible]மேதிருப்பிப்பின்னும் சூழ்கள்ளர்தளத்தையெல்லா[illegible]
மிதித்திட வென்றுமுத்து
வீரன்பு[illegible]தினன்-கள்[illegible] படையைப்
பாரினுய்ய[illegible]க்கினன்
வீரன்பரிநடத்தி[illegible] சாரிசெய்யுமிடத்தில்
சூர[illegible]ங்கள்[illegible] பாரிலீசல்போலுய்ய (வீர)
பரிமிதியாலே[illegible]பாதிபட்டிடக்கள்ளர்சேனை
வெறிபிடித்தவர்கள்போல மிரளவேசூழித்துக்கொண்டு
பரிபரியாகக்கள்ளர் பதிதனைவிட்டேயோடே
துரிதமாய்க்கண்டுவீரன்
துரத்திதுரத்திவெட்டினான்-கள்ளருடைய
சிரத்தைத்தோரணங்கட்டினான்
சிறத்தில்மிருந்தகள்ளர் குரங்கைப்போல்விழிக்கவே
செங்கையில்வாளினு லங்கமவேறாகவே
எங்கேபோதீயென்று சிங்கம்போலப்பாய்ந்து (சூர)

விருத்தம்.

சிங்கம்போற்பாய்ந்துவெட்டுஞ் செயவீரன்வலிமைகண்டு
அங்கமுருகிக்கள்ளர் அலறியேமண்மேல்வீழ்ந்து
எங்களைக்கொல்லவென்று எமனைப்போலேவந்த
ஆங்கனேபயமென்றுசொல்லியேபுலம்புவாரே.

கள்ளர்புலம்பல்.

தரு-இ ம்-நீலாம்புரி-அடதாளம்,

பாவியுமக்கபயம் எங்கள்பதி
பாவமுமக்கிங்கிதேன்[illegible]
ஆவிபதறப்புதற வதைப்பதால்
அங்கமுருகுதையோ
தன்னரசுநாட்டி வெந்நாளுந்
தழைத்தோங்கிவாழ்ந்திருந்தோம் இப்போ
நின்னதுர்கூட்டிலே வந்துநாங்கள்
நாசமடைந்தோமே

நம்மிலுஞ்சூரிந்த தென்
னாட்டிலில்லையென்று
வன்மனதாலேயிந்த மதுரையில்
வந்துபடைசேர்ந்தோம்
ஆடுமாடுங்கொள்ளைகளை இந்தவரை
யாருமெதிரில்லாம எங்கள்
கொடிபடையும்வதைக்கவோநீரிந்தக்
கோலமெடுத்துவந்தீர்
எங்களைக்கொல்லவென்று கொடும்பாவி
எமனைப்போல்வந்த
சங்கதிரமறிந்தால் மதுரையைச்
சற்றும்நெருங்கோமே
அச்சமில்லாமலிந்நாள் வளைக்கும்
அதவழிக்கொள்ளைசெய்தோம் இப்போ
நச்சுமரம்போலே பூளைத்து
நற்பெலியிட்டீரே
கத்திமழுங்கிலையோ பாவியுந்தன்
கையுஞ்சலுக்கிலையோ
சித்தமிரங்கிலையோ வந்தவழி
செல்லமனமில்லையோ
வாய்ச்சுதுமதுகத்திக் திரைகள்
மனதுகளிகூற
ஆச்சுதெங்கள்படை நடந்திடும்
ஐயாவுனக்கபயம்

விருத்தம்.

ஐயாவுனக்கபயமென்று அழுங்கள்ளர்தன்னுரையை
அதிவீரனயன்கேட்டுமனதனுவுமிரங்காமல்
மெய்யாமொருவசனந்தன்னை வேகத்துடன்மொழிவான்
வேங்கைப்புலிபசியிறகண்ட வேதியனைவிடுமோ
செய்யாவினைசெய்தகள்ளத்திருடர்களேயுங்கள்
சென்னியறுக்காமல்விடேன்கணப்போதிலேயென்று
கையாயுதமெடுத்துவந்த கள்ளப்படைமுழுதுங்
கடுகச்சமர்பொருதிரணக்களமாகவேகண்டான்

விருத்தம்,

ரணக்களமாகச்செய்து நறுக்கியேயெறிந்துபோட்டுக்
கணமுதல்பேய்கள்கூளி கிட்டியேவிருந்துதின்னப்
பிணமெனுங்காடதாக்கிப் புரவியைத்திருப்பிக்கொண்டு
கூணமதில்மேனாட்டுக்குத் தீரனுங்கடந்திட்டானே.

கடந்தவனழகர்கோயில் நாட்டுக்கள்ளர்கள்தான்வாழும்
இடந்தனிற்சென்றுகெற்ப ஸ்திரீகளைப்பிடித்துத்தொங்கி
குடைந்துமேகீறிப்பார்த்துக்கொடியினிறகருவாண்பிள்ளை
அடர்ந்திடுங்கருவீதென்று அறுந்துமேயெரிந்திட்டானே.
மட்டுடன்காமற்கிண்டு வந்துமேகொள்ளைசெய்த
துட்டராங்கள்ளர்தம்மைத் துரத்தியேயிருதுண்டாக
வெட்டியேகருவறுத்து விளங்கிடுஞ்சவுக்கமேட்டில்
நட்டணையாகவீரன் ரணக்கொலுவிருக்கின்றானே.
ரணக்கொலுவிருக்கக்கண்டு நாயக்கன்மனம்பூரித்து
குணமுடனெழுந்துமீனாள் கோவிலுட்புகுந்துசொல்வான்
எணதுநற்பதியாமுந்த பேர்கொலையைத்தொலைக்கச்செய்தோன்
மனமுடன்வாழ்கவென்று வாழ்த்திநீர்கொடுப்பாயம்மா.
திருமலைநாயக்கன்சொன்ன சேதிமீனம்பாள்கேட்டு
மறுமொழிபகர்ந்திடாமல் மவுனமாய்த்திருநீறள்ளித்
திருவெனும்வெள்ளைகையில்தேவிமீனம்பாளீய்ந்து
அருமையாவீரன்திருஷ்டி கழித்திநீவெண்ணீறென்றாள்.

வெள்ளையம்மாள்வருகிற விருத்தம்.

சத்திமீனம்பாள்வார்த்தை தையலுங்கேட்டுவந்து
அத்திசூழ்கயற்கண்ணாள்தன் னாலயங்கடந்துமாது
சுத்திலாலாத்தியேந்தித் தோழியாருகிற்சூழப்
பத்தினிவெள்ளையம்மன் பாங்குடன்வருகின்றாளே.

இதுவுமது.

சிங்காரமுடனாலாத்தி சேடியராயிரம்பேர்
பொங்கமாயெடுத்துசூழப் பெண்கள்நாயகியாளப்போ
தங்களாபரணமெய்யில தகதகென்றொளிகள்செய்ய
அங்கவேள்ரதிபோல்வெள்ளை யம்மனுந்தோணினாளே.

தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

விந்தையுடன்வெள்ளையம்மை சுந்தரவீராயன்முன்னே
சந்திரனுதயம்போல வந்துதோணினாளே

அநுபல்லவி.

அந்தமாய்க்கரத்திலீனாள் தந்திடும்வெண்ணீறுகொண்டு
விந்தையாய்மாதர்கள்சூழச் சுந்தரப்பணிகள்பூண்டு (விந்தை)

சரணங்கள்

காக்ஷியருள்கௌரிகா மாக்ஷிதிரிபுரைவிசா
லாக்ஷிபுயர்கருணை டாக்ஷியுமையாள்
ஆக்ஷிசொக்கர்பங்கிலுறை ருக்ஷிதிரு... ணாமீ
னாட்சிபொற்பாதம்பணிந்து னாட்சியின்றி...யேநடந்து (விந்தை)

திந்திமிமேளமுரசு மத்தளங்கைத்தாளந்தவில்
சத்தவாரிபோல்முழங்க வித்தாரமதாய்
சித்திரசடைநடந்து வெற்றிமங்கலம்பகர்ந்து
அஸ்தமதிலேமாணிக்க முந்திருலக்கிகொண்டு (விந்தை)

பார்க்குள்மருவளர்புகழ் ...ர்க்கவீரையன்மனதுக்
கேர்க்கமன்னனின்திருமலை நாயக்கன்செப்பவே
தாக்குடன்தாதியர்சூழச் சேர்க்கையுடனேநடந்து
தீர்க்கமாய்க்காம்போதிராகம் ஏர்க்கையுடனேபகர்ந்து (விந்தை)

விருத்தம்.

விரைவுடன்வெள்ளையம்மன் வேடிக்கையாகத்தானே
நிரைநிரையாகதாதி நேரிழைமார்கள்சூழ
தரைபுகழ்விசயரனை தாஷ்டீகனெனும்வீரைய
துரைமுன்னேநின்றுலாத்தி சுழன்றிசோபனஞ்சொன்னளே
சீர்புகழ்வெள்ளையம்மன் செங்கனிவாய்த்திறந்து
பார்புகழ்வீரர்க்குச்சோ பனமுமேமகிழ்வதாக
கடாவின்தன்மேலாசை கொண்டுதன்மனதிலெண்ணித்
தீரனும்நடந்தான்மாதர் சிறந்தவர்மனைசென்றுமே

தரு-இ-ம-நாதநாமக்கிரியை-அடதாளம்.

வெள்ளையருமேவிடுதிக்கை — துரை
வீரையனும்மெத்தமயலாக
உள்ளமதிலேநினைந்துவீறாய் — நாயக்கன்
ஒற்றவரண்மனை...வாரான்
வாரடிதுடிவேர்தன்கன்...கண்டு — மெச்சி
வார்வழைத்தருகில்வைத்துக்கொண்டு
வீரையனென்றுனக்கேசெல்லும் — இங்கு
வீரியமேவாக்குவருஞ்சொல்லும்
கொள்ளையிட்டகள்ளர்தமைக்கொன்று — வெற்றி
கொண்டுவந்ததாஷ்டீகமேயென்று

கள்ளர்செ[ய்]கலக்கந்தீர்ந்ததின்றே
காரியம[ெல்]லாஞ்செய்தானென்றே
விண்டதுரை[வீ]ரர்க்குத்தானப்போ
வெகுமதிகொடுத்தானனுப்ப
பெண்டத்துரை குதிரையேறியத்தான்
வாகுடனேதன்வீடுதிவந்தா[ன்]
அந்தால்வீடுதிவந்துவெந்நீர்
தன்புடன்வெண்ணீரணிந்[து]பன்னீர்
சந்தனம்புனுகுகஸ்தூரி
தையல்பொம்முடன்சேதிபேசி
இருவரும்பாலன்னம்புசித்தேதான்
வில்லையருந்திபஞ்சணையிலேதான்
மருவிவிளையாடிப்பொம்மிமாது
வாகுடன்மகிழ்ந்திருக்கும்போது
வீரையன் வெள்ளையம்மாளைச் சிறையெடுக்க வருதல்.

விருத்தம்

இருந்தங்கிரவுமாகி இதுகுலுங்காதநேரம்
அருந்ததிவெள்ளையானை அழிக்கவேநினைத்துக்கொண்டு
மருந்தையுமள்ளித்தூவி மயக்கியேபொம்மிதன்னை
கருங்கள்ளர்போலேகச்சை கட்டியேபுறப்பட்டானே.

ருகு-இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வெள்ளைமீதினிலாசைகொண்டுதீ வீரதீரனும்வருகிறான்

அநுபல்லவி

கள்ளன்போலவேருப்மா[றி]யே கங்குலிருள்நடுச்சாமத்தில்
மெள்ளவெழுந்துமே பொடியைத்தூவித்தன்
மெல்லிபொம்மியை மயக்கியே-வெள்ளை

சரணங்கள்.

துஷ்டநிக்கிரகஞ்செய்தவீரா துரைக்குக்கண்ணேறுவிலக்கவே
அஷ்டலட்சுமி போலவேவந்த
அருகிலாலாத்தி சுந்தரி-வெள்ளை
ஆசைகொண்டதிவேகமாய்நடந் தீர்க்கராத்திரிவேளையில்
பூசைப்பணிவிடை முடித்துஅவரதனிற்
போய்ப்படுத்துக்கண் துயின்றிடும்-வெள்ளை

தெள்ளிமையுடநடந்துவிளையன் திருடன்போல் சிறையெடுக்கவே
உள்ளமதில் ...ந்துப்பார்வது
உத்தமித்தவம் ...பெருகியவெள்ளை

விருத்தம்.

இலங்கியவீரசாமி இரவினில்நடுச்சாமத்தில்
நலங்கிடாதெழுந்துபொம்மி நாயகிதனைமயக்கிக்
குலங்கள்ளர்போலவேஷங் கொண்டுதான்மதுரைமீனாள்
தலங்கண்டுகோயிற்கட்டைத் தாண்டவேவினவுகொண்டான்
தாண்டவமாடுசொக்கர் சந்நிதிகடந்துதெற்கே
ஆண்டவலகிலமெல்லாம் ஆகூஷிமீனாட்சிவாசல்
நீண்டதோர்கம்பநாட்டும் நிலைபெறுமதிலைத்தாண்டி
மீண்டவனிரங்கிக்கோயில் மின்னடிகடந்துபோனான்
போசமேவவெள்ளையம்மன் பூலோகநாயகிக்குப்
பாசமாயடப்பங்கட்டிப் பள்ளியிற்சேர்ந்தபின்பு
தோகையும்படுத்துமெத்தச் தூக்கமாயிருக்கும்போது
வாகுள்ளவீரசாமி வந்துவெள்ளையளைக்கண்டான்
கண்டவன்கருணைகூர்ந்து கன்னிவெள்ளையர்மேலாசை
கொண்டவள்நித்திரைசெய்யுங் கோவலமாமெத்தைமேலு
தண்டமாயிருந்துஅந்தத் தையல்தன்னழகுஞ்சிரும்
கண்டமன்மயக்கங்கொண்டு களைத்திடும்பொடியைப்போட்டான்
பொடிதனைத்தூவிச்சாமி பூவையைமயங்கச்செய்து
துடிசெய்யப்போகாதிப்போ தூக்குவோம்தோளிலென்று
வடிவழகுடையவீரன் வஸ்திரந்தன்னிற்கட்டி
முடிந்துமேயெடுத்துக்கொண்டு மெல்வெனவெளியில்வந்தான்
பொட்டணந்தோளிலிட்டுப் பொன்முடிவீரசாமி
திட்டமாய்வருகும்போது சேவகர்பிடித்துக்கொண்டு
கட்டவேசெய்தாரப்போ கள்...கண்டோநாமுஞ்
சட்டமாய்ச்சொல்வோம்வீர சாமியையெழுப்புமென்றான்
ஆரடாதிருடாவுன்னை யறிந்தல்லோபோகவேணும்
கூறடாவசனமென்று கூப்பிட்டுப்பேசவில்லை
பாரடாயிவன்றனாண்மை பத்திரப்படுத்திக்கொண்டு
கூறடாதிருமலேந்திர குஞ்சரன்சமூகமென்றார்
என்றவர்கூடிப்பேசி யெல்லோருமாலோசித்து
பன்றயத்திருடனென்று பத்திரம்படுத்திக்கொண்டு
சென்றவர்கோயில்தன்னிற் றிருடியகள்ளன்றன்னை
கண்டுமேபிடித்தோமென்று கடுகவேயனைசெய்தாரே.

வசனம்,

அகோ ராஜாங்க சரணமையாசுவாமி திருமலைநாயக்கரே இன்றை யதினம் நாங்கள் பாருகொடுத்திருக்கும்வழியாய் ஒருஊமைத்திருடன் மீனாட்சியம்மன் கோயிலிற்புகுந்து என்னமோ ஓருமூட்டை திருடிக் கொண்டுவந்தான் அவனைநாங்கள் பிடித்துக் கட்டிவைத்துப் போட்டு த் தங்களுக்குத்தெரியப்படுத்தவந்தோமையாசுவாமி.

திருமலைநாய்க்கன்சொல்-விருத்தம்,

கோயிலில்திருடவந்தான் குறும்பதாய்க்கள்ளனென்று
போயவர்சொல்லக்கேட்டுப் புகலுவான்திருமலேந்திரன்
வாயிலாக்கள்ளன்கொண்டு வந்ததைப்பறித்துக்கொண்டு
ஞாயமாய்மாறுகால்கை நறுக்கியேபோவீரோ.

வசனம்.

அகோவாருங்கள் சேவகர்களே நீங்கள்போய் கோயிலில் திருடவந்த வாயில்லாத ஊமைக்கள்ளன் கொண்டுவந்ததைப் பறித்துக்கொண்டு சீக்கிரமாய் அவனை மாறுகால்மாறுகை வாங்கிப்போடுங்கள் சேவகர்களே,

விருத்தம்.

உத்தரவானபின்பு ஓடியேபாராக்காரர்
பத்தரைமாத்துத்தங்கம் பரும்புயன்வீரசாமி
மெத்தவேகொண்டுவந்த விதமுள்ளசுமையைவாங்கி
கொற்றவன்பாராதன்னில் கொண்டுபோய்வைத்திட்டாரே
சாலுவைப்பொட்டணத்தைத் தாவென்றுவாங்கிப்பாரா
மேலுமே வைத்துக்கொண்டுவேகமாய்வீரன்றன்னை
நாலுபேர்பிடித்துக்கொண்டு நவமணிகைகால்தன்னை
சீலமாயறுக்கும்போது சிவசிவாசிவனேயென்றான்.

வசனம்.

இந்தப் பிரகாரம்திருமலைநாய்க்கன்உத்திரவின்படியே சேவகர்கள் வந்து வீரையன் கொண்டுவந்த சாலுவைப்பொட்டணத்தைவாங்கிப் பாருவிலேவைத்து வீரசாமியை நாலுபேர்கூடிப் பிடித்துக்கொண்டு மாறுகால் மாறுகை வாங்கும்போது வாய்திறந்து சிவசிவாசிவனே யென்றார்.

விருத்தம்.

சீறியநாகம்போலச் சினந்துதான்வீரசாமி
கூறியவசனங்கேட்டுக் குறிப்புடன்பாராக்காரர்
வீரையனெனவேகண்டுமெத்தவேவிசனங்கொண்டு
பாரினில்விழுந்துழன்று பதறியேபுலம்புவாரே.

சேவகர்கள்புலம்பல்-இம்-காம்போதி,

வீரபராக்கிரமதீரனேயென்செய்வோம் பாவிநாங்கள்-ரண
சூரனேஉன்னுடையசொருபமறிகிலோம் பாவிநாங்கள்
ஆரெவரென்றுபாராமலேஐயோ பாவிநாங்கள்-உம்மை
மாறுகால்மாறுகைவாங்கத்துணிந்தோமே பாவிநாங்கள்
பார்மீதிலுந்தனைப்பங்கப்படுத்தின பாவிநாங்கள்-எமன்
பாசத்திலசிக்கிப்பரதவிப்போமையா பாவிநாங்கள்
சீர்பாதந்தொட்டும்மைச்சித்திரவதைசெய்த பாவிநாங்கள்-எங்கள்
சென்னியறுத்துச்சிரமாலைபோடுவோம் பாவிநாங்கள்
தந்தைக்கிடையூறுதானேநினைத்திட்ட பாவிநாங்கள்-உந்தன்
விந்தைப்பதந்தனில்வீழ்ந்தும்மடியிறோம் பாவிநாங்கள்
எந்தவிதத்திலேயோடேறுவோமையா பாவிநாங்கள்-வெகு
நிந்தனையானநெடும்பிழைசெய்திட்ட பாவிநாங்கள்
செய்யாதவன்கொலைசெய்துவிட்டோமையா பாவிநாங்கள்-எங்கள்
சிவனிருந்தெனனதேசத்தையாள்வது பாவிநாங்கள்
கையாலேயெங்கள்கழுத்தைத்துணித்தாலும் பாவிநாங்கள்செய்த
கர்மத்தைவிட்டுக்கரையேறமாட்டோமே பாவிநாங்கள்
வளர்த்தகிடாக்கையில்வலுவுடன்பாய்ந்தார்போல் பாவிநாங்களும்மை
வதைசெய்தபின்னிந்தமண்ணிலிருப்போமோ பாவிநாங்கள்

விருத்தம்.

எங்களெம்துரைக்கோட்டை யெல்லையுந்திருமலேந்திரன்
தங்களைச்செங்கோல்நீதி தழைத்திடச்செய்தமூர்த்தி
உங்களைத்தொட்டுமின்னம் உயிர்வைத்துயிருக்கிறோம்நாங்கள்
தங்கள்தன்கையாலெங்கள் தலைதனையறுப்பீரையா.

வசனம்.

ஆகோகேளுஞ்சுவாமி கொடும்பாவிகளான நாங்கள் உம்மைப்பிடித்து வதைசெய்தும் இன்னம் பிராணனைவைத்திருக்கிறோம்தேவரீர் கையினலே எங்கள்தலையை அறுத்துப்போட்டால் நாங்கள் நல்லகதியையடைவோம் சீக்கிரமாய் எங்கள்சிரசையறுத்து பொன்னுலகுக்கேக வழிகாட்டுஞ்சுவாமி.

விருத்தம்.

தலைகொய்துபோடுமெங்கள் சுவாமியுன்கையாலென்று
உலையின்வாய்மெழுகைப்போல உருகியேபாருக்காரர்
பலவிதமாகச்சொல்லிப் பரதவித்திருக்கும்போது
மலைமகள்சரப்பநீங்கி வாய்திறந்துரைசெய்வானே.

வீரையன்சொல்-விருத்தம்.

வாருங்கள்தம்பிநீங்கள் மனமதுதியங்கவேண்டாம்
பூருவத்தெனக்குராசன் புரிந்திட்டசாபமின்னாள்

நேருபட்டதினல்வந்தால் நீங்களென்செய்வீரிப்போ
கூறுங்கள்திருமலேந்திர குஞ்சரன்சமுகத்தானே.

வசனம்.

அகோவாருங்கள் தம்பிமார்களே நீங்கள் என்னைத்துக்கு கவலைப் படுகிறீர்கள் வேண்டாம் எனக்குப் பூர்வத்தில் ஈசனிட சாபம இப்போது வந்து ஒத்துக்கொண்டது நீங்களென்னசெய்வீர்கள் சீக்கிரமாகப்போய் திருமலை நாயக்கனுக்கு என்னுடைய சமாச்சாரங்களைக்கூறுங்கள் தம்பிமார்களே.

விருத்தம்.

கூறென்றுசொன்னபோதே செ[illegible]ர்சென்றுநாய்க்கன்
சீருள்ளசமுகங்கண்டு தெண்டனிட்டுரைசெய்வார்கள்
பாருலகாளும்வேந்தே படுபாவிநாங்கள்வீரன்
மாறுபாடறிந்திடாமல் மதிகெட்டுப்போனோமையா
கள்ளனைப்பிடித்தோமென்றோங் காவலர்நீர்தானசென்று
துள்ளவேமாறுகால்கை துணித்திடுமென்றுசொன்னீர்
உள்ளமேகலங்குதிப்போ உத்தண்டவீரனறன்னைக்
கள்ளனென்றெண்ணிநாங்கள் காலுகையறுத்தோமன்று.
அறுத்திடும்போதுவீரன் அரகராசிவனேயென்று
வருத்தமாயுரைக்கும்போது மன்னனென்றறிந்தோம்நாங்கள்
பருத்தசெங்கோன்மையுள்ள பார்மன்னவென்னசெய்வோம்
கருத்துடனு[illegible]க்குச்சேதி கடுகவந்துரைசெய்தோமே.

வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே வீரையன்வேஷமாறிக்கள் ளனைப்போல் வந்தால் நாங்கள் பிடித்துக்கொண்டு வந்து உம்மிடத்தி லே [illegible]சரித்தோம் நீரும் யோசியாமல் மாறுகால் மாறுகை வாங்கிப் போடுங்களென்று உத்திரவுசெய்தீர் நாங்களும் அப்படியே வீரைய னென்றறியாமல் மாறுகால் மாறுகை வாங்கும்போது வருத்தத்துட னே அரகராசிவனேயென்று கூறினர் அப்போது வீரையனென்றறிந் தோமையா திருமலைநாய்க்கரே.

விருத்தம்.

உரைசெய்யக்கேட்டுநாய்க்க னோடியேவந்துசொல்வான்
தரைபுகழ்விசையனை தாஷ்டீகமிகுத்ததம்பி
வரையெனுமுன்திரேகத்தில் வடுப்படச்செய்தேனையோ
துரைமுத்துசாமியென்று சொல்லியேபுலம்புவானே
திருமலைநாயக்கர்புலம்பல்-இ ம். பைரவி ஆதிதாளம்.

கண்ணிகள்.

இதுவென்னகாரணமோ தம்பியுனக்கு

இந்தவிதிவருமோ
சதிசெய்துனைவதித்த கொடும்பாவி
சண்டாளருந்தனையும்
கள்ளனென்றேயுரைத்தார் அதுகண்டு
காலுகைவாங்குமென்றேன்
தெள்ளியவீரையனே என்றாலுந்தன்
திரேகம்வடுபட்டதோ
தங்கத்திருமேனி வடிவுள்ள
தாஷ்டீகவீரையனே
அங்கமுருகுதடா தம்பியுந்தன்
ஆண்மைதனைநினைந்தால்
உள்ளபடியெனக்கு முழுதும்
உதவியாய்நீயிருந்து
கள்ளர்குலமுழுதும் வதைத்துக்
கருணையுறததாயே
செய்தவுபகாரம் என்றென்றுஞ்
சிறப்பற்றிருக்காமல்
கைதவிரவிடுத்து என்றுலேநீ
கஷ்டப்படவிதியோ
வல்லவனேஉனையுங் கள்ளனென்று
வந்துபிடிக்கையிலே
நல்லவனேயவர்கள் அறிந்திட
நான்தானெனவுரைத்தால்
தொட்டுப்பிடிக்கஉனக் இங்க
துன்பம்வரும்படியாய்
கட்டுக்கிட்டக்கொடுத்த தென்னவகை
காரணமோஐயனே
மட்டிலடங்காத துரைவீர
மன்றுவெனக்குரையும்
கெட்டிமனமுடையோ னுனக்குப்
கீர்த்திவருவானேன்
தன்னையறியாமல் வந்துவிட்ட
சற்பனையோஅறியேன்
என்னையொருபொருட்டாய் நினைத்துனை
இன்[illegible]மெனவே

விருத்தம்.

என்னையோர்பொருட்டாயெண்ணி இவ்வினைவந்தவாரை
நின்னைபத்[illegible]எனக்கு நவின்றிடுந்துரையேயென்று

சொன்னதைக்கேட்டுவீரன்சுகதுக்கம்ரண்டுநீங்கி
தென்னவன்றன்னைப்பார்த்துத் திர்க்கமாயுரைசெய்வானே.

வெண்பா,

கச்சித்திருமலைய கர்த்தனே பூங்கன்னியரை,
இச்சித்தேன்கண்டு இருதயத்தில்-நிச்சயமாய்
வள்ளல்மயேசன்முன்னுள் வாக்கிட்டதாலிந்த
வெள்ளையினலவந்தவினை.

விருத்தம்.

வெள்ளையினலேவந்த வினையென்றுவீரன்சொல்ல
உள்ளத்தில்கவலைகொண்டு உருகியேதிருமலேந்திரன்,
கள்ளரைச்செயித்தவெந்தன் காளைவீரையனேயென்று
துள்ளியேபுவியில்விழ்ந்து துயரமாய்ப்புலம்புவானே,

திருமலைநாயக்கன்-புலம்பல்-தரு,

கண்ணிகள்.

பாவியென்னசெய்வேன்பழி
பார்கிலெந்தன்வயிறுங்குலே
ஆவியுடனுயிர்போலுன்னே
அல்லல்படவிடுத்தோ இந்த
என்னை[illegible]ப்பாக-நீதா
[illegible]யாரொ[illegible]னைப்போல்துணை
மன்னர்மன்னனுக-உன்னை
மனதின்ப[illegible]டவாமலென்
[illegible]ய்யாவிமிசைசெய்த-பொல்லாத்
கைகாலறுபடுவாயென்று
மெய்யாவெந்தனுடனேயந்த
ஐயோதம்பிவீராகூட்டி
உன்னால்சுகம்பெற்று-இந்த
என்னாலிமிசைபடுவாயென்று
முன்னால்பொம்மியறிந்தால்உயிர்
வீண்பாவமெனக்கேவந்து

காராவென்னசெய்வேன்-உன்னைப்
பற்றியெரிந்திடுதே
யங்கரங்கம்பினைத்தேன்-என்னை
ஆக்கினைக்குள்ளானாய்
னென்னாலுவஸ்செய்தா[illegible]னி
யெங்குங்கிடையாதே
வைப்பதற்குவினைத்தேன்-எந்தன்
வலிமைகுறைந்தாயே
திருடர்களைப்போலேஉந்தன்
கர்த்தன்சபித்தானே
வெள்ளைவேணுமென்றால்
யனுப்பிவையேனே
உலகாண்டநானிறக்கநீ
இறைவன்சபித்தானே
விடுவாள்பழியிடுவாள் அந்த
விதியும்வினைமுடியும்

விருத்தம்,

வினைமுடிவென்னக்குண்டாகும் மெல்லிபொம்மியர்தான்கண்டால்
துணைசெய்தபேர்க்குப்பொல்லாத் துரோகஞ்செய்வித்தேனென்று
மனதினிற்கவலைகொண்டு மலாக்கண்ணீர்பெருகியோடக்
கனகவான்தேம்பிநெஞ்சங் கலங்கியேநிற்கின்றானே.
நெஞ்சினிற்கவலைகொண்டு நின்றெதிராகநாய்க்கன்
சஞ்சலப்படவேகண்டு சாமிவீரையனுஞ்சொல்வான்.

என்செய்வீர்நீங்களையா வென்விதிவசத்துக்கிப்போ
வஞ்சிபொம்மியருக்கெந்தன் வகைசொல்லியனுப்புவீரே

வீரையன்சொல்-வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே நீர் ஏன்விசனப்படுகிறீர் எ
ன் விதிவசத்துக்கு நீரென்னசெய்வீர் இப்போது என்மனைவியாகியபொ
ம்மிநாயகிக்குஎன் சங்கதியைத்தெரியப்படுத்தும்திருமலைநாய்க்கரே

விருத்தம்.

சொல்லிநீரனுப்புமென்ற துரைவீரன்வார்த்தைகேட்டு
நல்லறிவழிந்துநாய்க்கன் நாமென்னசெய்வோமென்று
கல்லினும்வலுநெஞ்சான கடியசேவகரேநீங்கள்
வல்லிபொம்மியருக்கிந்தவார்த்தைபோயுரைசெய்வீரே

வசனம்.

அகோவாருங்கள்சேவகர்களேநீங்கள்போய்பொம்மிநாயகிக்கு இ
வ்விடத்தில்நடந்தசங்கதிகளைவிவரமாகத்தெரியப்படுத்தி அழைத்துவா
ருங்களசேவகர்களே.

அகவல்.

உரைசெய்வீரென் றுஓதிடக்கேட்டு
விரைவுடன்சென்றுமெல்லிபொம்மியை
கண்டுநின்றிருவிழி கண்ணீர்சொரியத்
தெண்டனிட்டழுது சேவகருரைப்பார்
தாயினுமிகுத்ததயாளவுத்தமியே
சேயெனும்நாங்கள்செப்பிடக்கேளீர்
தந்தையாமெங்கள் சாமிவீரையனும்
நிந்தைபதாக நேற்றியராத்திரியில்
கள்ளனைப்போலக்கருங்கச்சைகட்டி
மெள்ளவேவந்து மீனாட்சிகோயில்
சுற்றியேமதிலைச் சுறுக்குடன்கடந்து
சித்திரமண்டபத் தேறிக்குதித்து
கம்பத்தடியின்கதவெலாந்தாண்டி
தெம்புடன்வந்துதேவிசந்நிதிமுன்
பள்ளியறையில்பணிவிடைசெய்யும்
வெள்ளையையெடுத்துவேஷ்டியில்கட்டிப்
பொட்டணங்கொண்டுபுறப்பட்டுவந்தார்
கட்டினிலடங்காக்காளைவீரையனும்
ஆவலாய்வருகுமதட்டியைக்கண்டு
காவலாய்நின்றகடியசேவகரும்
கண்டுமேபிடித்துக் காளைவீரையனைக்
கொண்டுபோய்நாய்க்கர்க் குரைசெய்தாராமே

நாய்க்கர்கேட்டு நாரணிகோயிலில்
காயக்கமாகக் கள[illegible]ுசெய்த கள்ளனை
மாறுகால்மாறுகை[illegible]வாங்கிடுமென்று
கூறிடநாய்க்கன் கொ[illegible]யசேவகரும்
நல்லதென்றெப்பி நட[illegible]துவந்திருட்டில்
வல்லவீரன் [illegible]ரையனை
நாலுபேர்பிடித்து நவமணியா[illegible]
காலுடன்கையைக் கண்டிக்கும்போது
சிவசிவாவென்றுசெப்பிடக்கேட்டுக்
கவனங்கொண்டு கலங்கியேநாங்கள்
பார்த்திடும்போது பார்மன்னனிமிசை
தீர்த்திடும்வீர தீரனென்றறிந்தோம்
அறிந்தபின்நாங்கள் அலறியேபுலம்பி
தெறிந்திடவுரைத்தோம் திருமலையனுக்கு
ராசருங்கேட்டு நல்லறிவழிந்து
ஈசனேயென்று ஏங்கியேபுலம்பி
வீரையனிருக்கும் வேஷத்தைப்பார்த்து
தாரையாயிருவிழி சலமதுபெருக
மெத்[illegible]வேபுலம்பும் வேந்தனைப்பார்த்து
தத்[illegible]டனே சாமியுமுறைத்தார்
ஆதியி[illegible] னருளிபசாபம்
நீ[illegible]யாய்ப்போ நேரிட்டதனால்
ஏதுக்[illegible]சனம் இராசனேவிடுமென்
மாது[illegible]ொம்மிய[illegible]க்கென் வரலாறனையும்
[illegible]ன்றவர்புகல இராச இராசனுங்கேட்டு
கன[illegible]றியேமனது கடுகவெங்களையும்
வல்லிபொம்மியர்க்கு வகையுடன்சேதி
சொல்லிவாவென்னச் சுறுக்கினில்வந்தோம்
அம்மணிதாயே யாகையால்நீங்கள்
நல்மனம்பொருத்து நாடியேவருவீர்

பொம்ம[illegible]மாள்-வீரையனிடம்வருதல்

விருத்தம்.

மாறுசல்மாறுகையும்வாங்கிறேனென்றுசொல்லிக்
கூறிடும்வார்த்தைதன்னைக்கோ[illegible]ம்பியருங்கேட்டு
வாறியேயெழுந்துவாயில் மலர்க்கையாலடித்துக்கொண்டு
கூறியவிழிநீர்சிந்தக் கோதையும்வருகின்றாளே

வேறு-விருத்தம்.

வந்தவள்வீரன் மதிமுகங்கண்டு

எந்தனுபகனே யென்செய்வேனென்று
சிந்தையுங்கலங்கித் தேவிபொம்மியரும்
விந்தையாய்ப்புவியில் வீழ்ந்தழுவாளே

பொம்மியம்மாள்-புலம்பல்.

இ-ம்-புன்னுக்வராளி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வேன் வீரையா-உந்த
ணுண்மையிழந்தீரோ வீரையா
ஐயோகசல்லாப விரையா-இந்த
சாபனைக்கென்செய்வேன் வீரையா
செய்யாதுசெய்தாலும் வீரையா-இந்த
சித்திரவதையுண்டோ வீரையா
கைகால்றுபட விரையா-என்ன
காரணமோசொல்லு விரையா
மெய்யானசூரமும் விரப்பிரதாபமும்
மையல்கொண்டிங்கே மதிமோசம்போனீரோ (ஐயோ)
தென்கூடல்மாநகர் விரையாவாடிச்
சென்றுவரும்போதே விரையா
பங்கப்படவென்றோ விரையா-செயம்
...ணினீர்களன்னா விரையா
அங்கமே...த்து விரையா-...ந்தன்
சிந்தைகலங்குதே விரையா
தங்கம்போலுன்திரேகம் விரையா-...யென்ன
தாபந்திரப்பட்டுதே விரையா
செங்கையுங்காலுஞ் சிதறிட...கண்ட...வென்
அங்கமுறிகியவலர் யெறியுதே (ஐயோ)

அஞ்சாதநெஞ்சுள்ள விரையர்-எந்தன்
ஆசைக்கண்ணாளனே விரையா
பஞ்சமாபாதகர் விரையா-உன்னைப்
பங்கஞ்செய்தார்களோ வி...
கொஞ்சியனைந்தென்னை விரையா-இனிக்
கூடுவதெப்படி விரையா
நெஞ்சகலங்குதே விரையா-இது
நீதியோசொல்லும் விரையா
தஞ்சமென்றுந்தனைத் தாளுடிவந்தேனே
வஞ்சனைசெய்யாதே மாபாவியிப்போ (ஐயோ)
என்னசெய்வேனையோ விரையா-மன
தெப்படிதேறுவேன் விரையா

சின்னவயதிலே விளையா-இந்தத்
தீவினைவந்துதோ விளையா
சொல்மொழியியே விளையா-இவன்
சுப்பனையோசொல்லு விளையா
மன்னமன்னர்மெச்சும் விளையா-உந்தன்
வல்லமைபோச்சுதோ விளையா
அன்னைபிதாகுரு தெய்வமும்நீயென்று
உன்னையேநம்பியென் னுள்ளம்மகிழ்ந்தேனே(ஐயோ)

விருத்தம்.

மதிநிகர்வதனரூபமன்னவாஉன்னையிந்நாள்
துதிசெய்துஇருந்தேன்பொல்லாத்துரோகியென்றனைமறந்து
சதிசெய்துஇவட்ம்வந்து சற்பனைப்பட்டிரிந்த
விதிக்கென்னசெய்வேனென்று மெல்லியாள்புலம்புவாளே.

பொம்மியம்மாள்-புலம்பல்

தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்குவேன்-துரையே-துரையே
இந்தவிதிக்கென்னசெய்குவேன்

அநுபல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்வேன் வந்தவிடத்திலுமது
சிந்தையுங்கலங்கிடவே நிந்தனைப்படலானீரோ(இந்த)

சரணங்கள்.

ஆர்செய்ததீவினையிதோ சாமிசாமிஉன்
மாறுகால்மாறுகைவாங்கினதாரோ
சிறுகெட்டுநீருமுல் வேறுபட்டிட்டவுமக்குப்
பூருவத்திற்செய்தவினை நேருயட்டுதோஇந்நாளில்(இந்த)
உன்னைநம்பிநானிருந்தேனே துரையேதுரையேநீர்
சொன்னபடிநானடந்தேனே
அன்னைமுதல்தந்தைசுற்ற மென்றுமசையைமறந்து
மன்னவனேஉன்சதியென் றெண்ணியிருந்தேன்மாவி(இந்த)
அங்கமெழுகாயுருகுதே சாமியென்
கண்கள்ரெண்டும்நீர்பெருகுதே
தங்கம்போலுமதுதேகம் பங்கமாய்வடுப்படுவென்
கண்களிலுற்கண்டவுடன் பொங்குதேயெனதுசிந்தை(இந்த)

விருத்தம்.

பிறைநுதலழகும் பெருகுவஞ்சலன்மையுந்
திரைநவமணியின் திரேக்குமக்கேருந்த்
தரைதனிற்கிடந்து தவழ்ந்திடும்படியாய்
நிரைதடுமாற நீதேயோயெந்தன் துரையே.

இ-ம்-ஆனந்தபைரவி-சாப்புதாளம்.

கண்ணிகள்.

துரையேஉந்தன் தூடுக்கானவதுவெல்லாந்
தோத்திரோ-என்பெண்பாவம் வர்த்திரோசாமி
நிரையோடிருக்காமலே இப்படிக்குநீர்
வதைப்படலாமோ பார்மீதிலேயோ
ஆருமில்லாப்பாவி போலென்னையிந்த
அம்பலத்தில்விட்டோ வம்புசெய்தாய்காருநம்
பாரில்நெடுநா ளினிவாழ்வோமென்று
பாதகிநானினைந்தேன் காதலனேயென்னைக்
கூடிநிதங்கொஞ்சி யணைந்தகைகால்
குறைபடவோவந்தீர்சாமி உந்தன்
வேடிக்கை வீரவல்லபடும்
விளைகப்போச்சோ-மதி தோளுமல்பாவி
இந்தவிதிவந் மென்றுநானறிந்தால்
எட்டிப்பாரேன்மதுரைப் பட்டணத்தேயெந்தன்
சிந்தைமெத்ததயக்குதே என்னசெய்வேன்
தீரனேதுரைமுத்து விநாயமன்

கந்தார்த்தம்.

வேதனூர்முன்னாள்விதித்திடும்படியோ
காதலாவுந்தன்காலுகைத்துப்
நீதியோஉந்தனுக்கு நீரிந்தவினைவுவினைதனுதான்
நாதனேநானறிந்தால் அந்நாளினின்நத்திடேன்பாவி
சேதமில்லாமல் செழித்திருப்போமென்று
பாதகியெண்ணினேன் பலியாமற்செய்தாயே (நீதியோ)
ஆதரவில்லா அரிவையர்போலே
பூதலத்திருந்து புலம்பிடச்செய்த
பாதகாரர்ணிதுக்கோட்டன்மீதினில்பட்சம்வைத்தேன்மனதில்

காதலாய்ப்பின்தொடர்ந்துவந்த யென்னைக்கைகாமுவவிடுத்து
நீதமில்லாத நினைவுகொண்டீயிருக்கு
கோதைவெள்ளைப்பெண்ணைக் கூடநினைந்தீரோ (பாத)

வள்ளல்மீனம்பாள் மலர்ப்பதம்போற்றி
நள்ளாசெபித்த காரணமிதுக்கோ
வெள்ளைமேலாசைகொண்டுநீங்கள் வேதனைப்படுவீரோ,ன்று
வள்ளல்மயேஸ்வரர்தன்முன்னுனிநில்வாக்கிட்டதிப்படியோ
தெள்ளியாகிய தேசிகனேஉந்தன்
உள்ளங்கலங்கி யுருகிடவோயிந்த (வெள்)

உன்னையல்லாது உலகினிலெனக்குப்
பின்னைவேறுதவி பெற்றிலேனையோ
மன்னவாஉந்தனையும்இந்தப்படி மாறுகால்கைவாங்க
எண்ணினபோதிந்தால்அவர்களின் நூலபிடுங்கிடுவேன
தன்னிகரில்லாத சாமியுனையிந்த
அன்னீதஞ்செய்தவ ராரெனக்குச்சொல்லும்(-ன்ன)

விருத்தம்-

சிந்தையுங்கலங்கிமாது திருமலைநாய்க்கனிற்கும்
விந்தையைபறித்துபொம்மி வேந்தன்முன்னுகவந்து
அந்தரக்கிடியைப்போலேஅலறியமன்மேல்விழுந்து
கந்தரத்திகாலிவேஞுக கதறியேபுலம்புவாளே

பொம்மியம்மாளதிருமலைநாய்க்கனாப்பார்த்துபுலம்பல்

தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்,

பல்லவி.

பாரும்பாருமையாஎன்சாமியைப்-பாரும்பாருமையா

அநுபல்லவி,

ஆருமெதிரில்லாத அதிவீரதுரைதன்னை,
மாறுகால்மறுகை வாங்கினகோலத்தைப்(பாரும்)

சரணங்கள்.

மதுரைபுரியைநாடி வரும்போதேயிவர்க்கிந்த
வகைமோசமவருமென்று மாபாவியறியேன்
மதிசூடியசொக்கர் பதிமேவியதிரு
மலைநாய்க்கனேயெந்தன் றலைகோருதேஅய்யோ
மனதெப்படி துணிவேன் வினையிப்படியாச்சுதே
மன்னன்திருமலைய அண்ணலேநீர்கண்ணால்(பாரும்)
கள்ளர்குலமுழுதுங் காவலருத்தம்முடைய
கலக்கந்தெளியவைத்த காரணதுரைகோபாலி

கைகாலறுமென்று செய்யாமலேசெய்தாய்
ஊனமாயுபகாரம் . இனியார்செய்யப்போறார்
கச்சித்திருமலையா பட்சம்வைத்திதுகோலங்
கண்டாயோகொடும்பாவி சண்டாளாநீகண்ணால்(பாரும்)

பண்ணினவுதவிக்கோ எண்ணிணாஇதுசிந்தை
பழிகாராநீயெந்தன் மொழிகேளென்துரைசாமி
பருவத்திலெனைக்கூடி மருவத்துணிந்துநாடி
பதியைவிட்டெனைக்கூட்டிச் சதிபொம்மணனைமூட்டி
பகைவந்துதேயினிமேல் சுகமாகவாழ்வோமெனநீறு
பாவிநினைந்தார்க்கோ ஆவிபதறவிட்டாய்(பாரும்)

விருத்தம்.

மங்கைபொம்மியிந்தவிதம்புலம்பிச்சோர்ந்து
மானிலத்தின்மிசைவிழுந்து வருந்தும்போது
செங்கனிவாய்திறந்துமன்னன்திருமலேந்திரன்
தேறுதலாய்பொம்மியர்க்குச் சேதிகூறி
அங்கயற்கண்மீனாம்பாளிடத்திற்சென்று
அதிவீரபாண்டியன்கை கால்முன்போலப்
பங்கமில்லாதிருந்திடவே வரமேவாங்கிப்
பரதவிப்பையகற்றிடுவேன்பாராயம்மா

வசனம்.

அகோவாருமம்மாதாயே பொம்மிநாயகி நீயேன்விசனப்படுகிறாய் இதோநான் அரைக்ஷணத்தில் மீனம்பாளிடத்திற்சென்று உன்னுடைய நாயகனுக்கு கைகால்பங்கமில்லாமல் முன்னிருந்ததுபோல் இருக்கும்படியாய் வரம்பெற்றுவந்து உன்பரிதாபத்தைத் தீர்த்துப்போடுகிறேன் விசனப்படாமலிரும்மாதாயே

விருத்தம்,

[illegible]கனையீன்ற அம்பிகையாதம்போற்றி
வாகுடன்[illegible]போல வளர்ந்திடவரமேவாங்கிப்
பாகமாய்வாரோனென்று பதிதாபமொழியுரைத்து
வேகமாய்திருமலேந்திரன் விமலிசன்னதிமுன்வந்தான்,
வந்தவன்கயற்கண்மீனாள் மலர்ப்பதம்போற்றிசெய்து
சுந்தரியடியேன்சொன்ன சொற்படிபிசகில்லாமல்
விந்தையாயெந்தன்மீதில் விமலியுங்கிருபைவைத்து
இந்தநாழிகையில்வீர னிடர்தனையகற்றுவாயே.
[illegible]னதாறகோயில்புக்கி யுத்தமிவெள்ளைதன்னை
[illegible]தறியாமற்செய்த வஞ்சனை பொறுத்துக்கொண்டு

அனிரக்கத்தைப்பார்த்து இன்பமாய்வீரனுக்குத்
தனதுகால்கைமுன்போல தழைத்திடச்செய்வாயம்மா

(வ-ம்) அகோசரணஞ்சரணமம்மாமீனம்பாளாகியயென்தாயேஉன்னு டைய கோயிலுக்குள் வந்து உத்தமியாகிய வெள்ளையம்மனுடையமன தறியாமல் வீரையன்செய்த வஞ்சனையைப் பொறுத்துக் கொண்டு என க்காக மனதிரங்கி வீரையன்பேரில் கிருபைவைத்து முன்போல் கால் கை தழைத்திடச் செய்வாயம்மா தாயே,

விருத்தம்.

திருமலைநாய்க்கன்சொன்ன சேதிமீனம்பாள்கேட்டு
மறுமொழிபகர்ந்திடாமல் மலர்கையால்வெண்ணீரள்ளித்
தருமதேவதையாளீயத் தாரணிமன்னன்வாங்கி
இருதயமகிழ்ந்துவீர னிருந்திடுமிடத்தில்வந்தான்
வந்தவன்வெண்ணீர் தன்னைவாஞ்சையால்வீரன்மீதில்
சந்தோஷத்துடனேபோட்டுத் தடவியேகொடுக்கும்போ
முந்தவெப்படியோ அந்தமுறைப்படிகைகாலெல்லாம்
சிந்தனையில்லாமல்தான் செவ்வையாயிருந்ததன்றே.

(வ-ம்) இந்தப்பிரகாரம்திருமலைநாய்க்கன்செகதாம்பாளாகியமீனாட்சி யம்ம னிடத்தில் வெண்ணீறு வாங்கிக் கொண்[illegible]வந்து வீரையன் மீது போட்டு தடவிக்கொடுக்க எப்போதும் போலே கைகால் வளர்ந்து செ வ்வையாச்சுது.

வெண்பா.

குற்றம்தாழ்ந்[illegible]க் குறைந்தகைகால்தான்வளர
சித்[illegible]மகி[illegible]ந்து திருமலையன்-முத்தையனே
சேறுமுமதுடைய தேவிபோம்மியாருடனே
வாரும்[illegible]திக்கு மகிழ்ந்து

(வ-ம்) அகோவா[illegible]ம்தம்பிவீரையனே[illegible] இப்போ[illegible] உன்[illegible] க்கி நீயும் உன்தேவியுமாக வாரும்தம்பி அரண்மனைப் போய்ச் சேர லாம் வீரையனே

வீரையன்சொல்-வெண்பா

வாருமென்றேயுரைத்த மன்னன்திருமலையை
மேருவெனும்நாய்க்க வேந்தனே-கூறக்கேள்
வைத்திருக்கேனென்னுடலை வடுப்பட்டதாகையினால்
சித்திருக்கேனினிமேல்தான்

(வ-ம்) அகோவாருமையா திருமலைநாயக்கரே நான் மாறுபடா வம்மிசத்திலேபிறந்தேன் இப்போ என்தேகத்தில் மாறுபட்டது இனிசற்று நேரமாகிலும் என்சரீரத்தையிந்த மண்ணுலகில் வைத்திருக்கேனையா திருமலைநாயக்கரே

விருத்தம்.

வடுபட்டதேகந்தன்னை வைத்துநானிருக்கேனென்று
அடுக்கனுமதுரைவீர துரந்தரன்சொல்லக்கேட்டு
திடுக்கெனமனங்கலங்கித் திருமலைநாயக்கன்மன்றில்
கடுகவேவிழுந்துசிந்தை கலங்கியேபுலம்புவானே

திருமலைநாயக்கன் புலம்பல்-இ-ம் சங்கராபரணம்-அடதாளம்.

இந்தவிதிக்கேதாந்தாந்து எந்தன்துயர்தவிழ்த்து
சிந்தைமகிழவைத்தாய்தம்பிவீரா
எந்தனுக்குறுதியான தந்திரவார்த்தைகள்சொல்லி
இருப்பாயென்றெண்ணினேனான் தம்பிவீரா
ஏழைமதிநீபடைத்தாய் வேறொருபொல்லாதாகையாலே
என்னைசெய்வேனினிமேல் தம்பிவீரா
[illegible]ளைமீதிலேறிவரும் நீலகண்டர்சொற்பனமோ
காரணமுடிவுனக்கோ தம்பிவீரா
தேறுதலாய்நானுரைத்த கூறுதல்கேளாமலுந்[illegible]
தேகம்வைத்திருக்கேனென்றால் தம்பிவீ[illegible]
ஆறுமோவெனதுசிந்தை தேறுமோஉனைப்பிரிந்தால்
அங்கமுருகுதடா தம்பிவீரா
காசினியிலுந்தனைப்போல் நேசமுள்ளசிந்தையெனக்
காலத்திலேகாண்பேனப்பா தம்பிவீரா

விருத்தம்,

தம்பிவீரையனேயென்று தாரணியாளுமன்னன்
வெம்பியேயுரைக்கக்கேட்டு வீரையனெழுந்துசொல்[illegible]
அம்புவியாளும்வெந்தே ஆயாசந்துயரம்வேண்டா[illegible]
[illegible]ன்பொம்மியாட்குத் திக்குழிவளாத்தி[illegible]ய
திக்குழிவ[illegible]ளும் [illegible]ள்ளதெல்லாம்
சாக்கிரதையாகவிப்போ தயார[illegible]ச்செய்துபோடும்
பாக்கிவைத்திடவொண்ணாது பார்புகழரசேயென்று
வாக்கியந்தவறுவீரன் மன்னனுக்குரைசெய்தானே

வசனம்.

அ[illegible]சேளும் திருமலைநாயக்கரே உம்முடையமனதில் ஆயாசந் துயரம் [illegible]வைக்கவேண்டாமஇப்போது என்னுடையநாயகியாகிய பொம்

மிருமிக்க தீக்குழிவெட்டிசந்தனக்கட்டைபோட்டு அக்கினிவளர்த்தி தூமஞ்செய்யச்சொல்லும் திருமலைநாய்க்கரே.

விருத்தம்,

மன்னவன்மனதுதேறும் வகையதாய்வார்த்தைசொல்லி
அன்னமாம்பொம்மிதன்னை ஐயன்வீரையனும்பார்த்து
என்னடிபெண்ணேஞமிங் கிருந்திடப்போகாதிப்போ
சின்னமேவருகாமல்நீ தீக்குழிபாயும்பெண்ணே.

வசனம்

கேளும்பெண்ணே பொம்மிநாயகி நாம்யினிமேல் இங்கிருப்பதில் பிரயோசனமில்லை ஆகையால் சின்னம்வராமுன்னம் மீனாட்சியம்மனுடையபாதாரவிந்தஞ்சேர என்னொதிரிலேதானே தீக்குழிபாயும்பெண்ணே பொம்மிநாயகி.

விருத்தம்

தீக்குழிபாயுமென்று தீரவீரையனுஞ்சொன்ன
வாக்கினைக்கேட்டுபொம்மி மனதுசந்தோஷமாகி
[illegible]மெழுந்து திருவடிபணிந்துநல்ல
பாக்கியந்துரையேயென்று பைந்தொடிநிற்கின்றளே.

வசனம்

அகோகேளும் என்பிராணநாதா தேவரீர் தீக்குழிபாயுமென்று எனக்கு உத்திரவு கொடுத்தபோதே செனமசாபல்லியமும் மகாபாக்கியமும்பெற்றேன் சுவாமி என்பிராணநாதா

விருத்தம்

துங்க[illegible]பிரதீர துரந்தான்சொன்னவார்த்தை
மங்[illegible]வெள்ளையருங்கேட்டு மன்னவாயென்னையுந்தன்
செங்கையினலேதொட்டுச் சிறையெடுத்திட்டபோதே
அங்கம்வைத்திருக்[illegible]றன்[illegible]

வசனம்

அகோகேளும் வீரையனே நான்பழுதுபடா பத்தினியாக மீனம்பாளின் பணிவிடைசெய்துக் கொண்டிருந்த என்னைநீர் இச்சித்து உம்முடைய செங்கையினலேதொட்டு சிறையெடுத்துவந்த படியால்நான் கற்பழிந்துபோனேன்நானும்என்னுடையசரீரத்திரளைவைத்திருக்கமாட்டேன் உன்னுடைய அடியாளாக தீக்குழிக்கிறேனையாவீரையனே

கூடவேவருவேனென்றுகோதைவெள்ளையைப்பார்த்து
ஆட்வளானபெந்தன் அரிவையேசொல்லக்கேளாய்
மாடேறுமீசர்மீனாள் மலர்ப்பதஞ்சேர்வதாக
கூடவேபொம்மிபக்கல் கொப்பெனச்சொல்லுவாயே
சொல்லுவாய்வெள்ளைமாதே தேவியரிருபேருந்தான்
வல்லவள்மீனம்பாளின் மலரடிசேர்வதாக்
புல்லரியசுத்திநல்ல புத்துமாந்தோப்பைநாடிச்
செல்லுமென்றெழுந்துவீர தீரனும்நடந்திட்டானே
வீரையன்னடக்கப்பொம்மி வெள்ளையுமருகிற்செல்ல
தீரனும்வையைதன்னில் தேவியருடனேகூடி
காரணிகிருபையென்று கடுகவேஸ்நானஞ்செய்து
தாரணிபுகழப்பொம்மி தையல்வெள்ளையும்வந்தாரே
பொம்மியம்மாளும்வெள்ளையம்மாளும்-திப்பாய்தல்

தரு-இ-ம்-பியாக்-ஆதிதாளம்.

பல்லவி.

வருகிறார்பொம்மிவெள்ளை மாதிருபேரும்.

அநுபல்லவி.

திரிபுரத்கணஞ்செய் தேவிகைபோற்றி (வருகி)

சரணங்கள்

சிற்றிடைதனில்மஞ்சள் பட்டுடைதறித்து
செங்கையிலெலுமிச்சங் கனிபூச்செண்டெடுத்து
பத்தியாய்நடக்கவே பாவாடைவிரித்து
பழிக்கஞ்சியுன்செயலென்று பாவையைத்துதித்து (வருகி)
திருமலைநாய்க்கனுஞ் சேனையுங்கூட
தீரனும் [illegible] சென்றுமுன்னோட்
தருமதேவதைபுஷ்பத் தால்மழைபோடச்
சகலபேர்வளுமிவாள் தாயெனக்கொண்டாட (வருகி)
சந்தனக்குழம்புகள் சகலருமிறைக்க
சாமராகுடைகளால் தான்வெயில்மறைக்க
[illegible]தபேரணைவரும் மங்களவாழ்த்துரைக்க
மன்னவன்பூரிதானம் வாரிவாரிஇறைக்க(வருகி)

விருத்தம்.

வந்தவர்நின்றுகொண்டு மாங்தோப்புமைதானத்தில்
சந்தடியாகநின்றுஞ் சகலபேர்களையும்பார்த்து
அந்தணர் ஆயிரம்பேர்க் கருளியேசொர்ணதானம்
சிந்தையாய்நிற்கும்போது தீக்குழிவளர்த்திட்டாரே.

தரு-இ-ம-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பூமியில்நாலுசதுரமாகக்குழி வெட்டினார்-உயர்
பொருப்பெனவிரகுடன்சந்தனக்கட்டைகள் கொட்டினார்
தாமிசமில்லாமலக்கினிதன்னையே மூட்டினார்-சுத்திச்
சம்பிரமதாகவேவாழைகமுகுகள் நாட்டினார்
எண்ணெய்நெய்ப்பாற்குடம்ஏகமதாகவே நிறைத்தார்-வெய்யி
லெங்குந்தெரியாமல்முத்தின்குடைகொண்டு மறைத்தார்
சங்கையில்லாச்சேனைமன்னவர்தீக்குழி சூழ-வீர
சாமியின்பொற்பதம்பொம்மியும்வெள்ளையுந் த...
மங்கையரேநீங்கள் அங்கயற்கண்பதம் போற்றி-ம...
மாறாதுசெல்லுமுன்னாடுசெழித்திட வாழ்த்தி
இங்கன்திருமங்கையர்களேநீரிங்கே வாரும்-இந்தத்
தொல்லுலகாண்டபின்முத்தியடைவீர் நீரும்
என்றிருபேர்களுந்தீக்குழிதன்னையே சுற்றி-செக
தீஸ்பரிநீதுணையென்றுமூன்றுதிர மேற்றி
மன்னவனேதெய்வமென்றுமாதிலே குதித்தார்-மாடி
மங்கையிருவருந்தீக்குழிதன்னிலே குதித்தார்

விருத்தம்.

மங்கையர்கள்தீக்குழியில்குதித்தபோதே
மற்றுமுள்ளோர்கைகொட்டிச்செயசெயென்ன
சங்கையில்லாநெய்யெண்ணெய்யாற்குடங்களெல்லாஞ்
சாலெடுத்துக்குபுகுபென்றுதணலில்வார்த்து
குங்கிலியப்பொடிதூவப்பனையம்மாத்திரஞ்
கொழுந்துவிட்டேயெறிந்ததுநெருப்புப்போது
தங்கமுத்துவீரையனுங்குழியையூடித்
தன்கவலைதீர்ந்துதென்றுதனியனானான்.

வெண்பா.

மங்கைபொம்மிவெள்ளையெனும்மாதிருவர்தீக்குதித்து
அங்கையர்கண்ணிஐயிக்கியமானபின்பு அங்கமுத்து

வீரனவர்களுக்கு வேண்டுஞ்சடங்குசெய்து
நீரன்மனதுதேறினான்.

விருத்தம்.

தேறினன்சிந்தையப்போ தீர்ந்ததுகவலையென்று
வீரையனவிடம்விட்டு வேகமாய்நடந்துவந்து
பாரிணையாளும்நாய்க்கன் பாதவித்தருகிலிற்கச்
சீறியேவைகைதன்னில் சீக்கிரம்ஸ்நானஞ்செய்வான்.
வைகையில்ஸ்நானஞ்செய்து மருங்கில்வேருடைதரித்து
பையவேமுடியைக்கோதி ..ர்த்திபன்முடிந்துவிட்டுச்
செங்கையால்விபூதியள்ளிச் சிவசிவாவெனதரித்துத்
தையல்மீனம்பாள்பாதந் தன்னையேதுதிசெய்தானே.
துதிசெய்துக்கொள்ளவீரன் சுந்தரிமீனாக்ஷிகோயில்
அதிவேகமாய்நடந்து அம்மன்சன்னிதிமுன்வந்து
கெதியெனக்கருளும்வாலை கெவுரிமீனாட்சியென்று
மதியுடன்பணிந்துமீனாள் மலர்ப்பதம்பூசித்தானே.

—(*)—

தரு-இ-ம்-கமாசு-ஆடதாளம்.

அக்கிரகுகொண்டைதும்பை — சூடி-தில்லை
யம்பலத்திலின்றுநடன — மாடும்
சொக்கநடபங்கில்சித்தம் — வாழும்வாலை
சுந்தரியெனையாதரித் — தாளும்
பாண்டியனருள்குமரித் — தாயேமுன்னாள்
தடிக்கஞ்சியானவளும் — நீயே
காண்டீபனைப்பார்த்தனென்ற — சோகையர்
நல்லணியெனுநாமமுள்ள — வேதி
முக்கண்ணிபராகிகிரி — சூலிவேதன்
முடியைதரிக்கச்செய்த — ...லி
இக்குவலயம்வந்துதிக்குந் — தாயேஎன்னை
ஈடேற்றவேணுமம்மா — நீயே
சங்கரிகங்காளிகௌ — மாரி-என்னைத்
தற்காக்கவேணுஞ்செக — வீரி
அங்கயற்கண்ணியும்பா — பத்திசெய்தேன்
ஆண்டவள்வேணும்பரா — சத்தி

தேவாரம்.

சத்திரமீயேசொக்கர் தன்னிடம்பாதம்பெற்ற
நித்தியகலியாணியம்பாள் நெஞ்சினிற்குடியிருக்கும்
அத்திமாமுகனையீன்ற அம்பிகைமீனம்பாளென
பத்தியேயறிவாயுந்தன் பதமலர்சரணம்போற்றி.
போற்றியதொண்டர்க்கெல்லாம் பொருளொளிவானசோதி
கார்த்திகேயனுக்குமூத்த கணபதிதன்னையீன்ற
மாற்றிலேயதிகதங்கம் மதுரைக்குத்துரைப்பெண்ணம்பாள்
ஆற்றியேகோபந்தன்னை அடைக்கலங்காருந்தாயே.
தாயென்றுவந்தபேர்க்குத்தானுவாய்நின்றசோதி
மாயனுக்கிளையசெல்விமரகதவல்லிசொக்கா
நாயகியென்னையாளும்நாரணிமதுரைமீனாள்
வாயினிமனதிரங்கிவரந்தந்தாளுமையாள்நீயே.
உமையெனைக்காப்பாயென்று உண்மையாய்நினைத்தபேர்க்கு
நிமையிலேகண்ணினுள்ளே நெறிபொறிப்புனலாய்நின்று
சமயத்தைக்காக்கும்வாலை சச்சிதானந்தவல்லி
இமையவர்[illegible]தேவியென்றுன்னைத்தரிசித்தேனே.
தேன்வழிந்தொழுகுகூந்தல் திருமுகம்பதித்தமுத்து
கானகக்கரும்புகைகள்கனிக்கொவ்வையிதழொக்கும்
மானமரைபொதிந்தமேனி மரகதவடிவந்தாயுன்
நாமமோகயற்கண்மீனாள் நாயடியேனைக்காரும்.

விருத்தம்.

நாயடியேனைக்கா[illegible]நம் [illegible]யகியெனவேவீரன்
தாயகமாகப்போ[illegible] தாளிணைபணியக்கண்டு
மாயனுக்கிளையதா[illegible] மனமதுகிருபைகூர்ந்து
பேயுடனுடியோடு [illegible]சன்னமாகினளே
பிரசன்னமாகிவந்து போற்[illegible]செய்தெதிரில்நிற்கும்
துரைமுத்துவீரன்றன்னைச் சுந்தரிக[illegible]லைப்பா[illegible]து
கிரைநவமணியேயெந்தன் செல்வனேஉனக்கி[illegible]போது
குறையொன்றுமில்லையெந்தன் குவலயத்தெ[illegible]வநீயே.
எந்தனையத்தின்கப்ப மிருந்திடும்பதியில்லைமந்தா
முந்தினப்பூசைமுதலுனக்களிப்[illegible]னென்று
சிந்தையுமகிழ்ந்துவாலை தேவிமீனம்பா[illegible]சால்ல
சந்தோஷத்துடனேவீரன்தாண்டவமாடினனே.

மதுரைவீரநாடகம்.

வெண்பா.

ஆடினான்கூத்துகளை அம்மனுடசன்னதிமுன்
பாடினான்தோத்திரப் பதிகமதை-நாடிநான்
சித்தமுடன்சற்சித் திருமலைநாய்க்காவெனக்கு
உத்திரவுதாருஉனை

வசனம்.

அகோவாருமையா திருமலைநாய்க்கரே உம்முடைய அனுக்கிரகத்தினாலே செகதாம்பாளுடைய பாதாரவிந்தஞ்சேரஎனக்கு உத்தரவு கொடுமையா திருமலைநாய்க்கரே.

வெண்பா.

உத்தரவுகேழ்க்க உலகாள்திருமலையன்
சித்தங்கலங்கித் திகைத்துரைப்பான்-முத்தையனே
திருவாய்க்குநீருரைத்துச் சித்தம்நிலைகொண்டபின்பு
மறுவாக்குஏதுன் மனது.

வசனம்.

அகோவாருந்தம்பிவீரையா நான்சொல்லியவார்த்தையைக்கேளாமல் நீஇப்போது ஏரேமனதாய் செகதாம்பாளுடைய திருவடிசேரவேணுமென்று சித்தமாயிருக்கிற உனக்கு நான்மறுவாக்குஎன்னசொல்லப்போகிறேன் உன்னுடையமனதுக்குச்சரியானபடி நடந்துக்கொள்ளாய் தம்பிவீரையனே

விருத்தம்,

மனதெனச்சொல்லக்கேட்டு மட்டிவில்லடங்காவீரன்
தனதுடமடியில்வைத்த சங்கிராயுதமெடுத்து
அனைமெனுமதுரைமுக்கண் ஆச்சிசன்னதிமுன்தோன்றிச்
கலிமனக்கருள்வாயென்று காளைவீரையன்மாய்ந்தானே.
பார்த்தனன்கத்திமீதில் பார்வதிக்கபயமென்று
சாய்ந்தனனுடம்வேறு தலைவேறதாகச்சென்னி
சேர்ந்ததுசெகதாம்பாளின் திருப்பாதத்தடியிலம்மை
வந்திப்பிருகைகாலு மெடுத்தனன்முடியைத்தானே
முடிதனையெடுத்தமீனாள் பத்தமிட்டெந்தன்வாசல்
கடினசேவகநாய்க்கபக்கலபெலிபீடந்தன்னில்
நெடியனுளிருந்துபூசை நைவேத்தியமுதலிற்கொண்டு
படிமிசைவாழ்வாயென்று பழிக்கஞ்சிவரமீய்ந்தாளே
வர்மதுகொடுத்தவீர பராவுபன்சென்னிதன்னை
அந்தவள்த்தம்மைதன்னிடையைக்கியஞ்செய்துக்கொண்டாள்
உடம்மெனுமுடலைநாய்க்கர் உவந்துமேயெடுத்துவந்து
தாமுடன்கம்பமோட்டில சமாதிதான்செய்திட்டானே

[illegible]ரணிமதுரைநாட்டில் தீரனுஞ்சமாதிசேர்ந்தான்
தாரணியாளுமன்னன் தன்னரண்மனைக்கிச்சென்றான்
வாரணிமதுரைமீனாள் வாங்கியப்படிமுன்பூசை
நேரமாய்நாலுகாலம் நித்தியமும்நடந்ததாமே

நித்தியம்பூவுந்தண்ணீர் நைவேத்தியம்பட்டைசாதம்
பத்துநாள்வரையிற்கொண்டு பசிமிகுத்திரவில்வீரன்
கத்தியேநடுச்சாமத்தில் காட்டினைநோக்கிச்சென்று
குத்தியேமாட்டைக்கொன்று குடல்தனையெடுத்திட்டானே

குடல்தனைமாலைபோட்டுக் குலை[illegible]தவாயில்கௌவி
[illegible]டவுடன்மாமிசத்தை யறுத்துகாவடியாய்க்கட்டித்
[illegible]டமுடன்தோளில்வைத்துத் திரோகத்திலுதிரம்பூசி
[illegible]முகம்நோக்கிக்கோட்டை வந்துமேபுகுந்திட்டானே.

[illegible]துமேபுகுதக்கண்டு மதுரையிலுள்ளபேய்கள்
குந்துகால்முனிகளெல்லாங் குலைவையிட்டலரியோட
மந்திரம்பில்லிக்கெல்லாம் மட்டினிலடங்காவீரன்
சிந்தையாங்காரத்தோடு தேவிசன்னதிமுன்வந்தான்

சன்னதிமுன்னால்வந்த தனயனைக்கண்டுமீனாள்
என்னடா துஷ்டாவென்று எழுந்தவள்கதவைமூடி
இன்னவேசொல்லாயுந்தன் காரியமெனவேவீரன்
இன்னமும்பசிபொறுத்து இருந்திடேனம்மாவென்றான்

பொருந்திடேனென்றுசொன்ன புத்திரன்வார்த்தைகேட்டு
திருத்தமாய்நாய்க்கனுக்குத் தேவிவுத்தரவுசெய்து
கருத்துடனமதுகம்பங் காத்திடும்வீரனுக்கு
அறுத்துமேஆடுகோழி அசல்பூசைபோடுமென்றாள்

உத்திரவானபின்பு உறுதியாய்நாய்க்கரப்போ
மெத்தவேராவும்பூசை விரையன்தனக்குமீந்து
[illegible]ந்தமுந்தொழுதுபோற்[illegible]யாய்நடக்கும்போது
சுத்தவீரையனுந்தெற்[illegible] கடலைமாடனுமானு[illegible]

தெக்ஷிணதேசமெல்லாந் திறமுடன்பூசைபெற்று
[illegible]ச்சமில்லாமல்நாய்க்கன் அ[illegible]னைச்செ[illegible]கைச்செய்து
பக்ஷமாய்பொம்மிவெள்ளை பக்கத்தில்சேர்ந்திருக்கக்
[illegible]க்சணிவுமையாள்புத்திரன் காவேரி[illegible]ட்டில்வந்தான்

காவேரியக்காளம்மன் கரையதுஇலங்கிவாழும்
மாவேந்தர்பணியும்நல்ல ம[illegible]ரு[illegible]னகோட்டை
சீர்வேந்தர்புகழயின்பஞ் செழி[illegible]ம்பூக்கடைக்குள்
கோவேறிக்கொண்டுசுவாமி கொலுவதாயிருந்திட்டாரே

பூக்கடைத்தங்கயென்று புகழ்ந்துமேவணங்கினேரைக்
காக்கவேதெய்வமாகிக் கையினிற்பொருளுந்தந்து
ஓர்க்கவேமிகுநாளைக்கு இருப்பதாய்க்குடிகள்சேர்த்து
மேர்க்குநற்றிருத்தாண்தோணி மேவியகடந்தாக்சாமி
கருத்துடன்றிருத்தான்தோணிக் கரைபழகையருக்கும்
உரித்துள்ளபிள்ளையாகி உதிரமாமாலேபூண்டு
பெருத்தமாமலேக்கரும்பும் பெருவளையாளத்தோனும்
மருக்கொழுந்தணிந்தமேனி மங்கையாள்துர்க்கைதேவி
இத்தனைபேருங்கூடி யிருக்கைதயனுலயத்தில்
மெத்தவேபுகனுமிபெற்ற விதமுள்ளமதுரைவீரன்
உற்றதோர்நாடகத்தை உறுதியாய்ப்பாடிவைத்த
பத்தனுக்குலாதன்குட்டி பங்கினிலிருக்கின்றுரே.

மங்களம்

மங்களமங்களம் - நித்யசுப - மங்களமங்களம்.

வெங்கையமுகனுக்கும் வேலுடைகடவுட்கும்
பொங்குதமிழக்கலே பூரணவாணிக்கும்
பூமியந்திருமேனி ... நேமியாகியவாமிக்குஞ்செய (மங்க)
கங்கைதனைத்தரித்த கடவுள்சொக்கேசர்க்கும்
மங்கைதேன்குழல்வாழ் மதுரைமீனுட்சிக்கும்
வாமதேவர்கா மோனமுனிவர்க
ளானதபோதனர் ஞானிகட்குஞ்செயு (மங்க)
வீராதிவீரர்கள் மிகுமுத்துசாமிக்குங்
காராருங்குழல்பொம்மி கன்னிவெள்ளையருக்கும்
கச்சித்திருமலே நாய்க்கனுடன்புகழ்
மெச்சுமபுலவர்கட் கனயஞ்செய (மங்க)
தொல்லுலகில்மீனுட்சி ... தாவர்த்திக்கும்
நல்லவிசுவணதா ... யகுட்டிக்கும்
இந்நாடகந்தினை யாடிப்பாடவே
கூடும்பாலகர் நீடுவாழ்கவே (மங்க)

மதுரை[வீ]ரநாடகம்

முற்றுப்பெற்றது.

116690
3259